Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 14 ஞாயிற்றுக்கிழமை (30.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

ரூ. 6 கோடியே 20 இலட்சம் பெறுமதியான

## 5½ கிலோ தங்கத்துடன் அனலைதீவில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக பெருந்தொகை தங்கத்தை கடத்த முயன்ற இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஆறு கோடியே 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான 5 கிலோ 15

இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழரா?

## விக்னேஸ்வரன் வாயை அடக்காவிழல் அவரை ஓட ஓட விரட்டுவோம்



### அமைச்சர் விமல் வீரவன்ஸ வீராப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் எம்.பி தனது வாயை உடனடியாக அடக்கி வாசிக்க வேண்டும். இல்லையேல் பாராளுமன்றத் 15

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி

# வடக்கு - கிழக்கில் இன்று மாபெரும் போராட்டம்

### அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் வாழும் தேசங்களில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டறியவும் அவர்களுக்கான நீதியை வேண்டியும் அவர்களது உறவுகளால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்போராட்டம் முன்னெடுக்கப்பட 04

தவறான முடிவெடுத்த

## ஆசிரியர் உயிரிழப்பு

வடமராட்சியில் சம்பவம்

(கரணவாய்)

கவிதை எழுதி வைத்து விட்டு தவறான முடிவெடுத்து ஆசிரியர் 15

சென்னையிலுள்ள

## இலங்கைத் தூதரகம் நேற்று முற்றுகை



(சென்னை)

அனைத்துலக காணாமல் ஆக்கப்பட் 15

தமிழ் அரசியல் கைதிகளின்

## விடுதலையை வலியுறுத்தி யாழில் நேற்று கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் 15

## காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்கும் போரில் ஒவ்வொரு தமிழரும் குரல் கொடுங்கள்



### சண் மாஸ்டர் அறைகூவல்

(சென்னை)

காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்கும் போரில ஒவ்வொரு தமிழரும் ரவுல் வாலன்பேக் (Raoul Wallenberg) போன்று குரல் 15

கட்சிக்குள் ஏற்பட்ட

## பின்னடைவை ஆராய குழு நியமிக்கப்படும்

மாவை அறிவிப்பு

(வவுனியா)

தேர்தல் காலங்களிலும் அதற்கு பின்னரும் இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்களில் கட்சிக் 15

மகளின் முறைப்பாட்டால்

## பெற்றோர் கைது

வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமத்தில் மகளை துன்புறுத்திய குற்றச்சாட்டில் பெற்றோரை பொலி 15

கிளிநொச்சியில் விபத்து

## விசேட அதிரடிப்படை சிப்பாய் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதி பிரதான வீதியின் 155ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் 15

## மரம் சரிந்து விழுந்ததில் வீதியால் சென்ற இருவர் பலி

முல்லைத்தீவில் பரிதாபம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் வீதியால் உந்துருளியில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது மரம் சரிந்து விழுந்ததில் மூன்று பிள்ளைகளின் தந்தை மற்றும் ஒரு இளைஞனும் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருகையில், 15

## சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றியே 19ஆவது அரசியலமைப்பு நீக்கப்படும்

### எஸ்.பி.திசாநாயக்க விடாப்பிடி

(கொழும்பு)

பிரபாகரனின் கொள்கைகளை பின்பற்றும் விக்னேஸ்வரன் போன்றவர்களின் செயற்பாடு பாதகமாகவே முடியும் என்று கூறிய அதேவேளை சிறுபான்மை கட்சிகளின் ஒத்துழைப்பு இன்றியே 19ஆவது அரசியல் அமைப்பை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் 15

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(3737)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## கோழி விற்பனை நிலையம்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல் மற்றும் (பேரண்ட்ஸ்) சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் காலை 7 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**

19, முருகேசர் லேன், நல்லூர் (3726)



## காணி விற்பனைக்கு

அச்சுவேலி - வசாவிளான் பிரதான வீதிக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவையில்லை**

(3727)

தொடர்பு

**077 160 7635**


## பேராசிரியரும் உபவேந்தருமான சிறிசற்குணராஜாவுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றார் M.T.S




பேராசிரியர் சிறிசற்குணராஜா உபவேந்தராக பதவிப் பிரமாணம் செய்த பின்பு நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார் திரு. M.T.S இராமச்சந்திரன். இவர் இந்து, பௌத்த கலாசார பேரவை பொதுச் செயலாளரும் ஜேர்மனி நாட்டில் குடிவரவு குடியகல்வு சட்ட ஆலோசகரும் ஆவார். இந்தத் தடவை அரசியல்வாதிகளின் பணிந்துரைகள் இல்லாமல் நேர்மையான முறையில் எமது மாண்புமிகு ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ வடக்கு பல்கலைக்கழக உபவேந்தரை நேர்மையான முறையில் தெரிவு செய்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(C-183)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



செல்வி

**கலாவல்லி செல்வமாணிக்கம்**

[ Spl.trained in music
B.A, Dip. in.Ed., M.A (Cultural Studies) ]


" வறுத்தலைவிளான் தந்த
செல்வமாணிக்கம் செல்வி
கலாவல்லிக்கு சீர்பெருகும்
மணிவிழா நன்நாளில் இணுவில்
இந்துவின் நல்வாழ்த்துக்கள் "

| | |
|---|---|
| 23.03.1990 - 31.12.1993 | யா/பலாலி வடக்கு அ.த.க. பாடசாலை. |
| 01.01.1994 - 30.04.1994 | யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை. |
| 01.05.1994 - 13.02.1997 | யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம். |
| 14.02.1997 - 01.05.2011 | யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம். |
| 02.05.2011 - 30.08.2020 (இன்று வரை) | யா/இணுவில் இந்துக் கல்லூரி. |

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(3733)

## நன்றி நவில்கின்றோம்



நேற்று (29.08.2020) சனிக்கிழமை எமது பண்ணாகம் இல்லத்தில் நடைபெற்ற 60 வது திருமண நாள் வைபவத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு எமக்கு நேரில் வந்து வாழ்த்துத் தெரிவித்தோருக்கும் உள்ளூர், வெளியூரிலிருந்து தொலைபேசி வழியாக வாழ்த்துகள் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**60 ஆவது திருமண ஆண்டை நிறைவு செய்த**
**திரு. திருமதி தர்மலிங்கம் அன்னபூபதி**

(3742)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று

யாழ்ப்பாணம்)

**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று வடக்கு-கிழக்கில் 8 மாவட்டங்களை உள்ளடக்கி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.**

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் ஒரேநேரத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கி யாழிலும் அதேபான்று திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய 3 மாவட்டங்களை உள்ளடக்கி மட்டக்களப்பிலும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் வடக்கு-கிழக்கில் நினைவுகூரப்பட்டுவரும் நிலையில் இம்முறையும் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணியாக உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழில் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ள பேரணி யாழ். மாவட்டச் செயலகத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான மகஜர் கையளிப்புடன் நிறைவுபெறும்.

அதேபோல் மட்டக்களப்பில் கல்லடியில் ஆரம்பிக்கப்படவுள்ள பேரணி காந்திபூங்கா வரை சென்று ஐக்கிய நாடுகள் சபைக்கான மகஜர் கையளிப்புடன் நிறைவு பெறும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்க்கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி மழை, வெயில் பாராது போராடிய 72 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். தொடர்ச்சியான போராட்டங்களின் மூலமே நாம் எமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும். எமது கோரிக்கைகளை சர்வதேசத்திற்கு அழுத்திச் சொல்வதற்கு நாம் பலமாக அணிதிரள வேண்டும்.

சாதி, மதம், கட்சி, பேதமற்று ஒன்றிணைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத் தரும் வகையில் இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (2-8)

# சட்டவிவகாரமாக நோக்காது அரசியல் பிரச்சினையாக அணுகுவது அவசியம்

## காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை



(கொழும்பு)

நாடொன்றின் வலுவான ஜனநாயகக் கட்டமைப்பு முறையொன்றில் எவ்வாறு பெருமளவானோர் காணாமல்போக முடியும் என்ற கேள்வியை நாம் எழுப்புவது அவசியமாகும்.

அதேவேளை வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினையை சட்டவிவகாரமாக நோக்காது, அரசியல் பிரச்சினையொன்றாக அணுகுவது அவசியமாகும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

சர்வதேச காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் மாபெரும் அமைதிவழி கவனயீர்ப்புப் பேரணியொன்று இன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 2009 ஆம் ஆண்டில் போர் முடிவிற்கு வந்தபோது படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி அவர்களது உறவினர்கள் பல வருடகாலமாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும் இப்பிரச்சினைக்கு இதுவரையில் இறுதித்தீர்வொன்று வழங்கப்படாத நிலையில் இன்று நடைபெறும் மாபெரும் அமைதிப்பேரணியைத் தொடர்ந்து, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளது.

அந்த மகஜரின் ஊடாகக் காணாமல்போனோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களை நீர்த்துப்போகச்செய்யும் வகையிலான செயற்பாடுகளே சர்வதேச சமூகத்தினாலும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது என்பதை சுட்டிக்காட்டும் அதேவேளை, இனியேனும் தமது போராட்டங்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுப்பதுடன் இவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்பதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி தெரிவித்தார்.

"போர்க்குற்றங்களே நடைபெறவில்லை என்றும் எவரும் காணாமல்போகவில்லை என்றும் கூறுகின்ற அரசாங்கம் எமக்கான தீர்வை வழங்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இப்போதும் எமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா? என்ற ஐயுறவுடனேயே நாங்கள் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

இந்நிலையில் தற்போது எமக்கிருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை சர்வதேசம் மாத்திரமே" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். இது இவ்வாறிருக்க காணா மல்போனோர் என்று எவருமில்லை என்றும் அவர்களில் சிலர் இறந்திருக்கலாம். சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம் என்றும் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

இவ்விடயத்தில் அரசாங்கத்தின் இறுதி நிலைப்பாடு இதுவா என்று அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரமேஷ் பத்திரணவிடம் வினவிய போது, அவர் "ஆம்" என்று பதிலளித்தார். "தமது உறவுகள் காணாமல்போயிருப்பதாகப் போராடுபவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கும் காணாமல் போனவர்களுக்கான மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

அவ்வாறெனில் காணாமல் போனோர் பற்றிய அலுவலம் தொடர்ந்தும் செயற்படுவதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா? என்று வினவியபோது, அது குறித்து இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்றார்.

நாடொன்றின் வலுவான ஜனநாயகக் கட்டமைப்பு முறையொன்றில் எவ்வாறு பெருமளவானோர் காணாமல்போக முடியும்? என்ற கேள்வியை நாம் எழுப்புவது அவசியமாகும். அதேவேளை வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினையைச் சட்டவிவகாரமாக நோக்காது, அரசியல் பிரச்சினையொன்றாக அணுகுவது அவசியமாகும் என்று இவ்விவகாரம் தொடர்பில் ஆராய்ந்துவரும் சிவில் சமூக செயற்பாட்டாளரான சுலனி கொடிக்கார கூறியிருப்பதாகச் சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (2-7)

# தகுதியிருந்தும் உள்வாங்கப்படாதவர்களை இணைக்க நடவடிக்கை எடுங்கள்

## பட்டதாரிகள் குறித்து செந்தில் தொண்டமான்

(பதுளை)

அரசாங்கத்தால் பதுளை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான நியமனங்களில், தகுதி இருந்தும் உள்ள டக்கப்படாதவர்கள் தொடர்பில் பதுளை மாவட்ட அமைச்சர்கள் மீள் பரிசீலனை செய்து, அவ்வாறு உள்ளடக்கப்படாத வர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற வர்கள் வேலை வாய்ப்புக்காக விணணப் பிக்க முடியும் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, பல்கலைகக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் முதல் பட்டம் ஒன்று அல்லது அதற்குச் சமனான அல்லது மாற்றுத் தகைமையாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் டிப்ளோமா பட்ட தாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்களும் அரசாங்க தொழில் வாய்ப்புக்காக விண் ணப்பித்திருந்தார்கள். ஆன போதிலும் அவர்கள் அனைவரும் இதில் உள்ளடக் கப்படவில்லை.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கென இதுவரை அரசாங்க தொழில் வாய்ப்புக்கான நேர் முகப் பரீட்சை பிரத்தியேகமாக இடம்பெற வில்லை. மாறாக பொதுவாக விண்ணப் பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன.

அவ்வாறு இருக்கும் பட்சத்தில் ஏனைய பட்டதாரிகள் மாற்று வழியின்றி உள்ளனர்.

ஊவா மாகாணத்தில் ஆசிரிய உத வியாளர்களாக இயங்கி வந்தவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட் டப்படிப்பு முடித்தவுடன் அவர்களுக்கு ஆசி ரியர் நியமனங்கள் வழங்கப்பட் டுள்ளன.

அவ்வாறானவர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்பு வழங்குவதில் எந்த வித தடையும் இல்லை என்றே நான் கருது கிறேன்.

பதுளையில் எதிர்க்கட்சியிலிருந்து தெரிவான தமிழ் பிரதிநிதிகளால் பத்திரி கையில் அறிக்கையும் பாராளுமன் றத்தில் குரலும் மாத்திரமே எழுப்ப முடியும்.



அவர்களுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியாது.

ஆதலால் பதுளை மாவட்ட அமை ச்சர்கள் இந்த விடயத்தை மறுபரிசீ லனை செய்து நியமனங்கள் பெற்றுத் தரும் பட்சத்தில் பட்டதாரிகளின் பிரச்சினை களுக்கு தீர்வினை வழங்க முடியும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## வடக்கு - கிழக்கில்...

வுள்ளதுடன், குறித்த போராட்டங் களுக்கு ஆதரவு தெரிவித்து புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளிலும் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிய போராட் டம் அவர்களது உறவுகளால் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுக்கப் பட்டு வருகிறது. இலங்கை அரசு மற்றும் சர்வதேசத்திடம் நீதி கோரி இந்த போராட் டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ்.மாவட்டத்தில் காலை 10 ம்ணிக்கு யாழ். பிரதான பேருந்து நிலைய முன்றலில் ஆரம்பிக்கும் போராட்டம் பேரணியாக யாழ். மாவட்டச் செயலகம் வரை செல்லவுள்ளது. கிழக்கு மாகாணத் தில் காலை 10 மணிக்கு கல்லடிப் பால த்தில் ஆரம்பிக்கும் போராட்டம் பேரணி யாக காந்தி பூங்கா வரை செல்லவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் முன்னெடுத்துள்ளது.

இப் போராட்டத்தில் அனைத்து உறவு களையும் கலந்து கொண்டு தமது போராட் டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவு கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை நல்லூர் சங்கிலியன் பூங்கா முன்றலிலும் ஒரு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாவும் அறிய முடிகிறது. (ஞா-9)

## சிறுபான்மைக் கட்...


வித்த அவர், 19 ஆம் திருத்தத்தின் ஊடாக நாட்டை பிரச்சினைக்குள்ளாக்கினார்கள் என்பதை முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவே கூறியுள்ளார். சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை வெறுமனே அரசியல் ரீதியான ஆணைக்குழுக்கள் மாத்திரமே ஆகும். எனவே அதனை ஒழித்து 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்படும்.

அதற்காகவே மக்கள் பெரும்பான்மை பலத்தை அரசாங்கத்திற்கு வழங்கியுள் ளார்கள்.அதேபோல் புதிய தேர்தல் முறை யொன்றை மக்கள் கோரியுள்ளனர்.ஆகவே ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பர்.

இதற்கு சிறுபான்மை கட்சிகள் எதிர் ப்பை தெரிவிக்கலாம். சிறுபான்மை கட்சிகளே கடந்த மாகாண சபை தேர்தல் முறையையும் பிரச்சினையாக்கியுள்ளனர். ஆனபடியால் சிறுபான்மைக் கட்சிகள் அத ற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்தும் கூச்சலிட்டும் எதிர்ப்பை தெரிவிக்கலாம். ஆனால் நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

வக்னேஸ்வரன் இந்து மற்றும் தமிழை உடுத்திக்கொண்டுள்ள மனிதன். பிரபா கரனின் கொள்கைகளை பின்பற்றும் அவ்வாறானவர்களின் செயற்பாடு பாத கமாகவே முடியும். பாராளுமன்றத்தில் பிரி வினைவாதம் என்ற விசத்தை பரப்பி மீண்டும் தனிநாடு கோரிக்கையை வலுப்படுத்த அவர் முனைகிறார். அவர் மீண்டும் ஒரு யுத்தத்திற்கே வழி ஏற்படுத்துகின்றார். அவரின் கருத் துப்படி சிங்கள அரசாங்கத்திடம் இரு ந்து சம்பளம் பெறும் அவரிடம் இந்த பிழையை செய்ய வேணடாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ஞா)

## மரண அறிவித்தல்



### செல்லன் சிதம்பரம்

தோற்றம் 28.02.1944 மறைவு 29.08.2020

*சர்வோதய வீதி, ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சிதம்பரம் நேற்று (29.08.2020) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னு - சீனியர் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சர்வேஸ்வரியின் அன்புத் தாயாரும் விஜயகுமாரின் மாமியாரும் ராஜராஜன் (வர்ஷன் எலக்ரோனிக்), ஜர்த்திகா, ஜதீபன் ஆகியோரின் பேர்த்தியும் அக்சீரா, அஸ்மிரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.* (3743)

சர்வோதய வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தொ.இல: 077 711 2122

தகவல்: ராஜராஜன்,ஜர்த்திகா குடும்பத்தினர்.


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச தொழில் புரியும் 1989ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (3740)

தொடர்பு: 076 997 1880

## தேவை

போட்டோக் கொப்பி வேலை தெரிந்த அல்லது பழக விரும்பும் பெண் வேலையாட்கள் தேவை. (மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது) (3739)

தொடர்பு: 0772231134, 0773144612

## விற்பனைக்கு

பலாலி வீதி, விவசாயக் கல்லூரிக்கு முன்பாக கலைவாணி மில் ஒழுங்கையில் 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (3736)

தொடர்பு:- 076 544 8159

(Viber) +447958046331

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா சிறப்பிதழ் 30.08.2020

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்.



நல்லவர் வாழ்வு உன் கையில்

தேரேறி ஊர்வலம் போகும் தேவியாரே பாரும்
தேவரெல்லாம் மலர் மாரி பொழிய
வான்மீது வாரும்
வாய்மணக்கத் தமிழீசை பாடி
வந்துனை நான் வணங்கி
தேனதும பூமலர் பாதம்
தொழுதிடல் வேண்டும்
துணைதந்து துயரோட
தினமுன்னருள் மழை தாரும்
நாளுமிங்கே நன்னெறி தழைக்க
நல்லவர் வாழ்வு உன்கையிலிருக்கு
நாற்றிசையும் வீற்றிருக்கும்
துர்க்காதேவியே போற்றி போற்றி


S.M.G.TIMBER DEPOT
செந்தூர் மகோகனி மரக்காலை
கட்டட வேலைகளுக்குத் தேவையான அனைத்து பலகைகள், தீராந்திகள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
TP:- 077 021 3431
070 331 3431
கே.கே.எஸ். வீதி, றொட்டியாலடி சுன்னாகம். கிளை -தெல்லிப்பளை.

ஸ்ரீ துர்க்கா மல்ரி
Sri Thurkka Multi Center
அழகு சாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், மோட்டோ வெஸ்ட், அன்பளிப்பு பொருட்கள், குளிர்பான வகைகள், பிஸ்கட், பாலமா வகைகள், Sim Card, Reload
K.K.S Road (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி முன்பாக)
☎-077 362 8810

ஆருத்ரா ஜோதிட ஆய்வகம்
ஜோதிட ஆலோசகர்: சு. ராஜ்குமார்
077 632 9265 / 075 048 3534
ஜாதகம் பார்க்க, ஜாதகம் கணிக்க, திருமணப் பொருத்தம், சுபமுகூர்த்த நாள், பாரட் ஆருடம், எண்கணிதம் மற்றும் அனைத்து விதமான ஜோதிட ஆலோசனைகளுக்கும்
கம்பனை, தெல்லிப்பளை
கிழக்கு, துர்க்காபுரம்

அனோஜன் ரேடர்ஸ்
சீமெந்து
பெயின்ற்
கட்டிடப்பொருட்கள்
விற்பனையாளர்
☎ - 077 660 6877
✆ - 021 320 5132
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.

Ajanthan Saranja
Proprietor
LUXSAN PHARMACY & GROCERY
Medicines/ Cosmetics/ Beverages/ Mother& Baby Needs
76, 78, K.K.S.Road, Chunnakam
021 224 3565

சசிகா லேனர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
Reg No.DS882
இல.281C, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
K.K.S வீதி, மல்லாகம்.
☎ - 077 722 6247
☎ 070 301 5004
021 222 8004

New Rajan salon
ராஜன் சலூன்
K.K.S.Rood, Tellippalai.

Thurkka Multi Centre
T.P. 0772143763
Fax: 021 2243053
K.K.S. Road, Mallakam Junction.
E.mail: thurkka.mc@gmail.com

S.Thirumaran
Chairman
Jaffna Heritage BUNGALOW
573, K.K.S. Road, Tellippalai, Jaffna , Sri Lanka
Phone: 0094-21-2225999
Mobile: 0094-77-3549757
Mail: jaffnaheritagebunglow@gmail.com
Website: www.jhbunglow.com
Facebook: jaffna heritage bunglow

சந்நிதியான் பிறிண்டேர்ஸ்
- Photo Copy
- Tamil, English
- Typing
- Colour Printing
- Printing
- Laminating
- Scanning
- Banner Desing
- Offset printing
- Dero photo frame
- School Stationery
- Book Binding
- Recharge card and Reload
கே.கே.எஸ்.வீதி மல்லாகம்.
021 2243614 / 0773605009
0769784565
Sannithyan20@gmail.com

அம்பிகை நெச்சுரல் பிளவர்
அனைத்து மங்கள நிகழ்வுகளுக்குமான பூமாலைகள், மல்லிகை பூச்சரம், கோயில் சாத்துப்படி, அலங்காரச் கைச்செண்டு, பூமணவறைகள் என்பன மிகச் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
கே.கே.எஸ் வீதி, துர்க்காபுரம், தெல்லிப்பளை.
T.P : 071 936 0694
076 736 0694

விஷ்வஜா மல்ரி சென்ரர்
VISHVAYA MULTI CENTRE
CN கம்பி கல், மண் மலசலகூட சீட் அம்ப்ராடெக் சிமெண்ட
காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.
K.K.S.Road, Tellippalai
077 6330182


# தேடப்பட்டு வந்த பிரதான துப்பாக்கிதாரி சுட்டுக்கொல்லப்பட்டார்

(கொழும்பு)

பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற பிரதான துப்பாக்கிதாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நவகமுவ பகுதியில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு குற்றச் சாட்டுக்களில் ஈடுபட்ட நிலையில், தேடப்பட்டு வந்த குறித்த நபர் நவகமுவ பகுதியில் 10 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இ தே வே ளை , கொலை, கொள்ளை, கப்பம் பெறல் உள் ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவரான சமயங் என்பவரின் பிரதான துப்பாக்கிதாரியான இந்ரா என அறி யப்படும் வஜிரகுமார என்பவரே இவ்வாறு கைது செய்யப் பட்டிருந்தார்.

குறித்த நபர் பொலி ஸா ரின் பிடியில் இருந்து தப் பிச்செல்ல முயற்சித்த போது நவகமுவ பகுதியில் வைத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். (ஜ-4)

## குணமடைவு 2849

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 7 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பினர்.

இந்நிலையில் தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 849ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 989 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதுடன் இன்னும் 140 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(ஜ-4)

# திடீர் தீப்பரவல்

(கொழும்பு)

தங்கொட்டுவ -கலுவச்சி முல்ல பகுதியில் ஏற்பட்ட திடீர் தீப்பரவலால் மின் உபகரண பழுது பார்க்கும் நிலையமொன்றும் வீடொன்றும் பாரிய சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கொட்டுவ பொலிஸ் பிரி வுக்குட்பட்ட குருநாகல் நீர் கொழும்பு பிரதான வீதியில் கலுவச்சிமுல்ல பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் மற்றும் பிரதேச வாசிகளால் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மின் கசிவு தீப்பரவலுக்கு காரணமாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதன்போது உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# சந்நிதி முருகன் பக்தர்களுக்காக தொண்டைமானாறு பாலம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு ஊடாக சந்நிதி ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி தொண்டைமானாறு பாலம் ஊடான போக்குவரத்து நேற்று முன்தினம் மாலை முதல் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்கு பிரதேசசபை தெரிவித்துள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆட்சி எல்லைப்பகுதியில் உள்ள நீரியல் வளத் திணைக்களத்திற்குச் சொந்தமான பாலத்தின் ஊடாக போக்குவரத்திற்காக நீரியல் வளத் திணைக்களத்தின் பொறியியலாளர்களின் ஒத்துழைப்போடு திறக்கப்பட்டது.


இப்பாலத்தினுடான போக்குவரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை வருடாவருடம் வலி.கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது. இம்முறை கொரோனா முன்னெச்சரிக்கை வழிவகைகளுடன் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவிற்கு இணங்க மட்டுப்படுத்தப்பட்டளவிலான பக்தர்களின் எண்ணிக்கை, நேர வரையறைகள், சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளது. குறித்த சபை ஊடாக வாகன தரிப்பிட வசதிகள், ஒளியூட்டல் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை ஆலயத்தினை அடையும் பக்தர்கள் வீடியோ கமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். மக்கள் பாலத்தினூடாகப் பயணிக்கையில் தம்மை அடையாளப்படுத்தி உரிய பதிவுகளுக்கு உட்படுத்தியே ஆலயத்தினை அடைய வேண்டும். பாலப்பகுதியில் கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் வழிநடத்துதலையும் அறிவிப்புக்களையும் முழுமையாகப் பின்பற்றி செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5-8)

# துர்க்காதேவிக்கு இன்று தேர்

(குப்பிழான்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்தப் மஹோற்சவத்தில் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெறும் என ஆலயத் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.



தேர்த் திருவிழாவுக்கான கிரியைகள் அதிகாலை 3 மணியளவில் ஆரம்பமாகுமெனவும் தீர்த்தோற்சவம் ஆவணி ஓண நன்னாளான நாளை திங்கட்கிழமை காலை 8 மணியளவில் "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் நடைபெறும் எனவும் தெரிவித்தார். (5-4-18)

# சாவகச்சேரி பொதுச் சந்தையில் செப்டெம்பர் முதல் உழவர் சந்தை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தையில் உள்ளூர் விவசாயிகளுக்கான உழவர் சந்தை முறைமை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பொதுச்சந்தையில் ஏற்கனவே உழவர் சந்தைக்கு இடம் ஒதுக்கிய போதிலும் அவ்விடத்தினை உழவர் சந்தை என அடையாளப்படுத்தாத காரணத்தாலும் சில வியாபாரிகள் உழவர் சந்தைக்கான இடத்தில் தாம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணத்தாலும் விவசாயிகள் உழவர் சந்தையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே உள்ளூர் விவசாயிகளின் நலன் கருதி நகரசபை உறுப்பினர்கள் உழவர் சந்தைக்கான இடத்தில் உழவர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட நடவடிக்கைஎடுக்க வேண்டும் என தவிசாளரிடம் கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக உழவர்கள் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நகரசபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக நகரசபை தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச்சந்தையில் உழவர் சந்தைக்கென ஒதுக்கிய இடத்தில் விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொண்டு வந்து சந்தைப்படுத்த முடியும்.

உழவர் சந்தைக்கான இடத்தை பெயர்ப்பலகை இட்டு அடையாளப்படுத்தவுள்ளோம். எனவே ஏனைய வியாபாரிகள் அவ்விடத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

உழவர் சந்தையில் விவசாயிகள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட சபை உறுப்பினர்கள் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

# யாழ்.போதனாவில் 7 நாட்களில் 851 பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 7 நாட்களில் மாத்திரம் சுமார் 851 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பரிசோதனைகளின் போது 3 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதன்படி கடந்த 22 ஆம் திகதி விமானப் படையின் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் கடந்த 24 ஆம் திகதி இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் விமானப் படையின் வெள்ளாங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் நேற்று முன்தினம் மாத்திரம் 109 பேருக்கான பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (5-8)

# இரதோற்சவம் நாளை மறுதினம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பரத்தைப் புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம் மஹோற்சவத்தில் நாளை மறுதினம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 2 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)

# அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் வவுனியா அரசாங்க அதிபரும் வடக்கு – கிழக்கு மாகாண பிரதிப் பிரதமசெயலாளருமான அமரர் சி.த.மார்க்கண்டுவின் அஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் ஓய்வு நிலை சமூக சேவை அமைச்சின் செயலாளரும் அரச அதிபருமாகிய திருமதி எமில்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.(5-4)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புலவர் மணி வை.க.சிற்றம்பலம் எழுதிய "நல்லூர்க்கலம்பகம்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்து சமயப்பேரவையில் இந்துசமய பேரவையின் செயலாளர் ஈசான சிவம் ஸ்ரீ.சிவ.சக்திகிரீவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-5)

# குருவிக்காட்டில் சிரமதானம்





சரசாலை - குருவிக்காட்டு பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையினர் சிரமதானப் பணியினை முன்னெடுத்திருந்தனர். சமுதாயக் காடான குருவிக்காட்டு பகுதியைப் பாதுகாக்கும் முகமாக பிரதேச சபையினரால் இச் சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குருவிக்காட்டு சூழலில் காணப்பட்ட பெருமளவான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் அகற்றப்பட்டன. சிரமதான நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், பிரதேச சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சுதோகுமார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

சிரமதான நிகழ்விற்கான அனுசரணையை சரசாலை வடக்கு சனசமூக நிலையத்தினர் வழங்கினர். (4-5-30)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட /நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், அபான்ஸ் ஆட்டோக்கள், உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரப் பெட்டிகள், கையுழவு இயந்திரங்கள், பட்டா வாகனங்கள் என்பனவற்றின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் ஆர்.குகதாசன் அறிவித்துள்ளார். (5)

# யாசகர் ஒருவர் கொலை

(அநுராதபுரம்)

அநுராதபுரம், மாகாண பொறியியலாளர் அலுவலகத்திற்கு அருகில் நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்த பிரதேசத்திலுள்ள யாசகர் ஒருவரே இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை நீண்ட தூரம் சென்றமையினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ஜ-4)




## அரச அனுமதி பெற்ற எம்.ஜி.ஆர்.திருமண சேவை

எம்மிடம் சகல இனத்தவர்களுடைய சாதகங்கள் உண்டு. சாதகம் தந்தவர்கள் அதற்குப் பொருத்தமான சாதகங்களைக் பெற்றுக் கொள்ளலாம்.

(3710)

தொடர்பு:-
வே.புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை.
077 642 1255



உ

## ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
## அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
## கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



### கேதார கௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் சார்வரி வருஷம் ஐப்பசி திங்கள் 9 ஆம் நாள் (25.10.2020) ஞாயிற்றுக்கிழமை முதல் கௌரி விரதம் ஆரம்பமாகவிருப்பதனால், விரதகாரர்கள், தங்கள் பெயர், நட்சத்திரங்களை 01.09.2020 செவ்வாய்க்கிழமை முதல் பதிவு செய்து கொள்ளலாமென்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேவஸ்தான, ஆதீன கர்த்தாக்கள். (3717)



## அகவை 60இன் நிறைவும் பிறந்த தின வாழ்த்தும்

30.08.2020



கலைவாணி அருளால்
இசை ஆட்சிபுரியும்
கலாவல்லி, நம் வகுப்புத்தோழி,
மகாஜன மாதாவின்
செல்வி மோகனச் சிரிப்பரசி
மகிழ்வுடனே அரசோச்சிச்
சிறக்கின்றாள் இன்று!
பணி ஓய்வு காலத்தில்
உடல் நலமும், உளநலமும்
சிறந்தோங்க வாழ்த்துக்கள்!

Best Wishes

### செல்வி.கலாவல்லி செல்வமாணிக்கம்

(Trained Teacher-Music, B.A.(Arts), M.A.(C.S)
இசை ஆசிரியை யா/இணுவில் இந்துக் கல்லூரி)

**வாழ்த்துவோர்:**

1976-1978 கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்கள்

01 திருமதி. தேவகி கணேந்திரன் (ஓய்வுநிலை)
கணித ஆசிரியை, யா/வீமன்காமம் ம.வி. மாவிட்டபுரம்

2.செல்வி பத்மலோஜினி வேலுப்பிள்ளை (ஓய்வுநிலை)
உப அதிபர், விஞ்ஞான ஆசிரியை - யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

3.திரு.மா.லி.பாஸ்கரன் (ஓய்வுநிலை)
இணைப்பாளர், பிராந்திய ஆங்கில ஆதார நிலையம், யாழ்ப்பாணம்.

4.திருமதி.ஜெயபவானி வேல்ராஜா (ஓய்வுநிலை)
பகுதித்தலைவர், விஞ்ஞான ஆசிரியை,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. கோண்டாவில்.

(3707)

தொடர்பு இலக்கம்: செ.கலாவல்லி 0774431894



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

## யாழ். கலாலயா பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங் – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.





- FACIALS (10 வகை), GALVANIC FACIAL, Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- BRIDAL DRESSINGS

(மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.09.2020 திங்கள்**

மேலும் விபரங்களை மாலை 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

(C-173)

Guru



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 42 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BBA, கணக்காய்வுப் பரீட்சகர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்
தொ.இ: B/11124

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ் 10 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சுகாதார பிரிவு
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11126

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 42 ¾ செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11129

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 72 செவ் 8 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: M.B.A., Superindent in Dubai
எதிர்பார்ப்பு: பட்டதாரி வேலை உள்ள பெண்
தொ.இ: B/11130

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: படித்த தகுந்த மணமகன்
தொ.இ: G/11145

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 39 செவ் 3 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MBBS, வைத்தியர்
எதிர்பார்ப்பு: வைத்தியர்
தொ.இ: G/11147

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: செவ் 10 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டயக் கணக்காளர் கல்வி இறுதி ஆண்டு தனியார் உதவிக் கணக்காளர்
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகமுள்ள மணமகன்
தொ.இ: G/11148

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 145 cm
தகைமை/தொழில்: Diploma in Construction Student.
எதிர்பார்ப்பு:. வெளிநாட்டவர் மட்டும்
தொ.இ: G/11152

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தேசநலன் காத்து வாழ்விக்க தெல்லிப்பழையில்

# தேரேறி வரும் துர்க்கையைப் பணிவோம்

### துர்க்கையின் வடிவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாளின் மஹோற்சவ சிறப்பு உற்சவ தேர்த்திருவிழா அற்புதமாக நடைபெறுகின்றது. அன்னை துர்க்கை தேரேறி வருகிறாள். பூலோக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்கு சக்தியின் என்னென்ன பகுதிகள் என்னென்ன பாங்கில் அமைந்திருக்கவேண்டுமென்பதை துர்க்காதேவியின் சொரூபம் நன்கு விளக்குகிறது.

### பிரபஞ்சம் முழுவதும் அவளின் வியாபகம்

பிரபஞ்சம் முழுவதிலும் அவள் வியாபித்திருக்கின்றாள். எனினும் ஆண்டுக்கொரு தடவை அவள் ஹிமாசலத்திலிருந்து பூமியின் சமவெளிக்கு எழுந் தருளுகிறாள் என்பது கோட்பாடு. புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி அவளுடைய வருகையைக் குறிக்கிறது. மழை பெய்து ஓய்ந்தான பிறகு நிலவுலகெங்கும் சக்தி எழுந்தருளியிருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன.

அவள் மண்ணுலகுக்கு வரும்போது அவளுடைய அம்சங்களாகிய லஷ்மி, சரஸ்வதி, கணேசன், கார்த்திகேயன் ஆகியவர்கள் அவளுடன் வருகிறார்கள். மண்ணுலக வாழ்வு மாண்பு உறுத்தற்கு வாழ்க்கையில் என்னென்ன பகுதிகள் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதைத் துர்க்கையும் அவளுடைய பரிவாரங்களும் சேர்ந்து விளங்குகிறார்கள். வாழ்வு நல்வாழ்வு ஆவதற்கு தனி மனிதன் வாழ்விலும் சமூகத்தின் நடைமுறையிலும் ஆட்சியானது சிறப்புற்றிருக்க வேண்டும் என்பதை துர்க்காதேவி விளக்குகிறாள். திறம்பட அவள் செலுத்துகிற ஆணையை மீறி யாரும் செல்ல முடியாது.



### மஹிஷாசுரமர்த்தினி

பூலோகத்துக்கு எழுந்தருளுகின்ற துர்க்காதேவி தத்துவ விளக்கத்திற்கும் சின்னமாகிறாள். அவள் மஹிஷாசுர மர்த்தினியாக மண்ணுலகுக்கு எழுந்தருளுகிறாள். சிங்கத்தின்மீதுநின்றுகொண்டு அவள் மகிஷன் (அசுரன்) வதம் செய்கிறாள். கன்னங்கரேலென்ற நிறமுடைய அவன் நிலத்தில் நிற்கிறான். அவனுக்குச் சற்று உயரத்தில் சிம்மத்தின் மீது நின்று அம்பிகை ஆட்சி புரிகிறாள்.

அவள் மஞ்சள் மேனியுடையவள். சிவப்பு வஸ்திரம் அணிந்திருக்கிறாள். ஆயுதங்கள் பலவற்றை அவள் கையாளுகிறாள். மஹிஷாசுரன் தமோகுணத்தின் பிரகிருதியாகிறான். துர்க்கை ரஜோ குணத்தின் சின்னமாகிறாள். இந்த அம்பிகையின் தலைக்கு மேல் சதாசிவன் தூவெண் வடிவெடுத்து ஆழ்ந்து ஆத்ம நிஷ்டையில் இருக்கிறார். அவரது வெண்ணிறம் சத்வகுணத்தைக் காட்டுகிறது. உருவமில்லாத பரம்பொருளிடத்திலிருந்து சத்வம, ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் வடிவெடுக்கின்றன. தலையிலிருக்கும் தமோ குணத்தில் பால் போராட்டம் அதிகம். ரஜோகுணம் தமோ குணத்தை வெல்லுகிறது. பிறகு அது செல்வமாகவும் கலைகளாகவும் நல்லறிவாகவும் பேராற்றலாகவும் வடிவெடுக்கிறது. அவைகளை நல்வழியில் பயன்படுத்தி சத்வம் என்னும் நடுநிலையின் பால் அது செல்கிறது. பிறகு முக்குணத்துக்கும் அப்பாலுறை பரம்பொருளில் ஜீவனை அந்தச் சக்தியானது கொண்டு சேர்க்கிறது. இந்தக்கோட்பாட்டைத் துர்க்காதேவியின் சொரூபம் விளக்குகிறது.

### துர்க்கை பூஜை

சக்தி எங்கும் நிறைந்தவள் என்பதை அவள் படைத்துள்ள பத்துக் கைகள் விளக்குகின்றன. எட்டுத்திக்குகளில் இருப்பவளும் அவளே, மேலும் கீழும் இருப்பவளும் அவளே என்பதை விளக்குவதற்குப் பத்துக்கரங்கள் அமைந்திருக்கின்றன. சக்தியின் அனுக்கிரகத்தைக்கொண்டு ஜீவன் வாழ்வு என்னும் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்து பரத்தின் பால் செல்லுதல் அதன் குறிக்கோள் ஆகிறது.

### இராமபிரான் இலங்கைக்கு செல்லமுன் துர்க்கை (சக்தி) பூஜை செய்தார்

பூலோகத்திலுள்ள அவதார புருஷர்களாகத் தோன்றியவர்களும் தங்களுடைய அரும்பெரும் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு முன்பு சக்தி பூஜை பண்ணி அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றனர். இராமபிரான் இலங்கைக்கு செல்லுமுன் துர்க்கை பூஜை செய்ததாகவும் கண்ணபிரான் கார்த்தியாயினி பூஜை செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

### சக்தி வழிபாடு ஆற்றலை அளிக்கும்

சங்கராச்சாரியார் சாரதா பூஜை பண்ணி அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றார். ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் கூட காளியின் வரப்பிரசாதத்தைப் பெற்றார். அந்தந்தக் காலத்துக்கு ஏற்ற முறையில் பூவுலகில் தர்மம் ஸ்தாபிக்கப்படுவதும் அகிலாண்ட நாயகியின் திருவுருவப் பாங்கின் படி நிகழ்கிறது.

இவ்வாறாக சக்தியின் உதவியை உண்மையில் நாடுபவன் வல்லவனாகிறான். அத்தகைய வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே சேர்த்து வேண்டுவார் வேண்டும் வகையில் வரமீய்கின்ற துர்க்கா தேவியாக தெல்லிப்பழையில் பன்னெடுங் காலம் திருக்கோயில் கொண்டு அருளாட்சி செய்து வருகின்றாள்.

மதுரகவி காரை.
எம்.பி.அருளானந்தன்.

# பசில் பாராளுமன்றம் செல்ல விரும்பினால் விட்டுக் கொடுக்க பலர் தயாராக உள்ளனர்

## பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகுவதற்கு விருப்பம் தெரிவித்தால், ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையைச் சுயமாக விட்டுக் கொடுக்கத் தயாராக உள்ளார்கள் என்றும் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்துச்செய்ய மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் முழுமையாகச் செயற்படுத்தப்படும். எதிர்த்தரப்பின் ஆதரவை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் உடுகம்பொல காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் எவ்வகையான பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாட்டு மக்கள் அனுபவ ரீதியில் உணர்ந்து கொண்டுள்ளார்கள். இத்திருத்தம் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டு பொருத்தமான திருத்தம் கொண்டு வரப்படும் என ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காலங்களில் நாட்டுக்கு பொருந்தும் வகையிலான அரசியலமைப்பு கொண்டு வரப்படும் என்பதை மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். அதன் காரணமாகவே மக்கள் இரண்டு தேர்தல்களிலும் அமோக ஆதரவை வழங்கியுள்ளார்கள்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து புதிய திருத்தம் உருவாக்குவதற்குக் கிடைக்கப் பெற்றுள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு பயன்படுத்தப்படும். புதிய திருத்தத்தை நிறைவேற்ற எதிர்த்தரப்பினரது ஆதரவு அவசியமற்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் உருவாக்கத்தின் ஊடாக பலப்படுத்தப்படும்

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டு மக்களை இலக்காகக் கொண்டு வரப்படவில்லை. மாறாக ராஜபக்ஷர்களின் குடும்பத்தாரை இலக்குவைத்து கொண்டுவரப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அதிகார ரீதியில் எழுந்த முரண்பாடுகளின் காரணமாக நாடு பாரிய விளைவுகளை எதிர்க்கொண்டது. தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டது. 19 ஆவது திருத்தத்தின் ஒரு பகுதியை நீக்கி பிறிதொரு பகுதியை திருத்துவது எமது நோக்கமல்ல. முழுமையான திருத்தம் உருவாக்குவது பிரதான நோக்கமாக உள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வர விருப்பம் தெரிவித்தால் ஆளும் தரப்பின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயமாகவே பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்கிக் கொள்ளத் தயாராக உள்ளார்கள். அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் முழுமையாக நீக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 130 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 250 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 |
| கோவா | 140 | 180 | 150 | 160 |
| கரட் | 120 | 160 | 170 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 140 | 130 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 150 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 125 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 280 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 140 | 160 |
| பயற்றங்காய் | 160 | 200 | 110 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | — | 90 | 100 | 120 |
| கறிமிளகாய் | 350 | 340 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 170 | 200 |
| போஞ்சி | 350 | 320 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | — | — | 150 | — |
| வெங்காயப்பூ | 220 | 200 | 150 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 60 | 100 |

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு
அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவில்

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மைதகு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று வழி நால்வா
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிறபோம்.

விநாயகர் அடியார்களே!

ஈழமணித் திருநாட்டின் கண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப் பாணத்தின் நல்லூர் வடக்கில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ மஹா சந்திரசேகரப் பிள்ளையாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சார்வரி வருடம் ஆவணித் திங்கள் 15ஆம் நாள் 31.08.2020 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் அமிர்தசித்தயோகமும் திருவோண நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் கூடிய சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

**கிரியா கால விபரம்**

**ஆவணி 14 ஆம் நாள் (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை**

**காலை 7.20 மணிக்கு** கர்மாரம்பம் விநாயக வழிபாடு, புண்ணியாகவாசம், அனுக்ஞை, தொடர்ந்து கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி.

**மாலை 3.00** மணி தொடக்கம் விநாயக வழிபாடு, புண்ணியாக வாசம், மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், கும்பயாகப் பிரவேசம் தொடர்ந்து 5.47 மணியளவில் பாலாலயத்தில் தீபஸ்தாபனம், விம்ப ஸ்தாபனம், யாகபூசை, தீபாராதனை இடம்பெறும்.

**ஆவணி 15 ஆம் நாள் (31.08.2020) திங்கட்கிழமை**

காலை 6.30 மணி தொடக்கம் கிரியைகள் ஆரம்பித்து 10.30 மணியளவில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து தசதர்சனம், விசேஷ பூஜைகளும் இடம்பெறும்.

| ஆலய பிரதம குருக்கள் | பாலஸ்தாபன கும்பாபிஷேக குருக்கள் | ஆலய குருக்கள் |
|---|---|---|
| சிவஸ்ரீ சதா. யோகீஸ்வரக்குருக்கள் (ராஜாஜீக்குருக்கள்) நல்லூர் | பிரம்மஸ்ரீ சதா.இராதகிருஸ்ணக் குருக்கள், நல்லூர். | சிவஸ்ரீ முத்து ஸ்ரீ நிவாசக்குருக்கள், நல்லூர். |

விநாயக அடியார்கள் அனைவரும் அன்றையதினம் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(3730)

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார்
தேவஸ்தான அறங்காவற்குழு.


# பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவை அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவினால் ஜனாதிபதி ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் சாட்சி விசாரணை செய்வதற்காக அவரிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நாளை 31 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

யக்கலமுல்ல, எல்ல இகல மற்றும் கல்கந்த பகுதிகளில் துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யக்கலமுல்ல பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் போரா 12 வகை துப்பாக்கிகள் 2 உம் அதற்கான தோட்டாக்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யக்கலமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)


## மணிவிழா வாழ்த்து



### சிவஞானசுந்தரம் ஞானசேகரம்

ஆசிரிய ஆலோசகர்-யாழ்.கல்வி வலயம்

நண்பா!
இரண்டு கழகங்களில் சந்தித்தோம் நாம்
தொடர்ந்த வாழ்வில் ஆசிரியப்
பணியும் ஆலோசனை பணியும்
துவண்டு போன நேரங்களிலும்
வரண்டு போனதில்லை உன் சிரிப்பு
அறுபது என்பது வெறும் எண்ணிக்கை
நண்பா இருபதாய் மனதை
இயங்கிட செய்வாய்
வரும் நாட்கள் உனக்கு வளமாக அமையட்டும் பெரும்
பாக்கியம் நீயென்று ஊருன்னை வாழ்த்தட்டும்

-ஊரவன்-

(3728)

## மணிவிழா வாழ்த்து



**திருமதி.கமலராணி ஜெயபாலசிங்கம்**
(உதவிக்கல்விப் பணிப்பாளர் -அழகியல்)
சேவைக்காலம் 36 வருடங்கள்
ஓய்வுநாள்: 03.04.2020



**திரு.சிவஞானசுந்தரம் ஞானசேகரம்**
(ஆசிரிய ஆலோசகர்-வணிகம்)
சேவைக்காலம் 32 வருடங்கள்
ஓய்வுநாள்: 29.08.2020



**திரு.செல்லையா தயாகரன்**
(ஆசிரிய வளவாளர்-ஆங்கிலம்)
சேவைக்காலம் 36 வருடங்கள்
ஓய்வுநாள்: 19.03.2020

தங்களின் கல்விப்பணியைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
ஓய்வு காலத்தில் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
நலன்புரிச்சங்கம்,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்,நல்லூர்

## தமிழ், முஸ்லிம் மக்களின்

# அரசியல் இருப்பை பாதிக்காத வகையில் புதிய தேர்தல் முறை இருக்க வேண்டும்

(கண்டி)

**புதிய தேர்தல் முறை மாற்றமானது தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் இருப்பை, பாதிக்காத வகையிலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "கண்டி மாவட்டத்திலிருந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரண்டாவது தடவையும் அதிஉயர் சபைக்கு தெரிவாவது இதுவே முதன் முறையாகும்.

எனவே, தமிழ் பேசும் சமூகமாக ஒன்றிணைந்து எனக்கு வாக்களித்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும், எந்தவொரு சட்டதிருத்தத்தையும் மேற்கொள்வதற்கான பெரும்பான்மைப் பலத்தை 9 ஆவது பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி கொண்டுள்ளது.

எனவே, அந்தப் பலத்தை ஆளுந்தரப்பு எவ்வாறு, எதற்காக பயன்படுத்தப் போகின்றது என்பதே பிரதான கேள்வியாகும் என அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் இந்த நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும் எனவும், 13 ஆவது திருத்தச்சட்டம் . மறுசீரமைக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக புதிய அரசியலமைப்பில் புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கொரோனாவால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்



(கொழும்பு)

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பூரவல் காரணமாக இலங்கை மாத்திரமல்லாது உலகின் பல நாடுகள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்தன.

எமது நாட்டின் பொருளாதாரமும் அதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது ஓரளவிற்கு அதிலிருந்து மீண்டிருக்கின்றோம்.

எனினும் அதனால் ஏற்பட்ட ஏனைய சவால்களை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி.லக்ஸ்மன் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது வருடப்பூர்த்தியை முன்னிட்டு மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மனால் "இலங்கையின் அபிவிருத்தியில் மத்திய வங்கி" என்ற தலைப்பில் வருடாந்த ஞாபகார்த்த உரை நிகழ்த்தப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டு 70 வருடகாலத்தில் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு இப்போது இந்த நிலையை அடைந்துள்ளது.

தற்போது இலங்கை சுயமாகவே தனது அபிவிருத்திக்கான மாதிரித்திட்டத்தை வகுக்கக்கூடிய நிலையிலுள்ளது. அதற்கான ஒரு முகவராகவே மத்திய வங்கி செயற்பட்டு வருகின்றது.

மேலும் பொருளாதார, விலை உறுதிப்பாடு மற்றும் நிதி முறைமை உறுதிப்பாடு ஆகியவற்றைப் பேணுவது மத்திய வங்கியின் பிரதான இலக்குகளாக இருக்கின்றன.

மேலும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு சீரான கொள்கை உருவாக்கத்தை நோக்கியும் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கை மாத்திரமல்லாது உலகின் பல நாடுகள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்தன.

எமது நாட்டின் பொருளாதாரமும் அதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது ஓரளவிற்கு அதிலிருந்து மீண்டிருக்கின்றோம்.

எனினும் அதனால் ஏற்பட்ட ஏனைய சவால்களை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி தொடர்ந்தும் செயற்றிறன் மிக்க வகையில் மேற்கொண்டு வருகின்றது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# புதிய 'கொம்பட் சைக்கிள்' தாக்குதல் பயிற்சிகள்



(கொழும்பு)

62 ஆவது காலாட் படைப் பிரிவின் படைத் தளபதி பிரிகேடியர் சாரத சமரகோனது வழிக்காட்டலின் கீழ் ஹலம்பாவெவயில் அமைந்துள்ள 622 காலாட் படைத் தலைமையகத்தில் கடந்த 11 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை புதிய கொம்பட் சைக்கிள் தாக்குதல் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த பயிற்சியின் நோக்கம் என்னவென்றால் குறைந்த பட்சம் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு பொறிமுறையை மேம்படுத்துவதாகும்.

இந்த பயிற்சியில் 62 ஆவது படைப் பிரிவின் கீழுள்ள 11 ஆவது கெமுனு காலாட் படையணி, 9 ஆவது கஜபா படையணி, 20 கஜபா படையணி, 14 (தொ) இலங்கை இலேசாயுத காலாட் படையணி, 17 ஆவது தேசிய பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த 35 அங்கத்தவர்கள் பங்கேற்றுக் கொண்டனர். இந்தப் பயிற்சிகள் 623 ஆவது காலாட் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பிரபாத் கொடிதுவக்குவின் கண்காணிப்பின் கீழ் 2 ஆவது விசேட படையணியைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்டன. (ஜ-4)

# கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் 639 பேரில் 614பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

கந்தக்காடு புனர்வாழ்வு மற்றும் மறுவாழ்வு மையத்தில் அடையாளம் காணப்பட்ட 639 கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 614 பேர் முழுமையாக குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த புனர்வாழ்வு மையத்துடன் தொடர்புடைய 25 பேர் மாத்திரமே தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுக்கும் தேசிய மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரையும் 2 ஆயிரத்து 989 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினால் மேலும் ஒரு சேவை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையானது மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட இலாப நோக்கற்ற வைத்தியசாலையாகும். தெற்காசியாவிலேயே முதலாவது கூட்டுறவு வைத்தியசாலை எனப் பெயர் பெற்ற இவ் வைத்தியசாலையானது 1935 ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுறவாளர்களால் நடத்தப்பெற்று வருகின்றது.

கூட்டுறவுத் திணைக்களம் வைத்தியசாலையின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தும் வருகின்றது. காரைநகர், வலிகாமம் மேற்கு பிரதேச செயலக எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள், வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலகத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள தகுதி பெற்றவர்களாவர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை என்றால் உடனே பல்வேறு முன்னாள் வைத்தியர்களின் பெயர்களைக் கூறி அவர்களிடம் பெற்ற பலனைப் பொதுமக்கள் பெருமையாகக் கூறுவதுண்டு. அவ்வளவுக்கு உச்ச சேவையை மக்களுக்கு வழங்கி நற்பெயரை இவ் வைத்தியசாலை சம்பாதித்துள்ளது.

நீண்டகால வைத்திய சேவையுடன் எம்மிடமிருந்த வளங்களை உபயோகித்து பல்வேறு சேவைகளை நாம் ஆற்றிக் கொண்டிருந்தபோது நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பல பாதிப்புக்கள் வைத்தியசாலைக்கு ஏற்பட்டது. யாழ்.குடாநாட்டு மக்களின் இடம்பெயர்வு காலம் ஓர் இருண்ட காலமாக எல்லோராலும் கருதப்பட்டது. இதனால் வைத்தியசாலையின் சொத்துக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டது.

பணிப்பாளர் சபையினர் வைத்தியசாலையின் சேவைகளை முன்னரைப்போன்று கொண்டுசெல்ல பல்வேறு தரப்பினரோடு தொடர்புகளை ஏற்படுத்தினர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலர் தனியாகவும் கூட்டாகவும் பல்வேறு வகையில் உதவி வருகின்றனர். அவர்களது இவ்வாறான பங்களிப்பு பணிப்பாளர் சபைக்கு ஊக்கத்துடன் செயற்பட வழிவகுத்ததுள்ளது. அந்த வகையில், தற்சமயம் கீழ்க்காணும் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

(1) 24 மணிநேர வெளி நோயாளர் பகுதி சேவையும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவையும்
(2) மருந்தக சேவை
(3) ஆய்வுகூட சேவைகள்
(4) முதியோர் பராமரிப்பு சேவை
(5) கருவள சிகிச்சை சேவை
(6) கதிரியக்க சேவை
(7) ஊடுகதிர் சேவை
(8) சலரோக சிகிச்சைப் பிரிவு

மேலும், தற்சமயம் உள்ள சத்திர சிகிச்சைக் கூடம் முற்று முழுதாக நவீன தொழில்நுட்ப



முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இவ் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி பணிப்பாளர் சபை சிந்தித்து செயலாற்றி வருகின்றது. அதன் முதற்கட்டமாக இன்று காலை அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள விபத்து மற்று அவசர சிகிச்சை பிரிவிற்கு இரு அவசர சிகிச்சை வைத்திய நிபுணர்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் நியமிக்கப்பட்டவாறு நியமிக்கப்பட்டு அங்கு பணிபுரிந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களைப் போன்று இப்பிரதேசத்திற்கு தள வைத்தியசாலை வசதி இல்லாமையினால் மக்கள் அவசர மருத்துவ சேவைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையே நம்பியுள்ளனர்.

காரைநகர், வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தென் மேற்கு பகுதிகளில் வாழும் மக்களுக்கு இப்பிரிவு மூலம் நிச்சயமாக பயனளிக்கும் என்ற நம்பிக்கையுடன் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த இரு அவசர சிகிச்சை வைத்திய நிபுணர்களான Dr.M. லக்ஸ்மன் மற்றும் Dr.(Mrs.)L.யனோஜினி ஆகியோருடன் பணிப்பாளர் சபை தொடர்புகளை மேற்கொண்டு இப்பகுதி மக்களுக்காக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் சேவையாற்றி உதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அதனை அவர்கள் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு எமக்கு ஆலோசனை வழங்கி இருவரும் சுழற்சி முறையில் இங்கு இப்பிரிவிற்கு உதவ முன்வந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் இலங்கையிலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளிலும் பணியாற்றியதுடன், இத்துறை சார்ந்த பல்வேறு பயிற்சிகளிலும் பங்குபற்றி அனுபவம் பெற்றுள்ளனர். அத்துடன் மேலதிகமாக பயிற்சிகளை பிரித்தானியா சென்று நிறைவு செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இவ்விரு வைத்திய நிபுணர்களும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து தமது சேவைகளை வழங்குவதாக உறுதியளித்திருப்பது பணிப்பாளர் சபைக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.

வைத்திய நிபுணர் ஆர். சுரேந்திரகுமாரினால் வழங்கப்படும் ஆலோசனைகளும் ஒத்துழைப்புக்களும் வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகிறது.

எதிர்காலத்தில் கருவள சிகிச்சை நிலையச் செயற்பாடுகளை விஸ்தரித்தல், அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கத் தொடங்கியதும் நோயாளர்களை விடுதியில் தங்க வைத்து சிகிச்சையளித்தல் என்பன புதுப்பொலிவு பெற வாய்ப்புள்ளது.

அத்துடன் மிக விரைவில் பாரிய சத்திர சிகிச்சைகள் யாவும் மேற்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற வாசகத்திற்கேற்ப எமது செயற்பாடுகள் தொடர்ந்து பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை இவ் வைத்தியசாலையின் மூலமாக வழங்க தங்கள் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

**பணிப்பாளர் சபை,**
**மூளாய் கூட்டுறவு**
**வைத்தியசாலை.**

# இடுகம கொவிட் - 19 சமூக பாதுகாப்பு நிதிய வைப்பு மீதி 162 கோடியாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 621 மில்லியனாக அதிகரித்துள்ளது.

நாடளாவிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் அமைப்பு 3 இலட்சம் ரூபாவை நிதியத்திற்கு வழங்கியுள்ளது. குறித்த காசோலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 3 கோடியே 19 இலட்சத்து 6 ஆயிரத்து 301 ரூபாய் 92 சதத்தை இந்நிதியத்திற்கு வழங்கியுள்ளது. குறித்த காசோலையை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தார்.


**WKV Hydro Technics (Pvt) Ltd** 4 இலட்சத்து 11 ஆயிரத்து 733 ரூபாய் 39 சதத்தையும் நீர் வழங்கல் அமைச்சு 9 இலட்சத்து 92 ஆயிரத்து 599 ரூபாய் 59 சதத்தையும் நட்டஈடு வழங்கும் அலுவலகம் 22 ஆயிரத்து 163 ரூபாய் 50 சதத்தையும் தியத உயன மலர்கள் மற்றும் அலங்கார தாவர பயிர்ச் செய்கையாளர்களின் சங்கம ஒரு இலட்சம் ரூபாவையும் வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் ஒரு இலட்சம் ரூபாவையும் மாத்தறை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 676 ரூபாய் 77 சதத்தையும் இலங்கை தேசிய வைத்தியசாலை 2 ஆயிரத்து 800 ரூபாவையும் மற்றும் வலப்பனை பிரதேச சபை 66 ஆயிரத்து 607 ரூபாய் 39 சதத்தையும் இந்நிதியத்திற்கு கையளித்துள்ளது.

தற்போது இடுகம கொவிட்-19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 621 மில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்பு செய்து வருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www.itukama.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன்தொடர்பு கொண்டு பங்களிப்பைச் செய்ய முடியும்.

076 070 0700/ 011 232 0880/ 011 235 4340/ 011 242 4012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஐ-4)

# பாதுகாப்பு வனப்பகுதியை அழிக்க சதித்திட்டம்



(கொழும்பு)

ஆனைவிழுந்தான் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் ஒரு பகுதியை இயந்திரம் ஒன்றின் மூலம் அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு வர்த்தகர் ஒருவரே ஆலோசனை வழங்கியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட இயந்திர சாரதியிடம், பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் குறித்த வர்த்தகரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தின், ஆனைவிழுந்தான் ரம்சார் ஈரவலயத்தின் ஒரு பகுதியை அழிக்க பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் இயந்திர வாகனத்துடன் அதன் சாரதி நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கிராம உத்தியோகத்தரை மாற்ற வேண்டாம்

## மக்கள் போராட்டம்

(வவுனியா)

வவுனியா இராசேந்திரங் குளம் பகுதிக்கான கிராம உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யவேண்டாம் எனக் கோரி அப்பகுதி மக்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

இராசேந்திரங்குளம் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் கருத்துத் தெரிவித்த போது தமது பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் சிறப்பான சேவைகளை ஆற்றியுள்ளார்.

எனவே அவரை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்ய வேண்டாம் என்றும் மீண்டும் தமது கிராமத்திற்கே நியமிக்க வேண்டும் என்றும் தெரிவித்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

குறித்த பகுதிக்குச் சென்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன், வவுனியா பிரதேச செயலாளருடன் இவ்விடயம் பற்றி கலந்துரையாடுவதாகக் கூறியதையடுத்து மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் கைவிடப்பட்டது. (5-4-250-299)






# கவனயீர்ப்பு போராட்டத்திற்கு சேவைச் சந்தை வர்த்தகர்கள் ஆதரவு

(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அனைவரும் தங்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளதாக கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தக சங்க தலைவர் அ.யேசுராஜன் தெரிவித்தார். (5-4-271)

# மன்னாரில் கரையொதுங்கிய இந்திய வள்ளம்



(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் இந்திய வள்ளம் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

"ஜோசப் இம்மானுவேல்" எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மன்னார்-தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட இயந்திரம் பொருத்தப்பட்ட குறித்த வள்ளம் கடந்த வியாழக்கிழமை மாலை கரை ஒதுங்கியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த வள்ளத்தில் எவ்விதமான பொருட்களும் இல்லாத நிலையில் வெறுமையாக கரை ஒதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கரை ஒதுங்கிய வள்ளத்தை அப்பகுதி மீனவர்கள் கரையில் இழுத்து வைத்ததுடன் தாழ்வுபாடு கடற்படையினருக்கும் தகவல் வழங்கினர்.

கடற்படையினர் மன்னார் கடற்றொழில் திணைக்களத்திற்கு தெரியப்படுத்திய நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை தாழ்வுபாடு கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கரை ஒதுங்கிய வள்ளத்தைப் பார்வையிட்டதுடன் குறித்த வள்ளத்தை பாதுகாப்பிற்காக தாழ்வுபாடு கடற்படை எல்லைக்கு மீனவர்களின் உதவியுடன் கொண்டு சென்றுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கடற்படை மற்றும் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# திருவிழாத் திருப்பலி

(பூநகரி)

பூநகரி மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் வழமை போல் இல்லாது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரண்டு நாட்கள் மட்டும் நடைபெறுகிறது.

அந்த வகையில் நேற்று நற்கருணை திருவிழா நடைபெற்றது. திருவிழாத் திருப்பலி இன்று 30 ஆம் திகதி காலை இடம்பெறும். (5-84)



யாழ்.இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று முன்தினம் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.
(படம்:-முறிகண்டி செய்தியாளர்)

# கிளிநொச்சி கௌபி அறுவடை விழா





(கண்டாவளை)

கிளிநொச்சி இந்திரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கௌபி செய்கையின் அறுவடை விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசமாக காணப்படுகின்ற இந்திரபுரம் கிராமத்தில் மக்களினுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளாலி விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட இந்திரபுரம் கிராமத்தில் விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இவ்வாண்டு அமுல்படுத்தப்பட்டதன் ஊடாக 1600 கிலோகிராம் கௌபி விதைகள் 100 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படும் வகையில் கரைச்சி, கண்டாவளை, பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 202 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டது.

பளை இந்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அறுவடை விழாவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி. ஜெயராணி பரமோதயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.(5-4-315)

# நெற்காணி அளவீடு ஆரம்பம்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட 20 கமக்கார அமைப்புக்களின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் சகல நெற்காணிகளும் கமக்கார அமைப்பின் அனுசரணையோடு கமத்தொழில் திணைக்களத்தால் அளவீடு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சகல நெற்காணி உரிமையாளர்கள், குத்தகை செய்பவர்கள் கமக்கார அமைப்புக்களோடு தொடர்பு கொண்டு தமது பிரதேச காணிகள் அளவிடும் தினத்தில் காணி உறுதிகளோடு நேரில் சமுகமளித்து காணியையும் காணி எல்லைகளையும் காட்டி தங்களது காணிகளை உறுதிப்படுத்த வேண்டுமென கமநல சேவை அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-84)

கோபம் வந்துவிட்டால், நியாயங்கள் குழம்பிப் போவது வழக்கம்.
-நாமக்கல் கவிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன் பழக்கதோசத்தை வெளிப்படுத்திய பொன்சேகா

பழக்கதோசம் என்பது சந்தர்ப்பத்தில் வந்தே ஆகும் என்பதற்குப் பின்வரும் கதை பொருத்துடையது.

ஒருவர் எதற்கெடுத்தாலும் தான் கட்டியிருக்கும் சாரத்தை மடித்து சண்டியன் கட்டுக் கட்டிக் கொள்வார்.

அந்த நபரை நாடகம் ஒன்றில் நடிக்க வைத்தார்கள். நாடகம் கோவலன் – கண்ணகி. கண்ணகி பாத்திரம் அந்த நபருக்கு வழங்கப்பட்டது.

இப்போது உதவியாளர்கள் கண்ணகி இருக்கும் இடத்துக்கு ஓடி வருகிறார்கள்.

தாயே! கோவலனைக் கொன்று விட்டார்கள் என்ற செய்தியைச் சொல்கிறார்கள். இவ்வாறு செய்தி சொல்லப்படும்போது, என் கணவனைக் கொன்று விட்டார்களா? என்று அதிர்ச்சியோடு கேட்பதுதான் கண்ணகியின் கடமை.

ஆனால் கண்ணகி பாத்திரத்தில் நடித்தவர் கோபவயப்பட்டவராக, தன் பழக்கதோசத்தின்படி கட்டியிருந்த சேலையை மடித்துச் சண்டியன் கட்டாகக் கட்டிக் கொண்டு என் கணவனைக் கொன்றவன் யார்? எனக் கேட்க, அரங்கம் முழுவதும் சிரிப்பும் விசில் அடிப்புமாக இருந்தது.

நிலைமையைச் சமாளிப்பதற்காக நாடக மேடை, திரை கொண்டு மூடப்பட்டது.

இந்தச் சம்பவத்தால் கவலையுற்ற நாடக இயக்குநரை ஆறுதல் படுத்த நினைத்த பெரியவர் ஒருவர்;

பழக்கதோசம் சந்தர்ப்பத்தில் வந்தேயாகும். நீங்கள் கவலைப்படாதீர்கள். இனியேனும் பாத்திரத்துக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யுங்கள் எனக் கூறிச் சென்றார்.

ஆம், முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய சரத் பொன்சேகா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையைக் கேட்டபோது, சண்டியன் கட்டுக் கட்டும் பழக்கமுடையவன் கண்ணகி பாத்திரம் ஏற்ற கதையே ஞாபகத்துக்கு வந்தது.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் யதார்த்தமான உரையால் கொதிப்படைந்த சரத் பொன்சேகா, கோபமுற்றவராகத் தான் செய்த பழைய வேலைகளை – போர்க்குற்றங்களைப் போட்டுடைத்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் இந்த உரை இலங்கையில் தமிழ் இளைஞர்களுக்கு நடந்தது என்ன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆக, இந்த நாட்டின் நீதியரசராக இருந்த ஒருவரையே சுட்டுக் கொல்லுவோம் என மறைமுகமாக எச்சரிக்கை செய்கின்ற சண்டாளர்கள் இருக்கும் இந்த நாட்டில் தமிழ் இனத்தின் அவலம் எத்தகையதென்பதைப் புரிதல் கடினமன்று.

## நாட்டில் மேலும் 10 பல்கலைக்கழகங்கள்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 10 பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து சுமார் ஒரு இலட்சத்து 84 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர்.

ஆனால் வருடமொன்றில் பல்கலைக்கழக அனுமதிக்காக ஒரு இலட்சத்து 53 ஆயிரம் மாணவர்கள் மாத்திரமே வரையறுக்கப்பட்டுள்ளனர் .

ஆனால் பல்கலைக்கழகங்களுக்கு தகுதிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களில் காணப்படும் அடிப்படை வசதிகளை கருத்திற்கொண்டு வரையறுக்கப்பட்ட மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால் இந்த ஆண்டில் மேலதிகமாக 15 ஆயிரம் மாணவர்களை உள்வாங்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

இது தேசிய தேவையாக காணப்படுகின்றது. இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

எனவே நாட்டில் மேலும் 10 பல்கலைக்கழகங்கள் அமைப்பது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் தப்பியோட்டம்

### நாகொட வைத்தியசாலையில் சம்பவம்

(கொழும்பு)

அளுத்கம சுற்றுலா ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணொருவர் நேற்று முன்தினம் காலை வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

அளுத்கம, மொரகல்லாவில் உள்ள ஹோட்டல் ஈடனில் தனிமைப்படுத்தப்பட்ட அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 80 வயதுடைய பெண்ணே தப்பியோடியுள்ளார்.

மனநோய்க்கான அறிகுறிகளைக் காட்டியதால் அந்த பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.நேற்று காலை 7.30மணியளவில்தாதியொருவர் மருந்துகளை வழங்குவதற்காக அவரை பார்வையிட்ட போது அவர் தப்பியோடியது தெரியவந்தது.

அவரது மாதிரி பி சி ஆர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவருக்கு கொரோனா தொற்று இருக்கிறதா? இல்லையா? என்பது இன்னும் தெரியவரவில்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஞா)

## கருத்துப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் சிரேஷ்ட பொதுவுடைமைவாதியும், முழுநேர அரசியல் செயற்பாட்டாளரும், வெகுஜன அரசியல் செயற்பாட்டு முன்னோடியும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளருமான தோழர் சி.கா. செந்திவேல் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முழுநேர அரசியல் ஊழியராக நியமனம் பெற்று 55 ஆண்டுகளை எட்டிய நிலையில் அவருடைய அனுபவங்களைப் பகிர்ந்து தோழமைகளுடனும், நட்புகளுடனும் ஏனைய பொது மக்களோடும் உரையாடுகின்றதான மக்கள் அரசியலில் 55 ஆண்டுகள் பாதையும் பயணமும் என்ற தலைப்பிலான கருத்துப் பகிர்வு நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை பணிமனையில் இடம் பெறவுள்ளது. (ஜ-5)

## களனி பல்கலைக்கழக துணைவேந்தராக பெண் நியமனம்

(கொழும்பு)

பேராசிரியர் நிலந்தி ரேணுகா டி சில்வா களனிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2018 முதல் இந்த ஆண்டின் இம் மாதம் வரை பல்கலைக்கழக மானிய ஆணையகத்தின் இயக்குநராகவும் அவர் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் ப்ராமரிப்பு வேலைகளுக்காக நாளை 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், Youth Training Centre, தலைமன்னார், Palmyrah House, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, அன்தொனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கரைசல்Palmyrah House Timex ஆடைத் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்திய சாலை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**உழைப்பை விற்கலாம். மனச்சாட்சியை ஒருநாளும் விற்க நினைக்கக்கூடாது. -ரஸ்கின்**

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- சிறைக்கு வழிநடத்துபவன் சிறைக்கு உள்ளே போவான். வாளாலே கொல்லுகிறவன் வாளாலே கொல்லப்படுவான்.
- நீங்கள் சுதந்திரத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். சுதந்திரத்தை உங்கள் சரீர இச்சைகளுக்குரிய ஒரு சந்தர்ப்பமாக உபயோகப்படுத்த வேண்டாம். ஆனால், அன்பினால் ஒருவருக்கொருவர் பணிபுரியப் பயன்படுத்துங்கள்.
- எதெது உண்மையோ, எதெது யோக்கியமோ, எதெது நியாயமோ, எதெது தூய்மையோ, எதெது அன்பிற்குரியதோ, எதெது நற்கீர்த்தியோ, எதெது பண்பொழுக்கமோ, எதெது போற்றுதலுக்குரியதோ அவற்றைச் சிந்தித்துக் கொண்டிருங்கள்.
- எதைச் சாப்பிடுவோம் எதைக் குடிப்போம், எதை உடுத்திக் கொள்வோம் என்று சிந்திக்க வேண்டாம். ஏனெனில், இவைகளையெல்லாம் அறிவிலிகளே தேடியலைகிறார்கள்.
- உன்னிடத்தில் வந்து கேட்பவனுக்குக் கொடு. உன்னிடம் கடன் கேட்க விரும்புகிறவனுக்கு முகத்தைத் திருப்பாதே.

## இராசிபலன்

30.08.2020
ஆவணி 14, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முற்பகல் 9.59 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 4.05 மணிவரை
சுபநேரம் 9.05 - 10.35 மணிவரை
இராகுகாலம் 4.35 - 6.05 மணிவரை
சந்திராஷ்டமம்:- மிருகசீரிடம், திருவாதிரை
பிரதோச விரதம் வளவன்


மேஷம்

கனவு பலிதமுண்டு, எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று நல்லவிதமாக அமையலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.


மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திருடர் பயமுண்டு.


கடகம்

உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.


சிம்மம்

நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும் நாள், போசன நன்மையுண்டு.


கன்னி

உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும் நாள்.


துலாம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.


விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.


மகரம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


கும்பம்


சிறிய வேலையொன்றிற்காக சற்று அலையும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமாக அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும்.

நமக்கு வேண்டிய அனைத்தையும் கடவுள் கொடுத்திருக்கிறார்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணம்-2020 ஓல்ட்கோல்ஸ் அணி முன்னிலையில்



ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 11 ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2020 இல் இருந்து 23.08.2020 வரை நடைபெற்ற 27 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஓல்ட்கோல்ஸ் அணி முன்னிலையில் உள்ளது.

அதனடிப்படையில் ஓல்ட்கோல்ஸ் அணி 9 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 3 போட்டிகளில் தோல்வியடைந்து ஒரு போட்டி முடிவில்லாமல் முடிந்து 54.06 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும் சென்றலைட்ஸ் அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றியும் 2 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 30.93 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் AB அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றியும் ஒரு போட்டியில் தோல்வியுமடைந்து 23.67 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் யாழ்.ஜொனியன்ஸ் அணி 2 போட்டிகளில் பங்கு பற்றி இரண்டிலும் வெற்றி பெற்று 21.03 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக் கழக அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றியும் ஒரு போட்டியில் தோல்வியும் ஒரு போட்டியில் சமநிலையிலும் முடிவடைந்து 20.22 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலுமுள்ளன.

மேலும் மறு கழகங்களின் புள்ளி விபரங்கள் செப்டெம்பர் மாதம் வெளியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# மத்திய கிழக்கில் அந்தரிப்போரை அழைத்துவர ஆவன செய்யுங்கள்

## நஸீர் ஜனாதிபதிக்கு கடிதம்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் நாடு திரும்ப முடியாமல் தவிக்கும் மத்திய கிழக்கிலுள்ள இலங்கையரை அழைத்துவர அவசர ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது, எவரும் எதிர்பாராமல் பரவிய கொரோனா வைரஸால் உலகமே முடங்கி, மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் இருந்தனர். ஒவ்வொரு நாடுகளும் இப்பாதிப்பிலிருந்து தப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது மட்டுமன்றி, தொடர்புகளையும் துண்டித்தன.

இதனால் விமான நிலையங்கள், துறைமுகங்கள் மூடப்பட்டு, நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இது பலரை நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வைத்தது மட்டுமன்றி, வெளிநாடுகளில் வாழும் உறவினர்களை நினைத்தும் கவலைப்பட வைத்துள்ளது.

இந்நிலையில், மத்திய கிழக்கில் தொழிலுக்காகச் சென்றுள்ளவர்கள் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் அந்நியச் செலாவணியில் அதிகளவு பங்களிக்கும் மத்திய கிழக்கு தொழிலாளர்களை நாம் கைவிட முடியாது. வசதியுள்ளவர்கள் அங்கிருந்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து நாடு திரும்பினாலும் விடயம் தெரியாத, வசதி குறைந்த எமது உழைப்பாளர் படை மத்திய கிழக்கில் நிர்க்கதிக்குள் தவிக்கின்றது.

தூதரகங்களுடன் தொடர்பு கொள்ள முடியாமலும் வேலை செய்த இடங்களில் கைவிடப்பட்டும் இவர்கள் அலைக்கழிவதாக எமக்குச் செய்திகள் கிடைக்கின்றன.

எனவே, இவர்களை உடன் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு

# அரசாங்கம் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை காரணமாக சுமார் 10 ஆயிரம் பேர் நாட்டில் தொழில் வாய்ப்பினை இழந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலக் கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு இலட்சம் பேருக்கான வேலைவாய்ப்பு மற்றும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டமை ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக அரசாங்கத்திற்கு வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் அரசாங்கத்தினால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சுமார் 4 இலட்சம் பேருக்கான தொழில் வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை காரணமாக சுமார் 10 ஆயிரம் பேர் இந்த நாட்டில் தொழில் வாய்ப்பினை இழந்துள்ளனர்.

நாட்டின் ஏற்றுமதித்துறை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். கொரோனாத் தொற்று காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ள சுற்றுலாத்துறை, துறைசார் சேவைகள் மற்றும் கட்டுமானப் பணிகள் என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும்.

உற்பத்தித்துறைகள் பாரிய ளவில் வீழ்ச்சி கண்டுள்ளன. ஒரு சில மாதங்களுக்குள் அவை அனைத்தும் மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## 5½ கிலோ தங்கத்...

500 கிராம் நிறையுடைய தங்கத்தை கடத்த முயன்றபோதே சந்தேகநபர்கள் இருவரும் நேற்று சனிக்கிழமை அதி காலை அனலைதீவு கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

மாதகலைச் சேர்ந்த குறித்த இருவரும் தரகுப் பணத்துக்காக இந்தியாவுக்கு தங்கம் கடத்த முற்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காங்கேசன்துறை கடற்படையினரால் சந்தேகநபர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் அவர்கள் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதன்போது, கைப்பற்றப்பட்ட ஐந்து கிலோ 500 கிராம் தங்கம் சுங்கத் திணைக்களத் திடம் ஒப்படைக்கப்படும் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஞா-8,104,114)

## ஆசிரியர் உயிரி...

ஒருவர் உயிரை மாய்த்த சம்பவம் பொலிகண்டி, புதுவளவு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு கலைமாறன் (வயது-38) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா மேற்கொண்டார். (ஞா-8,60)

## மகளின் முறைப்...

ஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த 17 வயதுடைய மாணவி பெற்றோர் தன்னை துன்புறுத்தியதாக தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டதினையடுத்து பொலிஸார் மாணவியை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்ட செட்டிகுளம் பொலிஸார் மாணவியின் வாக்குமூலத்தினை யடுத்து மாணவியின் பெற்றோரை கைது செய்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் பெற்றோரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-250)

## மரம் சரிந்து...

முல்லைத்தீவு நகரை அண்டிய பகுதிகளில் நேற்று மாலை வீசிய கடும் காற்று மற்றும் மழை காரணமாக உந்துருளி ஒன்றில் வீதியால் பயணித்தவர்கள் மேல், சிலாவத்தை பகுதியில் மரம் ஒன்றின் கிளை ஒன்று சரிந்து விழுந்துள்ளது

இதன்போது 33 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான கொக்குத் தொடுவாய் மேற்கினைச் சேர்ந்த இ.ஜெமி விகேந்திரன் என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதுடன் நீராவிப்பிட்டியினை சேர்ந்த 21 வயதுடைய எட்வேட் எமில்டன் என்ற இளைஞன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அவரும் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-281)

## விசேட அதிரடிப்...

தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து வந்த டிப்பருடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

32 வயதுடைய தனபாலகே ரோஷன் பிரதீப் எனும் விசேட அதிரடிப்படை சிப்பாயே இவ்வாறு பலியாகியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-350)

## இலங்கைத் தூத...

டோர் தினத்தை முன்னிட்டு இன்று ஈழத்தில் இடம்பெறவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு ஆதரவாக நேற்று தமிழகத்தில் ஈழத் தமிழ் உணர்வாளர்கள் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

நேற்று மாலை மூன்று மணிக்கு ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மேற்படி போராட்டம் இடம்பெற்றது.

இதில் உணர்வாளர்கள் பலர் பங்கேற்று இலங்கை அரசுக்கு எதிராக தமது கண்டன கோசங்களை எழுப்பினார்கள். (ஞா-9)

## பின்னடைவை...

கும் அதன் தலைமையின் மீது பிரசாரங்களை மேற்கொண்ட உறுப்பினர்களிற்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நேற்றைய கலந்துரையாடலில் பாராளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் பற்றி ஆராய்ந்திருந்தோம்.

ஒவ்வொருவரும் தமது பகுதிகளில் கட்சியின் வீழ்ச்சிக்கு ஏற்பட்ட காரணம் தொடர்பாக கருத்துக்களை தெரிவித்தார்கள்.

எனவே அந்த விடயத்தில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பாக ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒரு குழு விரைவில் அமைக்கப்படும் என்றார். (ஞா-250,299)

## விடுதலையை...

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஞா)

## காணாமல் ஆக்...

கொடுக்க வேண்டும் என்று அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை (ஒகஸ்ட் 30) முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

மனிதனை மனிதனே வேட்டையாடும் மனிதநேயமற்ற சனநாயக விரோதச் செயல் சர்வதேச அளவில் வியாபித்துள்ளமையினாலேயே உலகம் அதற்கானதொரு நாள் குறித்து ஒகஸ்ட் 30 இனை அனைத்துலக காணாமல் போனோர் தினமாக பிரகடனம் செய்து உலக சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

இந்நாளில் சர்வதேசத்துக்கு ஈழத்தமிழர் தங்கள் துயரை வெளிப்படுத்தும் முகமாக, ஸ்ரீ லங்கா அரச படைகளினால் திட்டமிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு நீதி கோரி சர்வதேச காணாமல் போனோர் தினத்தன்று மாபெரும் சனநாயகப் போராட்டத்தினை தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் ஈழத் தமிழர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இப் போராட்டத்தில் மக்கள் திரளாய் திரண்டு தமிழ் மக்களின் போராட்டமாக, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதிக் கோரிக்கை தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கையாக உலகிற்கு செய்தி சொல்ல வேண்டிய வரலாற்று பொறுப்பு ஒட்டு மொத்த தமிழ் சமூகத்துக்கும் உண்டு என்றார். (ஞா-9)

## விக்னேஸ்வரன்...

திலிருந்து அவரை ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் முதல் இனமும் முதல் மொழியும் சிங்களம். அதேவேளை முதல் மதம் பௌத்த மதம். மற்ற இனங்களும் மொழிகளும் மதங்களும் இரண்டாம் பிரிவைச் சார்ந்தவையாகும்.

இதை விக்னேஸ்வரன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதையும் மீறி அவர் பாராளுமன்றத்தில் ஊளையிட்டால் அவரை சபையிலிருந்து வெளியேற்றுவோம்; ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம்.

தமிழ் அரசியல்வாதிகள் வடக்கில் ஊளையிடலாம். ஆனால் அதியுயர் சபையான பாராளுமன்றத்தில் ஊளையிட்டால் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிடைக்காது.

அவரின் இலக்குகள் ஜூம் எம்மை மீறி பாராளுமன்றத்தில் நிறைவேறாது என்றார். (ஞா)

## சிறு...

எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொத்மலையில்

நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவர் இதனைக் கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரி

04


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29-08-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1050
வெற்றி இலக்கங்கள்
J 0 9 4 2 8 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2524
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 13 39 46 74
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/08/29
சீட்டிழுப்பு இலக்கம் 4229
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 7 1 5 6 2 8
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020 / 08 / 29 1530 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 15 வெற்றி இலக்கங்கள் 11 33 45 52
NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 29/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0596
C 21 22 64 70 79

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2906 வர்ணம் இளம் நீலம் திகதி 29.08.2020
வெற்றி இலக்கங்கள் 29 50 53 56 மேடம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,184,657
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1025
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2020.08.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,260,080/-
வெற்றி இலக்கங்கள் 09 23 64 76 O
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9473
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 893
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3357 திகதி: 2020.08.29
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 44 55 60 69 R
அடுத்த புதன்கிழமை ஜக்பொட் ரூ. 38,354,037.50
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1200
சீட்டிழுப்பு திகதி 29.08.2020 சனிக்கிழமை
M 27 30 35 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,240,851.20

## மணமகள் தேவை

யாழ். இந்து. கொழும்பில் பிறந்து வளர்ந்தவர், வயது 30, உயரம் 5 அடி 9 அங்குலம், பிரபல தனியார் நிறுவனத்தில் நிரந்தர தொழில் - உதவிக் கணக்காளர், வியாபார முகாமைத்துவப் பட்டதாரி. CIMA - III, கன்னிராசி, உத்தரம் -3, கிரகபாவம் 15.

மணமகள் - பட்டதாரி அல்லது க.பொ.த உயர் தரம் சித்தியெய்தியவர், வயது 24-28க்கு இடைப்பட்டவர். கொழும்பு, யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது. (C-1009)

**தொடர்பு : 011 252 9706, WhatsApp : 077 313 3686**

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள சுற்றுலாத்துறை அனுமதி பெற்ற ரெஸ்ரோறன்ற் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- வெயிற்றர்
- சமையல் உதவியாளர்
- சமையலாளர் (Chef)

கவர்ச்சிகரமான சம்பளம் EPF/ ETF உண்டு. (3719)

**தொடர்புகளுக்கு : 077 691 5521**

## அன்னா விரைவுப் பொதிகள் சேவை

**11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்**

| | |
|---|---|
| பிரான்ஸ் | - ரூ.1300 |
| ஜேர்மனி | - ரூ.1300 |
| டென்மார்க | - ரூ.1300 |
| கொலன்ட் | - ரூ.1300 |
| பெல்ஜியம் | - ரூ.1300 |
| இத்தாலி | - ரூ.1450 |
| லண்டன் | - ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.

5 - 8 வேலை நாட்கள் (C-169)

எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

கப்பல் ஊடாகவும் பொருட்கள் அனுப்ப முடியும் (குறைந்தது 100-200Kg)

லண்டன்-1050/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1450/= சுவிஸ்- 1350/= அவுஸ்ரேலியா- 1750/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 077 888 9388, 070 330 5500 | பளை மன்னார் கொழும்பு

## விற்பனைக்கு

தாய்வான், கொங்ஹொங், சீனா, மலேசியா ஆகிய நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 3 அடி தொடக்கம் 8 அடி வரை நீளமுள்ள

**Lathe Machine** (லேத் மெசின்) கள் விற்பனைக்குண்டு. இவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (2087)

தொடர்புகளுக்கு:- **0716486814**

**நாகராஜா இலட்சுமணதாசன்**

## கணக்கீட்டு உதவியாளர் (Account Assistant)

யாழில் இயங்கும் தனியார் கம்பனி ஒன்றிக்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை : குறைந்தது கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருத்தல்.
அனுபவம் : குறித்த துறையில் குறைந்தது 1 வருட அனுபவம்.

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உங்களது சுயவிபரக் கோவையினை (C.V) selvagrp.hr@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். (3732)

தொடர்புகளுக்கு

**077 826 7800, 021 221 7272**

## தேவை

எங்கள் வெளிநாட்டு முகவர் கம்பனி ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் (CCTV) தேவை.

தகைமைகள்: விற்பனைத்துறையில் 1 வருட முன் அனுபவம், GCE A/L, வயதெல்லை 35 வரை, ஆங்கில மொழியில் தேர்ச்சி.

இடம் : யாழ்ப்பாணம், மட்டக்களப்பு

உங்கள் சுயவிபரக் கோவையை கீழுள்ள முகவரிக்கு அனுப்புங்கள்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

E-mail : sorrya@maritineplacements.com (C-1007)

**தொடர்பு : Basim**

**076 095 1295, 076 095 1292**

## காணி விற்பனை

யாழ். கொட்டடியில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

யாழ். நாவற்குழியில் தச்சன்தோப்பில் 26 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. (C-1010)

**தொடர்பு : 075 410 5230**

## விற்பனைக்கு

பசுவும் பசுக் கன்றும் கிடாய்க் குட்டியும் விற்பனைக்கு உண்டு. (3725)

**தொடர்பு :**

**077 203 0309, 077 818 501 7**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
- மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-112)

**0768226240**

## விற்பனைக்கு / தேவை

வன்னிப் பிராந்தியத்தில் காணிகள் தேவை. உடன் விலைக்கு வாங்குவோம்.

A9 வீதியில் காணிகள் தேவை. கரடிப்போக்கு சந்தி ஊடாக A9 வீதி 185ம் கட்டைக்குள் 75 அடி கடைக்குரிய காணி விற்பனைக்குண்டு. (C-182)

**தொடர்பு : VIMB**

**076 534 6562, 077 522 1132, 077 147 9416**

## CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி**

- கனடாவில் / வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
- இங்கேயே படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறக்கூடிய பயிற்சி
- எமது திறப்பு விழாவில் அனுமதி பெறுவோருக்கு மட்டும் விசேட கட்டணக்கழிவு

**சிறுவர் பராமரிப்பு/ முதியோர் பராமரிப்பு/விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு/வீட்டு பராமரிப்பு**




அரச அங்கீகாரம் பெற்ற எமது கற்கை நெறியானது அதிக செயன்முறைகளுடனும் (Practicals) பயிற்சிகளுடனும் (On the Job Training) கூடியதாக அமைவதால் எமது மாணவர்கள் மிக இலகுவாகவும் திருத்தமாகவும் வேலைகளை செய்யும் ஆற்றலை பெறுவார்கள். மேலும் எமது கற்கை நெறிகள் கனடாவின் Care Giver வேலை வாய்ப்பு மற்றும் குடிவரவு திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால் கனடா மற்றும் எந்தவொரு வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் உள்நாட்டில் கூட சிறுவர் பராமரிப்பு மையங்கள், முதியோர் பராமரிப்பு மையங்கள், விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு மையங்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு போன்ற இடங்களில் உடனடி வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம். (C-160)

அனுமதிகளுக்கு - 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

நாள் - 30-08-2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 10 மணி

**0777068777**

## விண்ணப்பிக்கலாம்!

**உங்களின் உணவு உற்பத்தி நடைமுறைகளை சான்றுப்படுத்தலுக்கான இலவச செயல்முறை வழிகாட்டல்**




வடமாகாணத்தில் உள்ள உணவு பதனிடும் அல்லது உணவக நிறுவனங்கள் தமது உற்பத்தி நடைமுறைகளை (GMP, HACCP) சான்றுப்படுத்த விரும்புபவர்களுக்கான இலவச செயல் முறை வழிகாட்டல்.

CCIY, PTB இணைந்து உணவு தயாரித்தலில் ஈடுபடும் நிறுவனங்களுக்கான சான்றுப்படுத்துவதற்கான செயல்முறையின் 3ம் தொகுதிக்கான வழிகாட்டல்கள் October மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**30 நிறுவனங்கள் மட்டுமே உள்வாங்கப்படும்!**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த Hotel, Restaurant, பனை உணவுப்பதனிடுவோர், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பழப்பாகு, கோடியல், அரிசி ஆலை, அரிசி மா, மிளகாய்த்தூள், உடன் துரித உணவு (Mixture), மீன் பதனிடல், பழவகை பதனிடல், மரக்கறி பதனிடல், பால் பதனிடல், Ice Cream உற்பத்தி வெதுப்பகம் போன்ற அனைவரும் விண்ணப்பிக்க முடியும். (C-168)

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 07.09.2020

CCIY — CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM — UNITY IS STRENGTH

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம்
106 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**021 222 6609**
**070 366 3600**

## HM Brothers Car Sales

வாகன கொள்வனவு விற்பனை

- உங்களுக்கு தேவையான அனைத்து வாகனங்களும் உங்கள் தேவைக்கேற்ப இறக்குமதி செய்து தரப்படும்.
- பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்களிடம் இருக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும். உங்கள் பெறுமதிக்கு விற்பனை செய்து வாடிக்கையாளர் நலனைப் பேணிக் கொடுக்கப்படும். (தரிப்பிடக் கட்டணங்கள் இல்லை.)
- உங்கள் வாகனத்திற்கு தேவையான லீசிங் வசதியை பெற்றுக் கொள்ள முடியும்.
- உங்களிடம் இருக்கும் வாகனங்களைக் கொடுத்து தேவைக்கேற்றபடி வாகனங்களை மாற்றிப் பெற்றிட முடியும்.

**Call Us 077 110 0687**

(3741)

**☎ - 077 110 0687, 077 474 7217**

**217, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 273

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 30.08.2020 தொலைபேசி : 021 222 3378



# அதிர்கிறது பாராளுமன்றம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## பாராளுமன்றத்திலாவது எங்கட எம்.பிக்கள் ஒன்றுபட வேணும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, இடையில் குறுக்கிட்ட பண்டிதர் பரமலிங்கம் வாத்தியார்! இந்தியாவில கொரோனாத் தொற்று மிக மோசமாகத் தாக்கி வருகுது. ஆன்மீக பூமியாகிய பாரதத்தில கொரோனோ நோய் இல்லாது போகவேண்டும் என்றும் இறை பிரார்த்தனை செய்வோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடியில் அமைதி நில வியது.அந்த அமைதியைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

சாத்திரியார்: எல்லாம் விதிப்படி தான் நடக்கும். நாங்கள் நினைத்து எதுவும் ஆகப் போவதில்லை. இப்படி சாத்திரியார் கூறும் போது ஆலடியில் இருந்தவர்கள் ஒருத்தரை ஒருத்தர் பார்த்தனர். நிலைமையைச் சமாளிக்க என்ன சாத்திரியார் சொல்லுறியள் எதையும் தெளிவாகச் சொல்லுங்க. மூப்பர் விளக்கம் கேட்டார்.

சாத்திரியார்: இந்தாப் பாருங்க. எந்த நிகழ்விலும் தன்ர முகத்தைக் காட்டுகின்ற வசந்த் அன்கோ முதலாளி கொரோனாவில இறந்து போனார். இறந்தவற்ற முகத்தை ஒருக்காப் பார்க்க முடியல்ல. அதுமட்டுமல்ல ஒருத்தரும் அஞ்சலியும் செலுத்த முடியாது எண்டால் பாருங்களன்.

சாத்திரியார் கொடுத்த விளக்கம் ஒரு பெரும் தத்துவமாக ஆலடி உறுப்பினர்களால் உணரப்பட்டது.

பண்டிதர்: சாத்திரியார் சொல்லுறது உண்மை தான். எழுதப்பட்ட விதி எது எண்டு ஆருக்குத் தெரியும். எந்தப் படத்திலும் எந்த நிகழ்விலும் தன்ர முகத்தைக் காட்டுவதை ஒரு பெரும் விளம்பரமாக ஆக்கிக்கொண்ட வசந்த் அன்கோ முதலாளியின்ர இறந்த முகத்தை ஒருத்தரும் பார்க்க முடியாது என்பதற்குள்ள இறைவன் எழுதின விதி விளையாடுது தானே.

கங்காணி: பண்டிதர் ஐயா நீங்கள் சொல்லுறது தான் உண்மை. ஆனால் அந்த உண்மையைப் புரிந்து கொள்வதற்கு எத்தனை பேர் நாம் தயாராக இருக்கிறம்.

விதானையார்: அதெண்டால் உண்மைதான். இந்தாப் பாருங்க. தமிழரசுக் கட்சியின்ர செயலாளர் துரைராஜசிங்கம் படும் பாட்டை. தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்தபோது பேரவைக்கு எதிராக அவர் கூறிய கருத்துக்கள், முதலமைச்சர் விக்னேஸ்வரனைத் தாக்கி அவர் வெளியிட்ட அறிக்கைகள் இவற்றையெல்லாம் பார்க்கும் போது, இப்ப அவருக்கு எதிராக தமிழரசுக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர இருக்குது.

பண்டிதர்: இதுதான்... இதுதான்... தன்வினை தன்னைச் சுடும். ஒட்டப்பம் வீட்டைச்சுடும் எண்டு சொல்லுறது கண்டியளோ.

விதானையார்: ஆனா ஒண்டு சொல்லுறன். நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராகச் செயற்பட்ட அத்தனை பேரும் இப்ப ஆற்றலையினம். எங்கட மாவையருக்கும் இப்ப விளங்கியிருக்கும் நீதியரசர் நல்ல மனிசன் எண்டு.

சிறாப்பர்: பின்ன,கூட இருந்து கொண்டே துரையர் கழுத்தறுத்துப் போட்டாரல்லோ.

மூப்பர்: அதுதானே மாவையாற்ற மகன் விக்னேஸ்வரன் ஐயாவைச் சந்தித்துக் கதைச்சவர்.

விதானையார்: என்னைப் பொறுத்தவரையில மாவையற்ற மகனுக்கு அரசியலில இறங்க தமிழரசுக்கட்சி சந்தர்ப்பம் கொடுக்க வேணும்.

வாத்தியார்: இரண்டாவது தடவையாக விக்னேஸ்வரன் ஐயா பாராளுமன்றத்தில உரையாற்றியிருக்கிறார். இரண்டா வது தடவை ஆற்றிய உரையை சிங்கள மக்கள் கேட்பினமாக இருந்தால், ஒருக்காலும் அவர்கள் தமிழ்மக்களுக்கு எதிராகச் செயற்பட மாட்டினம்.

சாத்திரியார்: நீதியரசற்ற உரையை நானும் கேட்டனான். மிகத் தெளிவாகவும் மிக ஆணித்தரமாகவும் அவர் நிலைமைகளை எடுத்துச் சொல்லுகிறார். சில சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களை வரலாற்றைப் படிக்குமாறும் ஆலோசனை கூறியிருக்கிறார்.

மூப்பர்: நீதியரசரால் பாராளுமன்றம் அதிருதல்லோ.

சிறாப்பர்: இனி அதிரத் தான் போகுது. ஆனா...

கங்காணி: என்ன சிறாப்பர் ஆனா... எண்டு இழுக்கிறியள்.

சிறாப்பர்:நீதியரசருக்குப் பக்கபலமாக எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேணும். கட்சிகள் வேறுபாட்டாலும் நாம் தமிழர் என்ற வகையில பாராளு மன்றத்திலாவது நாங்கள் ஒன்றுபட்டு எங்கட ஒற்றுமைப் பலத்தைக் காட்ட வேணும்.

அதிலும் நீதியரசர் விக்னேஸ்வரன் ஆற்றுகின்ற உரைகளை சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழப்ப முற்படும் போது, நாங்களும் ஒன்றுபட்டு அதனை எதிர்க்க வேணும்.

வாத்தியார்: சிறாப்பர் சொல்லுறது தான் நியாயமானது. ஆனா எங்கட தமிழ்க்கட்சிகள் கந்தறுந்து காவடி எடுக்கினமல்லோ. கட்சிக் குழப்பங்களைக் கவனிக்கிறதோ அல்லது பாராளுமன்றத்தைக் கவனிக்கிறதோ எண்ட பிரச்சினையால் குழம்பிப் போய் இருக்கினம்.

பண்டிதர்: குழப்பம் மட்டுமல்ல மௌனமாகவுமல்லோ இருக்கினம்.

கங்காணி: குழம்பினவியள் குழம்பட்டும்: கதைக்கக்கூடியவர்கள் கதைக்கட்டும்.

சாத்திரியார்:அதுவும் சரிதான். தம்பி கஜேந்திரகுமார் கதைக்கலாம் தானே.

மூப்பர்: சொன்னாப் போல அங்கயும் மணியின்ர பிரச்சினை இன்னமும் முடிந்தபாடில்லை.

விதானையார்: முக்கிய பதவிகளில இருந்து நீக்கினால் மணி தன்பாட்டில விலகிப் போகும் எண்டு நினைச்சா கெடுகாலம் கட்சியில தொடரப் போறன் எண்டெல்லோ மணி சொல்லுறார்.

சாத்திரியார்:அட, சங்கதி அப்படியோ. அப்ப உறுப்புரிமையில இருந்து நீக்கிற வேலையும் இருக்குதாக்கும்.

கங்காணி: அப்ப சாத்திரியார், அதில இருந்து தான் அட்டமத்தான் தொடரப் போகுதாக்கும்.

வாத்தியார்: சரி...சரி... இதுகளை விட்டிட்டு எங்கட காணிகளை பறிப்புச் செய்யிற வேலையள் இரகசியமாக நடக்கப் பாக்குது. அதுகளைத் தடுக்க வேணும். அதோட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்ர உறவுகள் நடத்துகிற போராட்டத்தில நாங்கள் அத்தனை பேரும் பங்குபற்ற வேணும். வாருங்க பிள்ளையாரைக் கும்பிட்டிட்டு அங்க போவம். இப்படி வாத்தியார்கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டா மணியும் ஒலித்தது.

ஆதித்தன்

# வடக்கில் போதையின் சதிராட்டம் தமிழ் இனத்தை அழிக்கும் சதியோ!

## என்னினமே விழித்தெழு!

> "கல்வியில் கோலோச்சிப் பறந்த வடக்கின் நிலை இன்று அதளபாதாளத்தில் வீழ்ந்துவிட்டது. இதை கல்வியியலாளர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை. தாமுண்டு தமது வேலை உண்டு எனத் தம்பாட்டில் இருக்கிறார்கள்."

ஓர் இனத்தின் இருப்பை இல்லாதொழிக்க வேண்டுமென்றால் அவ் இனத்தின் பண்பாடு, கலாசாரத்தைச் சிதைத்தாலே போதுமானது. அந்த இனம் அழிந்துதொழிந்து இல்லாது போய் விடும்.

கிருஷ்ணரின் பிறப்பை விரும்பாத கம்சன் துவாரகை நாட்டில் இருக்கும் ஆண் குழந்தைகள் அத்தனை பேரையும் கொல்வதற்கு உத்தரவிடுகிறான்.

கிருஷ்ணன் வளர்ந்து பெரியவனாகித் தனக்கு எதிராக வந்துவிடுவான் என்ற பயமே இந்தக் கொடுஞ்செயலின் காரணமாகிறது.

இதுபோன்ற பாணியிலான கொடுஞ்செயல் எம் ஈழத்தமிழ் சமூகத்திற்கும் இழைக்கப்படுகிறது என்பது எவராலும் ஏற்க முடியாத ஒன்று.

இறுக்கமான ஒரு சமூகக் கட்டமைப்பைக் கொண்ட தமிழ் சமூகம் உரிமை கேட்டதனால் எதை எதை இழக்கக்கூடாதோ அதை அதையெல்லாம் இழந்து நிற்கிறது என்பது கண்ணூடு.



உரிமை கேட்டு மறுக்கப்பட ஆயுதமேந்தத் தள்ளப்பட்டார்கள் இளைஞர்கள்.

ஆயுதத்தால் எதையும் சாதிக்க முடியாது என்பது தெரிந்தும் வேறு வழியின்றி அந்த முடிவை எடுத்தார்கள்.

அதன்விளைவு இன்று தமிழினம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கிறது.

2009 உடன் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடக்குக் கிழக்கில் என்றும் இல்லாதவாறு போதைப் பொருள் பாவனை மேலோங்க ஆரம்பித்தது.

இன்று அதன் பரிணாம வளர்சியைப் பார்க்கும் போது ஐயகோ! இனித் தமிழினத்தை மீட்க முடியாது என்கின்ற நிலையில் நிற்கிறது.

ஒவ்வொருநாளும் கஞ்சாவுடன் இளைஞர் கைது, போதைப் பாக்குடன் இளைஞர் கைது, ஹெரோயின் நுகர்ந்த இளைஞர்கள் கைது, போதைப்பொருட்களுடன் மாணவர் கைது என்ற செய்திகளைப் பார்க்க மனம் வெம்பி வெடிக்கிறது.

கடவுளே! இதற்காகவா நாம் இவ்வளவையும் இழந்தோம் என்று எண்ண நெஞ்சு கனத்துப் போகிறது.

உரிமை மீட்புக்காய் தம் உயிரையே துச்சமென எண்ணி களமாடிய இனமா இன்று போதைக்குள் சிக்கிச் சதிராடுகிறது என்று நினைக்க ஒப்பாரி இட்டு அழ வேண்டும் போல இருக்கிறது.

எங்கிருந்து வருகிறது இந்தப் போதை, யார் அனுப்புகிறார்கள், எவ்வாறு இவை சாதாரணமாகக் கிடைக்கிறது, போதைக்கு அடிமையாகும், அடிமையாக்கும் நடவடிக்கைகள் எங்ஙனம் மேற்கொள்ளப்படுகின்றன என எண்ணும் போது,

தமிழரின் கட்டமைப்பை உடைக்க நடந்தேறும் திட்டமோ என எண்ணத் தோன்றுகிறது.

வடக்கு - கிழக்கு நகர்ப்புறங்களைத் தவிர்த்து கிராமப் புறங்களிலும் இப்போது சர்வசாதாரணமான விடயமாகி விட்டது இந்தப் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகும் செயல்.

எம் இளைஞர்களை எவ்வாறு போதை என்ற அரக்கனிடம் இருந்து மீட்கப் போகிறோம் என்ற எண்ணம் யாரிடமும் இருப்பதாய் தெரியவில்லை.

அதன் விளைவு இன்று பாடசாலை மாணவர்களையே போதைப் பொருட்களுடன் கைது செய்யுமளவில் வந்து நிற்கிறது.

இதில் அடிப்படை பிளவு என யாரும் சொல்லிவிட முடியாது. ஏனெனில் அடிப்படையில் கட்டுக்கோப்புடன் இருந்தவர்கள் நாம்.

ஆனாலும் இச் செயற்பாடுகள் எம்மினத்தை சிதைப்பதாய் இருக்கின்றமை புலப்பட்டும் இன்னும் மௌனமாய் இருப்போமானால் எம் இனத்தை மீட்கமுடியாமல் போய்விடுமோ என்ற பயம் எழுகிறது.

உரிமை, தமிழ் இனப்பற்று, போராட்டம் என்கின்ற வட்டத்துக்குள் இறுக்கமாய் இருந்த சமூகக் கட்டமைப்பை போதையினால் இல்லாதொழிக்க போடப்பட்ட திட்டம் வெற்றிகரமாக முடிந்து விட்டது என்பது உண்மை.

இனம் தெரியாதோர்களால் கடத்தப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இறுதி யுத்தத்தில் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் என தன் பிள்ளைகளைத் தேடிய உறவுகளின் போராட்டம் ஆயிரம் நாட்களைக் கடந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தன் பிள்ளைகளைத் தேடும் தாயின் கண்ணீரைத் துடைக்க வேண்டிய சமூகத்தின் மகன் இன்று போதைக்கு அடிமையாகி வாள் கொண்டு அலையும்போது எவ்வாறு எம் இனத்தின் உரிமைகளை மீட்க முடியும்.

கல்வியில் கோலோச்சிப் பறந்த வடக்கின் நிலை இன்று அதளபாதாளத்தில் வீழ்ந்துவிட்டது.

இதைக் கல்வியியலாளர்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை. தாமுண்டு தமது வேலை உண்டு எனத் தம்பாட்டில் இருக்கிறார்கள்.

கல்வியில் மாணவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என நினைப்பவர்கள் சிலர் ஏதோ செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இருப்பினும் அந்தச் சிறிய சக்தியினால் சமூக மாற்றத்தைக் கொண்டு வருவது கடினமே.

என்ன செய்ய, உரிமை கேட்டுப் போராடி பல தியாகங்களைச் செய்து உலகமே திரும்பிப் பார்க்கும் உன்னத வரலாறுகளைப் படைத்த இனம் எந்தவித அடிப்படை வசதியும் இல்லாமல் வெறும் குப்பி விளக்கில் இருந்து படித்த காலம் அது.

எல்லாம் வந்தது. அடிப்படை வசதி எதுவும் இன்றி ஓர் இறுக்கத்தில் இருக்கும் போதே உச்சத்தைத் தொட்டவர்களுக்கு எல்லாம் கிடைத்து விட்டது இனி இன்னும் ஏறுமுகமே என நினைத்திருக்க,

அதே அடிப்படை ஆடம்பர வசதிகளே எமது கல்விநிலையை கடைநிலைக்குக் கொண்டு செல்லக் காரணமாயிற்று என எண்ணும் போது, இறைவா எதுவும் இல்லாது உச்சத்தில் இருந்தோம். எல்லாம் வந்தது. கடைநிலை சென்று விட்டோமே.

•புதியன கழிந்து பழையதைத் தா என்ற மனநிலையில் தமிழினம் என்பதே உண்மை.

**அபிமன்யு**




## காளியிடம் வரம் பெற்ற கதை

**தெ**னாலிராமன் இளமையி லேயே அவன் தன் தந்தையை இழந்தார்.

அதனால் அவனும் அவனுடைய தாயாரும் தெனாலி என்னும் ஊரில் வசித்து வந்த அவனுடைய தாய்மாமன் ஆதரவில் வாழ்ந்து வந்தார்கள்.

தெனாலிராமனுக்குப் படிப்பு என்பது வேப்பங்காயாகக் கசந்தது. இருந்தாலும் அவர் மிகவும் புத்திசாலியானவர், நல்ல நகைச்சுவையாகப் பேசக்கூடியவர்.

அவர் தந்தை இறந்ததால் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் தெனாலி ராமனைக் காண ஒரு முனிவர் வந்தார். அவர் இராமனின் நிலையைக்கண்டு மிகவும் வருந்தினார்.

அதன்பிறகு அவருக்கு ஒரு மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். அந்த மந்திரத்தை பக்தியுடன் ஜெபித்தால் காளி பிரசன்னமாவாள் என்றார்.

அதன்படியே இராமனும் கோயிலுக்குச்சென்று தன் கண்களை மூடி முனிவர் சொன்ன மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினார். இரவு பகல் பாராமல் ஜெபித்ததால் உடனே காளி அவர் எதிரே தோன்றினாள்.

உனக்கு என்ன வேண்டும்? எனக் கோபமாகக் கேட்டாள் காளி. அவளை வணங்கி எழுந்த இராமன் கைகளைக் கூப்பித் தொழுதவாறே கேட்டான்.

"தாயே என் வறுமை அகலும் வழியும் எனக்கு நல்லறிவும் தர வேண்டுகிறேன்.

உடனே காளி உனக்குப் பேராசைதான். கல்வியும்வேண்டும் செல்வமும் வேண்டுமா?" என்றாள். "ஆம் தாயே. புகழடையக் கல்வி வேண்டும். வறுமை நீங்கப் பொருள் வேண்டும்.

இரண்டையும் தந்து அருள் செய்ய வேண்டும் தாயே என்றான். பிறகு காளி இரண்டு கிண்ணங்களில் பாலுடன் வந்தாள்.

அதை இராமனிடம் தந்தாள் காளி. "இராமா, இந்த இரண்டு கிண்ணங்களிலும் உள்ள பால் மிகவும் விசேஷமானது.

ஆனால் நீ ஏதாவது ஒரு கிண்ணத்திலுள்ள பாலைத் தான் குடிக்க வேண்டும். உனக்கு எது மிகவும் தேவையோ



அந்தப் பாலை மட்டும் குடி" என்றாள் புன்னகையுடன்.

என்ன தாயே, நான் இரண்டையும் தானே கேட்டேன் என்றான். நான் எதை அருந்துவது தெரியவில்லையே என்று சிறிது நேரம் யோசித்து விட்டு பிறகு சட்டென்று இடது கரத்திலிருந்த பாலை வலது கரத்திலிருந்த கிண்ணத்தில் ஊற்றி அந்தக் கிண்ணத்துப் பாலைக் குடித்து விட்டுச் சிரித்தான்.

காளி திகைத்து நின்றாள். "நான் உன்னை ஒரு கிண்ணத்திலுள்ள பாலைத்தானே குடிக்கச் சொன்னேன்!" "ஆம் தாயே, நானும் ஒரு கிண்ணத்துப் பாலைத்தானே குடித்தேன்." என்றான்.

"ஏன் இரண்டையும் ஒன்றாகக் கலந்தாய்?" "கலக்கக் கூடாது என்று நீ சொல்லவில்லையே தாயே" என்றான்.

உடனே காளி மகிழ்ந்து இராமனுக்கு வரம் தந்தார். இராமா நீ புலவன் என்று பெயர் பெறாமல் விகடகவி என்றே பெயர் பெறுவாய் என்று கூறி மறைந்தாள்.

இராமன் விகடகவி என்ற பெயரை திருப்பிப் படித்தாலும் விகடகவி என்றே வருகிறதே என்று மகிழ்ச்சி அடைந்தான்.

**நீதி: மதியால் எதையும் வெல்லலாம். புத்தியுள்ளவர்கள் எங்கு சென்றாலும் தன் திறமையினால் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்வார்கள்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு


## இலங்கையில் பறந்த புலிக்கொடி!

இலங்கையில் ஒரு பேரரசு என்று எதுவும் கிடையாது. நிறைய மன்னர்கள், நிறைய யுத்தங்கள், வாரிசு அரசியல்கள். இதனால் இங்கிருந்து இலங்கையை வெல்லப் போன தமிழ்மன்னர்கள் ஏதோவொரு மன்னரை வீழ்த்தி அவருக்குண்டான பிரதேசத்தை மட்டுமே ஆண்டிருக்கிறார்கள்.

ஆனால், இலங்கைத் தீவின் பெரும்பான்மையான பகுதிகளை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்தமுதல் மன்னர் என்று ராஜராஜசோழனைத் தான் சொல்ல வேண்டும்.

ராஜராஜனுக்கும் ராஜேந்திரசோழனுக்கும் இலங்கை வரலாற்றில் தனி இடம் கிடைத்தது சோழர்களின் வீரத்திற்குக் கிடைத்த சான்று.

ராஜராஜனின் இலங்கைப் படையெடுப்பு திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.




விமலாதித்தன்- குந்தவை திருமணம்

"குரங்குகளின் துணையுடன் ராமபிரான் ஒரு கடற்பாலத்தைக் கட்டி பிறகு கூர்மையான அம்புகளால் மிகவும் சிரமப்பட்டு இலங்கை மன்னனை வதைத்தான். இந்த சோழமன்னன் ராமனினும் மேம்பட்டவன். இவனுடைய வல்லமை மிக்க படைகள் கப்பல்கள் மூலம் கடலைக் கடந்து இலங்கை மன்னனை அழித்தன."

போர் யுத்தத்திற்கு என்று ஏராளமான ஆயுதங்கள் உண்டு. பல மன்னர்களும் அவதாரபுருஷர்களும் எதிரிகளை அழிக்க இறுதியாகப் பயன்படுத்திய பலமான ஆயுதம் மூளை.

மூளைக்கு மிஞ்சிய கூர்மையான ஆயுதம் இதுவரைக்கும் உலகில் கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டுபிடிக்கப்போவதும் இல்லை.

தனக்கும் தன் எதிரிக்கும் இடையேயான போட்டியின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ ஆயுதபலமோ அல்ல. அசைக்கமுடியாத மனவுறுதி.

மூளையின் உபாயத்தால் உருவாகும் சூட்சுமம் என்பதை நன்கு புரிந்து வைத்திருந்தார் ராஜராஜன்.

இலங்கைப் போரின் போது இந்த வலுவான ஆயுதத்தைப் பயன்படுத்தினார்.


கி.பி. 981 இல் ஆட்சிக்கு வந்த ஐந்தாம் மகிந்தன் அப்போது இலங்கையின் மன்னராக இருந்தார்.

திடீரென்று இராணுவப் புரட்சி ஏற்பட்டு மகிந்தனின் ஆட்சிக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டது.

(தொடரும்)





இலங்கை அரசும் சர்வதேசமும் கேட் காத முறைப்பாட்டை இனி தமிழர் யாரி டம் போய் முறையிட?

அழகு என்பது எது வியாசரே?

விக்னேஸ்வரனைப் பார்த்து பேரினம் பொங்கி எழுகிறதே ஏன் வியாசரே?

**தானா — வடமராட்சி**

**விக்னேஸ்வரனைப் பார்த்து பேரினம் பொங்கி எழுகிறதே ஏன் வியாசரே?**

ஏற்கனவே பாராளுமன்றம் சென்றவர்கள் எம் வரலாற்றை வலுவாகச் சொல்லி பேரி னத்தின் வாயை அடைத்திருந்தால் இன்று விக்னேஸ்வரன் இப்படிகூற வேண்டியதேவை இருந்திருக்காது. பேரினவாதிகள் கூச்சல் போட்டும் இருக்கமாட்டார்கள்.

இப்போது எமது கேள்வி என்னவென்றால், விக்னேஸ்வரன் எமது இனம் தொடர்பில் எதுவும் பேசமாட்டார், செயல்படமாட்டார் என்றவர்கள் வரிசையில் வாருங்கள்.

உங்களை ஒவ்பீஸ் ரூமில் வைத்து கவ னிக்க வேண்டும் போல இருக்கிறது.

**சாரு — யாழ்ப்பாணம்**

**அழகு என்பது எது வியாசரே?**

அழகு பார்க்கும் தன்மை ஆறறிவு கொண்ட மனித மிருகங்களிடம் மாத்திரம் இருக்கும் இயல்பு.

வீட்டில் கட்டி வளர்க்கப்படும் நாய்கள் வீதி யோரத்து அநாதரவற்ற நாய்களை கடித்து ஒதுக்குவதில்லையே.

அவை இரண்டும் கட்டித் தழுவி ஓடி, தாவி விளையாடும்.

அவை அழகு, அறிவு, அந்தஸ்துப் பார்ப்ப தில்லையே.

இவை எல்லாம் மனித மிருகங்களுக்கு மட்டும் உரிய இயல்புகளே.

**டிலக்ஷன் — புனிதநகர்**

**பாடசாலைக் கற்பித்தலை விட தனி யார் கல்வி நிலையங்களை பெற்றோர் அதிகமாக நம்புவது ஏன் வியாசரே?**

இலவசங்களுக்கு மதிப்பு இருப்பதில்லை தம்பி.

நீரை விரயம் செய்தோம் அதன் மதிப்புப் புரியாமல். நிலத்தின் அடியில் இலவசமா கக் கிடைப்பதால் அதை உதாசீனம் செய் தோம்.

அதன் விளைவு இன்று போத்தலில் அடைக் கப்பட்ட நீராய் வந்து எம் சமூகத்தை பற்றிப் பிடித்திருக்கிறது.

இதுவும் அதுதான். பாடசாலைக்கல்வி இல வசம் மதிப்பில்லை. ரியூசன் கல்வி பணத் துக்கானது மதிக்கப்படுகிறது அவ்வளவே.

**அருட்கதிர் — துன்னாலை**

**பாராளுமன்றில் வரலாற்றைச் சொல் வது இனவாதமா வியாசரே?**

உன்னைப்பற்றி நீ உரத்துச் சொல். உன் னைப்பற்றிச் சொல்ல உன்னால் மட்டுமே முடியும். என்று பொன்மொழிகள் இருக் கின்றன.

எம்மைப்பற்றியும் எம் வரலாறு பற்றியும் சொல்ல எமக்கு உரித்துண்டு.

இதை எவராலும் தடுத்துவிட முடியாது.

சரி, சலசலப்புக் காட்டி எதிர்ப்பவர்கள் பொது வெளியில் வரட்டும் வரலாற்றைப் பேசிப் பார்க்கலாம்.

அதைவிடுத்து அடைக்கோழிகள் போல் கொக்கரித்து பயனேதும் ஏற்படப் போவதி ல்லை.

**வியாசர் பதில்கள்**
**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**சிவம் — வதிரி**

**நற்சிந்தனை செய்யும் பழக்கம் உண்டோ வியாசருக்கு?**

ஊருக்கு உபதேசம் செய்து விட்டு நான் எப் படியும் இருக்கலாம் என்ற எண்ணமில்லை எனக்கு.

இங்கு பலர் ஏதோ சமூகத்தில் பெரியவர் என் றும் தம்மைத்தாமே மேன்மைப்படுத்தி மற்ற வரைக் கீழ்மைப்படுத்திச் செயற்படுகிறார்கள்.

இவை கடவுளுக்குக்கூட அடுக்காத செயல். நல்லவரை நல்லவர் என்றும் கெட்டவரை கெட்டவர் என்றும் சொல்லுவதுதானே அறம். அதைவிடுத்து எதிரிக்கு எதிரி நண்பன் என் பதாய் செயற்படுவது அறமாக அமையாது.

அறம் என்பதை உச்சரிப்பவர்கள் அறத்தின் பால் நடக்க வேண்டும். இல்லையேல் அதை உச்சரிக்கக்கூடாது.

வெறும் ஊருக்கு உபதேசம் செய்வதை நிறுத்தினால் எல்லோருக்கும் நல்லதே.

**கேதீஸ் — கீரிமலை**

**ஒன்று சொன்னால் இன்னொன்று செய் யும் ஜென்மங்களை என்ன செய்ய லாம்?**

என்ன செய்வது, கையில் உள்ள எல்லா விரல்களும் ஒரேமாதிரி இல்லையே.

ஒவ்வொரு விரல்களுக்கும் ஒவ்வொரு தன்மை இருக்கும். அதுபோலதான் ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு குணஇயல்பு இருந்தே தீரும்.

கையில் சின்னவிரல் சிறிதாக இருக்கிறது என அதை வெட்டி விடமுடியாது. சிறி யதை பெரிதாக்கிவிடவும் முடியாது.

எல்லாம் விதி என்று சகித்துப் போவதே நன்மை தரவல்லது.

**தாரா — வடமராட்சி**

**தமிழர் என்றால் சிறுபான்மை இனம் தானே?**

சிறுபான்மை இனம் என்பது எதுவென்பது இங்கு கேள்வி அல்ல. ஏன் சிறுபான்மை இனமாக்கப்பட்டது என்பதே கேள்வி.

ஒரு கோட்டை அழிக்காமல் அந்தக் கோட் டைச் சிறியதாக்க வேண்டும் எனின் அதன் அருகில் ஒரு பெரிய கோட்டை கீறிவிட்டாலே போதும்.

அதே ஒரு கோட்டை எதுவித மாற்றமும் இன்றி பெரிதாக்க வேண்டும் எனின் அதன் அருகில் ஒரு சிறிய கோட்டைக் கீறிவிட்டால் போதுமா னது.

இங்கு எது நடந்தது என்பதை காலம் தான் பதில் செல்லும்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**இலங்கை அரசும் சர்வதேசமும் கேட் காத முறைப்பாட்டை இனி தமிழர் யாரி டம் போய் முறையிட?**

ஓ... இன்னும் உங்களுக்கு சர்வதேசம் தலையிடும். எம்மை அழித்தவர்க்கு தண் டனை தரும், எம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை உண்டோ?

அப்படி நீங்கள் நினைப்பீர்களாக இருந்தால், அதைப்போல முட்டாள்தனம் வேறு எதுவு மாக இருக்க முடியாது.

கைதர வேண்டிய நேரத்தில் கைதராத நண் பனை இப்போதும் நம்பியிருக்கும் நபரோ நீங்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

## சத்தியம் வெல்லுமென்...

சத்தியம் வெல்லுமென
சரணடைந்தேன் உன்னிடம்
புத்தி பேதலித்ததென
போட்டனர் வாட்டில்

மத்தியில் உடலோ
மடித்து கிடக்க
பத்தியில் எழுதினேன்
பரம்பொருளே சரணம்...

ஆயுதம் தாங்கினர் என்று
அடைபட்டனர் சிறையுள்
காயம் கண்டு
கடினம் வேறு

ஊமை கண்டு
ஊன்றுகோலுடன்
மானம் காப்போர்
மனை என்ன இறைவா

போதனை இதுவென
புகட்டினர் வன்முறை
சோதனை கண்டு
சொரியும் கண்ணீர்

வேதனை கண்டதும்
வேண்டுவோம் இறைவனை
சாதனை ஒன்றை
சரித்திரம் சொல்லும்

*சிவா. திக்கம்*

## ஏகாந்தம்



பனை மரங்களின் சலசலப்பு
பச்சை மரங்களின் கிலுகிலுப்பு
யார் வருவானோ எவன் வருவானோ
எருமை மீது எமன் வருவானோ
அடுக்கடுக்காய் சம்பாதிக்க
அமெரிக்காபோன மகன்
கட்டியவன் கடவுளென்று
கரம்பிடித்து போன மகள்
இடை இடையே எட்டி
வந்து பார்த்த போது
கொட்டி வந்த செல்வமெல்லாம்
மூலையிலே கிடங்குதிங்கு
அடுத்தவேளை பசியெடுக்க
யார் வருவார் ஊட்டிவிட
பெத்தமனம் வாடுதிங்கு
படுக்கையிலே கிடந்தபடி
மூச்சு கொஞ்சம் சிக்குதடி
மேனி எல்லாம் நடுங்குதடி
எட்டிப் பார் வாசலிலே
எமன் உருவம் தெரியுதோடி
பொக்கைவாய் கிழவியங்கு
படுக்கையிலே கிடந்து முணுமுணுக்க
அக்கம் பக்கம் யாருமில்லை- அடுத்த
அடி எடுத்து வைக்க நாதியின்றி
தனிமையில் கிடந்த படி
அவள் ஏகாந்தம் பேசுதடி



த.லக்ஸ்மன், நல்லூர்

## கறை களைய வாராயோ

ஒடிக்கொள்ளும் ஒவ்வொர்
நொடிப்பொழுதுமாய் வாழ்க்கை
கொஞ்சம் தூரம் நீள்கிறது
மரண பயத்தில் வயது முதிர்ந்து
வாழ்க்கை நரைத்துக் கிடக்கிறது
மனிதனை மனிதம் தேடி அலைந்தே
கடவுளின் உருவம் காண முடிந்ததாய்
வாழ்க்கைக்குள் வார்த்தை வசப்படாத
ஏதோ ஒன்றாய் நரம்பறுந்த நாக்கு போல்
மனதின் போக்கு புனைந்து புலர்கிறது
இருட்டில் இருப்பதாய் இன்னும்
வெளிச்சத்தை விமர்சிக்கிறது
அடையாளங்கள் அடக்குமுறை ஆனபோது
விடைதெளியர் வில்லங்கம் ஏராளம்
ஊமைகளாய் ஊசல் ஆடியபோது
அலறர்களின் அலங்கோலம் ஒரு புறம்
இன்னும் சொல்லவும் செல்லவும்
தெரியவில்லை எம்மால்
கண்ணும் குருடாய் இருந்திருந்தால்
எண்ணும் கனவும் மறைந்திருக்கும்
புலன்களில் குறையற்று
புனிதம் ஆனோம்
சில மனங்களால்
புதைபட்டு புழுதியானோம்
வானம்கூட கருக்கவில்லை ஓர்
மழைத்துளி எனும் பட்டு
கறை களையவில்லை
நிறையோர் உருவாய் ஆவாயா
தமிழே ஓர் நிலையாய்
நீயும் வருவாயா

நெடுந்தீவு சி.சிறி

## தமிழர்தம் தலையெழுத்து

மீண்டெழுவதற்காய்
மீண்டும் மீண்டும்
முயற்சித்த இனமொன்று
நண்டுகளின் விளையாட்டாய்
இழுக்கப்பட்டு, வீழ்த்தப்பட்டு
இறுதிவரை மீண்டெழாமல்
மீட்சியின்றி கிடக்கிறது


சாட்சிகளும் சம்பிரதாயங்களும்
வெறும் வெற்று வார்த்தைகளாய்
பேரினத்தால் பீச்சி அடிக்கப்பட்ட
பேச்சின்றி மூச்சிரைக்கிறது
பூனையிடம் மாட்டிய எலியாய்
தமிழினம்

ஓட்டங்கள் நடைகளுக்கு
இங்கு ஒன்றும் குறையல்ல
ஓட்டுவார் யார் என்பதே
கேள்விகளாக எழுகின்றன

ஆட்சி அதிகாரம் என்பது
ஓரினமாம் பேரினமென்றால்
அடிமைகளாக அல்லற்படுவதோ
எம் தலை எழுத்து...

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 492



## தமிழின உரிமை

மௌனத்தின் தேடலாய்
ஏழையவர் விடியலாய்
உரிமைகோரும்
உறவதைப் பார்ப்போர்
யாருமில்லையோ?
காணியதை கேட்டிங்கு
கவனயீர்ப்பில் கலந்த
எம் உறவுகளை
காண்போர்
யாருமில்லையோ?
கையதில் கம்பியை
பிடித்தவண்ணம்
கொடிய போரினிலே
உறவுகளை இழந்தவரும்
உரிமைகோரி நிற்பது
தவறில்லையோ!

பு.கலைச்சுடர்
மகாதேவா சுவாமிகள்
சிறுவர் இல்லம்,
கிளிநொச்சி.

## நிலை மாறும்

முள்ளிவாய்க்கால்தனில்
முட்கம்பியோரமாக
மூன்றுவேளை
உணவுக்காக ஏங்கும்
எம் உறவுகள்
எங்கே சென்றது
எம் இனக் கருணை
எதற்குமே
பஞ்சமில்லாமல்
வாழ்ந்த
எம் உறவுகள்
இப்படி விதியோடு
போராடும் நிலை
எப்படி வந்தது
கொடிய போரினால்
இவர்கள் கண்ட
நிலை இது

உ.ரமேஸ்ராஜா
மகாதேவா சுவாமிகள்
சிறுவர் இல்லம்,
கிளிநொச்சி.

## பறவை பறக்கும்

முட்கம்பியோடு
முடிந்ததோ உம்வாழ்வு
எதையெண்ணி ஏங்குகிறீரோ
எதிர்காலமிங்கு
கேள்விக்குறியானதே
பாதையிலே
பார்வை வீழ்ந்து
பயணத்தை தேடுதே
விடியலை நோக்கி
விடுதலை தேடும் உமக்கு
பாதை மாறும் பயணம்
அங்கு அமையும்
சிறகை விரித்து
பறவை பறக்கும்

சி.திவ்வியா
யா/ப.மெ.ம.வி.

## விடுதலை வேண்டி

அடிமையாய் வாழும் தமிழன் அவன்
அடிமைச் சங்கிலியில் சிக்கி வறுமையில்
தவிக்கிறான் உரிமையின்றி
முள்வேலிக்குள் மாட்டிக்கொண்டு
கள்ளம் இலா உள்ளங்கள்
கொள்ளையடிக்கப்பட்டு
கம்பியில் இடறுகின்றன
இவன் மரணம் இப்படியும் மாறுமோ
தமிழன் இவன் வாழ்வு
இவ்வேலிக்குள்ளே அடைபட்டதோ
இனியும் மீள்வான் என்று
நம்பிக்கை இல்லை
மரணம் நிச்சயம்
மாண்டு போகும் தமிழினம்

சு.விதுர்ஷன்
மகாதேவா சுவாமிகள்
சிறுவர் இல்லம்

## மௌனத்தின் தேடல் -493



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## உரிமைக்குரல்

முட்கள் வேலிகள் பூமியிலும்
அல்ல- மக்கள் மனதிலும்
நிலைபெற்று விட்டது
இந்த ஏழைக்குரல் அரசு
வரை கேட்குமோ?
கரும்புள்ளிகள் தோன்றக்
காத்திருந்து
உயிர் நீத்திடுமோ?- நம்
உரிமைக்குரல் பதில் வருமுன்
காணி வேண்டி காத்திருக்கும்
கனியவர்க்கு- காலம்
பதில் சொல்லும்
சட்டம் தன் கடமையைச்
செய்யுமுன் சாதிக்கும்
எண்ணமும் நம்மை விட்டுச் செல்லும்

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை சி.ம.வி.

## செல்லாக்காசு

முள்ளிவாய்க்கால்
உயிர்கள்
வகைதொகைக்கு
கொள்ளிவைத்து
முள்வேலியானது
ஒருமுறை போனால்
விரும்பினாலும் பின்
திரும்பிவராது
உயிர்களென்று
புத்தபெருமானின்
கூற்று
யுத்தத்தில்
செல்லாக்காசு

-க.நாகராசா
நுணாவில்

# கோபுரக் கலசங்கள்

**இன்றைய காதலர்கள் போல என்னால் இருக்க முடியாது. அவர்கள் காதலென்றால் என்னவென்றே தெரியாமல் காதலிக்கிறார்கள். அவர்களுக்குக் காதல் என்பது ஒரு பொழுதுபோக்கு அம்சம் என்று நினைப்பு. எங்கட காலத்துக் காதல் எங்களுக்கு உயிர்**

சேவல் கூவிக் காலைப் பொழுதை இனிதே வரவேற்க நல்லூர்க் கண்டாமணி ஒலித்திட "அப்பனே முருகா" என்று நல்லூரானைக் கும்பிட்டாள் விமலா. வாசலைப் பெருக்கித் தண்ணீர் தெளிப்போம் என்று வீட்டுப் படலையை கூட்டிக் கொண்டிருந்தவள் மனது முழுவதும் காயத்திரியின் நினைவுகள் தான் திரையோடியது... நாற்பது வயதாகியும் திருமணமாகாமல் காயத்திரி முதிர்கன்னியாகவே இருப்பது இவளுக்கு பெரும் சுமையாகவே இருக்கிறது.


"இவளை எப்படியாவது திருமணம் செய்யச் சம்மதிக்க வைக்க வேண்டும்" என எண்ணியவள் காதுக்குள் பக்கத்து வீட்டுப் பவளத்தின் குரல் கேட்டது "விடியாத ஜென்மங்கள்" விடியற் காலையில இதுகளின்ட முகத்தில முழித்தால் அவ்வளவுதான் "முழுவியலத்திற்கு உதாவாததுகள்" பரம்பரைச் சொத்தை வைத்துக் கொண்டு வாழ்ந்து இந்த இடத்தை விட்டுப் போகுதுகளுமில்லை" "எங்கட உயிரை வாங்குதுகள்" இவற்றைக் கேட்ட விமலா கண்ணில் கண்ணீர் ஆறாக ஊற்றெடுத்தது.

தனது கை, காலைக் கழுவி விட்டு உள்ளே சென்றவள் "காயத்திரி காயத்திரி" "எழும்பு விடிந்து போயிற்றுது வேலைக்குப் போக தாமதமாகிவிடும் எழும்பு" போர்வையை மெல்ல விலத்தி தாயின் முகத்தைப் பார்த்தவள் "என்னம்மா இன்றும் பவளமக்கா வழமையான பல்லவி தானா? இதைக் கணக்கில் எடுக்காதேயுங்கோ ஊரில் இருக்கும் ஒவ்வொருவரது கதைக்கும் காது கொடுத்தால் எங்கட வாழ்வு தான் சிக்கிச் சின்னாபின்னமாகும். பேசாமல் போய் உங்கட வேலையைப் பாருங்கள்.

"இல்லை காயூ" எங்களிட்ட பரம்பரைச் சொத்திருக்கு. அடுத்த சந்ததிக்கும் அது போதும். காசு பணம் இருந்து என்னத்தைச் செய்யிறது. கடைசிக் காலத்தில தனிமையில் இருப்பது பெரும் கொடுமையம்மா. இந்தக் கட்டை வேகும் வரை தான் அம்மா உனக்கு உதவி. எங்கட் உறவுகள் பலர் யுத்தத்தால் அடித்துச் செல்லப்பட்டனர். உன் அப்பாவையும் அந்தக் கொத்தணிக் குண்டுகள் தான் கொண்டு போச்சுது.

மீதமாக இருந்த உறவுகள் அந்நிய நாட்டில் தஞ்சம் புகுந்து விட்டார்கள். நீயும் இறுதி யுத்தத்தில் சரணடைந்த பிரசாத் வருவான் வருவான் என்று காத்திருக்கிறாய். யுத்தம் முடிந்து பத்தாண்டுகள் முடிந்தும் இன்னும் அவன் வரவில்லை. நீ யாரையாவது கல்யாணம் கட்டினாய் என்றால் என் கண்கள் நிம்மதியாக மூடிக் கொள்ளும்.

இது என்ன கதை அம்மா "மனதில் ஒருவனை நினைத்துக்கொண்டு எப்படி இன்னொருவனைத் திருமணம் செய்வது" என்னுடைய பிரசாத் வருவான்




அவன் வரும் வரை நான் காத்திருப்பேன் நீங்கள் பயப்படதாயுங்கோ.. உங்கள் ஆயுள் எனக்காகத் தான் நீண்ட காலத்திற்கு எழுதப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் நாங்கள் இருந்த இடம்பெயர்ந்தோர் முகாமில் குண்டு விழுந்து அப்பா, பெரியப்பா, மாமா, மாமியென எல்லோரும் இறந்தபோதும் நானும் நீங்களும் தப்பியது கடவுள் சித்தம் தான்.

"இப்படிச் சாட்டுப் போக்குச் சொல்வதை நிறுத்து. உது எல்லாம் சினிமாவுக்குத் தான் சரி. நிஜவுலகில் இதுவெல்லாம் சரிவராது. நீ உனக்காக அல்லாது எனக்காக கல்யாணம் கட்டு"

"இல்லையம்மா இன்றைய காதலர்கள் போல என்னால் இருக்க முடியாது" அவர்கள் காதலென்றால் என்னவென்றே தெரியாமல் காதலிக்கிறார்கள். அவர்களுக்குக் காதல் என்பது ஒரு பொழுதுபோக்கு அம்சம் என்று நினைப்பு. எங்கட காலத்துக் காதல் எங்களுக்கு உயிர் "காதல் காதல் காதல்" "காதல் போயின் சாதலே" எங்கட காலத்து நிலை. தயவுசெய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இருக்கும் வரை உங்களுடன் இருக்கிறது. நீங்கள் இல்லாக் காலத்தில் முருகன் பார்த்துக் கொள்வான். சந்நிதியான் கோவிலில் போய் தஞ்சம் புக வேண்டியது தான்.

"தேவையில்லாமல் நேரத்தை வீணடிக்காமல் வேலைக்கு நேரமாகிது புறப்பட ஆயத்தமாகு" நான் உனக்குச் சாப்பாடு தயார் செய்யப் போகிறேன் என்று புறப்பட்டாள் விமலா.

காயத்திரி குளிக்கச் சென்று குளித்துக் கொண்டிருக்கும் போது அவளது பசுமையான நினைவுகள் வந்து போயின. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையை அவளது வீட்டுக்கு அருகிலிருந்த பாடசாலையில் கற்று அதிகூடிய பெறுபேற்றைப் பெற்று க.பொ.த உயர்தரத்திற்காக புதிய பாடசாலைக்குச் சென்றாள்.

அங்குதான் பிரசாத்தை முதல் முதல் சந்தித்தாள் காயத்திரி. தான்பாடு தன் வேலைபாடு என்று படிப்பில் அக்கறை செலுத்தி வந்த காயத்திரிக்கு விளையாட்டென்றால் நல்ல பிரியம். பாடசாலையில் படிப்பில் மட்டும் அல்ல விளையாட்டிலும் பிரகாசித்த பிரசாத் காயத்திரிக்கு நிஜவுலகக் கதாநாயகனாகத் தென்பட்டான். அவன் மீது எதிர்பாராதவொரு ஈர்ப்பு வந்தது. அதுவே நாளடைவில் காதலாக உருப்பெற்றது. ஒரு பெண் எப்படித் தன் காதலை ஆணிடம் சொல்வது என்ற பெண்களுக்கே உரித்தான வெட்கத்தின் காரணமாகச் சொல்லாமல் காத்திருந்தே இருவரும் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டனர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறைப் பெற்று பல்கலைக்கழகம் தெரிவானார்கள் பல்கலைக்கழத்திலாவது தன் காதலை சொல்லிப் பிரசாத்தைத் திருமணம் செய்ய வேண்டுமென எண்ணியவள் ஒருமாதிரி தனது நண்பிகளின் உதவியுடன் தன் காதலை பிரசாத்திற்கு சொன்னாள்.

ஊர்ப்பிள்ளை நல்ல பிள்ளை என்று இவள் காதலைப் பிரசாத்தும் ஏற்றுக் கொண்டான். காலங்கள் கடந்தோடின. பல்கலைக்கழகக் கல்வி முடிந்து இருவருக்கும் பட்டமளிப்பு நடைபெற வேண்டிய காலத்தில் யுத்தம் உக்கிரமானது.

இதனால் பட்டமளிப்பு நடைபெறாமலே இவர்களது பிரிவுக்கு சான்றிதழ் வழங்கப்பட இருவரும் ஊருக்குப் புறப்பட்டனர். இருவரும் தமது பெற்றோருக்கு தமது விருப்பத்தைத் தெரிவித்து பெற்றோர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்யத் தயாராக இருந்த நிலையில் தொடர்ச்சியான இடம்பெயர்வுகளால் இவர்களது திருமணம் தள்ளிப் போனது.

இப்படியே காலங்கள் கடந்தோட இறுதியாக நடந்த யுத்தத்தில் பிரசாத் இராணுவத்தில் சரணடைந்தான். என்றெண்ணியவள் கண்ணால் கண்ணீர் ஓடியது "தண்ணீருக்குள் மீன்கள் அழுதால் வெளியில் தெரியாது" என்பது போல் இவள் ஒவ்வொரு நாளும் குளிக்கும் போது அழுவது ஒருவருக்கும் தெரிவதில்லை. இவள் போன்றோர்களின் வலிகள் ஒருவருக்கும் புரிவதுமில்லை. "மீண்டும் விமலாவின் குரல் என்ன ஒவ்வொருநாளும் ஒரு கிணறு தண்ணீரை முடித்துத்தான் நீ குளித்திட்டு வருவாயா வா வெளியில நேரம் போய் விட்டது"

வெளியில் வந்த காயத்திரி படபடத்தவளாக நேரம்போயிற்று இன்றைக்கு பல வேலை கிடக்கு நேரத்துடன் போக வேண்டும் என்று நினைத்திருந்தன்.

ஆனால் வழமையான நேரத்திற்குத்தான் போகக்கூடியதாக இருக்கும் என்று எண்ணியவளாக தாயிடம் மதிய வேளைக்குத் தேவையான உணவையும் நீரையும் வாங்கி தனது கைப்பையில் வைத்துவிட்டு காலை உணவை "உண்டது பாதி உண்ணாதது மீதியாக வைத்துவிட்டு தலைக்கவசம்,முகக்கவசம் என எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு வாசலுக்குப் புறப்பட்டவள் உந்துருளியை வீதியில் இறக்கிய போது தான் ஞாபகம் வந்தது கை கழுவும் திரவத்தை மேசையில் விட்டு விட்டு வந்தது.

உந்துருளியை வீதியில் கரையாக நிறுத்தி விட்டு "இந்தக் கொரோனா வந்து படுத்திற பாடு" என்று புறுபுறுத்தவாறு உள்ளே செல்லும் போது வாசலில் வாகனம் ஒன்று வந்து நின்றது திரும்பிப் பார்த்தாள்.

என்ன அதிசயம் இதுவரை சந்தேகத்தின் பெயரில் தடுப்பிலிருந்த பிரசாத் வாசலில் நின்றான். அவள் கண்ணையே அவளால் நம்ப முடியவில்லை. தான் காண்பது கனவா? நிஜமா? என எண்ணியவள் பலத்த குரலில் தாயைக் கூப்பிட்டாள்.

"அம்மா அம்மா என்று தாயைக் கூப்பிட்டவாறு பிரசாத்தை நோக்கி ஓடினாள். தாயும் மகள் ஏன் அவதிப்பட்டுக் கத்துகிறாள் என்று மகளிற்குப் பின் தொடர்ந்தாள்.

உள்ளே வந்த பிரசாத் "புதிய அரசாங்கம் தடுப்புக் காவலில் உள்ள அனைவரையும் நாட்டை விட்டு வெளியேறக்கூடாது தாம் தரும் கடனில் சொந்தமாக முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்" போன்ற நிபந்தனைகளுடன் எங்களை திடீரென விடுதலை செய்தது என்றான்.


விமலாவுக்கு பலத்த சந்தோசம். தான் கும்பிட்ட முருகன் கைவிடவில்லை என்று முருகனுக்கு நன்றி கூறியவள் இனி நிம்மதியாகக் கண் மூடலாம் என எண்ணியவளாக தன் கண்ணால் வடிந்த கண்ணீரைத் துடைத்தாள்.

**அரியாலையூர்**
**குணரத்தினம் பிரதீபன்**

> பிரித்தானியாவின் கீனி மீனி கூலிப்படைகளில் போர்க் குற்றங்கள் தொடர்பாக பிரித்தானிய ஊடகவியலாளரான பில் மில்லர் ஒரு நூலை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். அந்த நூலில் இலங்கையில் பிரித்தானிய கூலிப்படைகள் பங்கெடுத்திருந்த பல போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்திருந்தார்.

–சுபத்திரா–

# கூலிப் படைகளுக்கு எதிராக பிரித்தானியாவில் தொடங்கியது விசாரணை



சில முக்கியமான நிகழ்வுகள், விடயங்கள் கூட பரபரப்பான செய்திகள், சூழல்களுக்குள் ஊடக கவனிப்பை பெறாமல் போய் விடுவதுண்டு. இந்த ஆண்டில் இலங்கையுடன் தொடர்புடைய குறிப்பாக குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய இரண்டு விடயங்கள் அவ்வாறுதான் கவனத்தை இழந்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி உலகமெங்கும் கொரோனாத் தொற்று பற்றிய பரபரப்புக்குள் சிக்கியிருந்த போது 87 வயதான பிரித்தானியாவின் முன்னாள் இராணுவ அதிகாரியான லெப்.கேணல் பிரையன் பற்றியின் மரணம் பற்றிய செய்தி வெளியுலகத்துக்கு கிடைக்கவில்லை.

அந்தச் செய்தி வெளியே வருவதற்கு கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகின. அதுபோலவே பொதுத் தேர்தலுக்குப் பிந்திய பரபரப்பில் நாடு இருந்த போது இன்னொரு செய்தியும் இலங்கை ஊடகங்களில் குறிப்பாக தமிழ் ஊடகங்களில் அதிக கவனத்தைப் பெறவில்லை.

1980களில் இலங்கையில் பிரித்தனிய கூலிப்படைகளின் போர்க்குற்றங்கள் தொடர்பாக பிரித்தானியாவின் மெட்ரோபொலிட்டன் பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியிருந்தனர் என்பதே அந்தச் செய்தி.

இந்தச் செய்திக்கும் கொரோனாத் தொற்று பரபரப்பில் அமுங்கிப் போன பிரித்தானிய இராணுவ அதிகாரி லெப்.கேணல் பிரையன் பற்றியின் மரணம் தொடர்பான செய்திக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

இலங்கையில் பிரித்தானிய கூலிப்படைகளுக்கு தலைமை தாங்கியவர் தான் லெப்.கேணல் பிரையன் பற்றி. 1984 ஆம் ஆண்டு அவர் இலங்கையில் விசேட அதிரடிப்படைப் பிரிவுக்கு பயிற்சிகளை அளித்தது தொடக்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளுக்கு நிபுணத்துவ உதவிகளை வழங்கியது, வழிநடத்தியது வரை அவரது பங்களிப்பு இருந்திருக்கின்றது.

1980களின் தொடக்கத்தில் பிரித்தானியாவின் தனியார் இராணுவ அமைப்பாக கீனி மீனி சேவை இலங்கையில் கூலிப்படைகளாகச் செயற்பட்டிருந்தது.

கே.எம்.எஸ்.என்ற இந்த அமைப்பில் பிரித்தானிய இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் அங்கம் வகித்தனர்.

இவர்கள் மலேசியா, இந்தோனேசியா, நிக்கரகுவா, இலங்கை போன்ற பல நாடுகளில் கிளர்ச்சி முறியடிப்பு தொடர்பாக பயிற்சிகளை அளிப்பவர்களாக நேரடியாக தாக்குதல்களில் ஈடுபடுபவர்களாக, உத்திகளை வகுத்துக் கொடுப்பவர்களாக உள்நாட்டுப் போர்களில் பங்கெடுத்துள்ளனர்.

இலங்கையிலும் இவர்கள் விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சிகளை அளிப்பதில், இராணுவத்தினருக்கு பயிற்சிகளை அளிப்பதில் மாத்திரமின்றி ஹெலிகொப்டர்களின் துணை விமானிகளாகவும் போர் நடவடிக்கைகளில் நேரடியாக பங்கேற்பவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

1984 இற்கும் 1988 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த கூலிப்படைகள் இலங்கைப் படையினருடன் இணைந்து செயற்பட்ட காலத்தில் இடம்பெற்ற பல்வேறு படுகொலைகள் தான் இப்போது கவனத்தைப் பெற்றிருக்கின்றன.

பிரித்தானியாவின் கீனி மீனி கூலிப்படைகளில் போர்க் குற்றங்கள் தொடர்பாக பிரித்தானிய ஊடகவியலாளரான பில் மில்லர் ஒரு நூலை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். அந்த நூலில் இலங்கையில் பிரித்தானியா கூலிப்படைகள் பங்கெடுத்திருந்த பல போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்திருந்தார்.

குறிப்பாக 1985 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி கிளிநொச்சி, பிரமந்தனாறு கிராமத்தில் ஹெலிகொப்டர்களில் சென்று இறங்கிய இராணுவத்தினரால் 16 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை இறால் பண்ணைக்குள் 85 தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றில் பிரித்தானிய கூலிப்படைகளின் நேரடியான பங்கு தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இவை தவிர வேறு பல இராணுவ நடவடிக்கைகளிலும் இவர்கள் பங்கேற்றதாக ஊடகவியலாளர் பில் மில்லரால் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பின்னர் தான் பிரித்தானியாவில் உள்ள தமிழ் அமைப்பு ஒன்று கூலிப்படைகளில் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஐ.நாவிடம் முறையிட்டது.

ஐ.நா.சபையில் கூலிப்படைகள் தொடர்பான ஐ.நா. செயலணி ஒன்று இயங்குகின்றது. உலகின் பல்வேறு நாடுகளில் கூலிப்படைகள் அல்லது தனியார் இராணுவங்கள் செயற்படுகின்றன.

கீனி மீனி போன்ற பிரித்தானிய கூலிப்படைகள் கிளர்ச்சி ஒழிப்பு போன்ற உத்திகளை வகுத்துக் கொடுக்கின்ற பயற்சி அளிக்கின்ற பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளன.

கீனி மீனி என்ற அமைப்பு இப்போது இல்லை. ஆனால் அதிலிருந்து உருவாக்கப்பட்ட சலாடின் செக்யூரிட்டி என்ற கூலிப்படை அமைப்பு இப்போதும் செயற்படுகின்றது.

இந்த அமைப்பு பயிற்சிகளை அளித்தல், பாதுகாப்பு வழங்குதல், தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குகின்றது.

இவ்வாறான கூலிப்படைகளின் நடவடிக்கைகள் குறித்து அவற்றின் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்கு ஐ.நா.செயலணி ஒன்று இயங்குகின்றது.

அந்த செயலணியிடம் தான் கே.எம்.எஸ். கூலிப்படையின் போர்க்குற்றங்கள் குறித்து தமிழ் அமைப்பினால் முறையிடப்பட்டது. அந்த ஐ.நா. செயலணி இந்த விவகாரத்தை பிரித்தானியாவிடம் கொண்டு சென்றது.

இதன் அடிப்படையில்தான் பிரித்தானியாவின் மெட்ரோபொலிட்டன் பொலிஸார் விசாரணைகளை தொடங்கியுள்ளதாக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள் பிரித்தானிய இராஜதந்திரிகள்.

இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதை மெட்ரோபொலிட்டன் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ள போதிலும் மேலதிக விபரங்கள் எதையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை என்று ஊடகவியலாளர் பில் மில்லர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

இலங்கையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ள நிலையில் பிரித்தானிய கூலிப்படைகள்பற்றிய விசாரணைகள் அங்கு தொடங்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக உள்ளது.

தமிழர் தரப்பு போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை மட்டுமே மையப்படுத்தி போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. ஆனால் பிரித்தானியாவில் தொடங்கப்பட்டுள்ள விசாரணைகள் அதற்கு முந்தியவை.

வெளிப்படுத்தக் கூடிய உண்மைகள் இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளையும் வலுப்படுத்தக் கூடியதாகும்.

ஆனால் என்ன பிரித்தானிய பொலிஸாரின் விசாரணைகளில் உள்ளது உள்ளபடி வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட வேண்டும். இல்லையேல் இதுவும் வெறும் குற்றச்சாட்டாகவே முடிந்து போய் விடும்.

# இலங்கை அரசியலும் அரசியலமைப்புத் திருத்தங்களும்

அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் முதன்மைச் சட்டமாகும். ஏனைய சட்டங்களுக்கெல்லாம் தாய்ச் சட்டம் அரசியலமைப்பாகும். இன்றைய உலகில் அரசியல் திட்டமொன்று இல்லாமல் ஒருநாடு இருக்க முடியாது. சர்வாதிகார ஆட்சி முறை மற்றும் ஒரு கட்சி ஆட்சி முறையில் கூட சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து பெயரளவிலாவது அரசியல் திட்டமொன்றை ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக் கொண்டு செயற்பட்டதை உலக வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன.

அரசியலமைப்பு என்பது ஆட்சியாளர்களின் ஆட்சியின் மீது ஒரு கடிவாளத்தை இட்டு தான்தோன்றித் தனமான ஏதேச்சதிகாரமான செயற்பாடுகளை கட்டுப்படுத்துகின்றது. பொதுவில் அரசியலமைப்பொன்று மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு வலுச் சேர்க்கும் வகையில் அமைந்திருக்க வேண்டுமென்பதே எதிர்பார்ப்பாகும். சுருக்கமாகக் கூறுவதானால் ஒரு நாட்டின் வெற்றியும் தோல்வியும் அரசியல் திட்டத்திலேயே தங்கியுள்ளதெனலாம்.

அரசியல் கலாசாரம் முதிர்ச்சியடைந்த நாடாக கருதப்படும் அமெரிக்கா நாட்டின் அரசியல் திட்டம் ஏறக்குறைய 250 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு இன்று வரை 27 திருத்தங்களுடன் இன்றும் நடைமுறையிலுள்ளது.

ஆனால் இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்து கோல்புறூக் அரசியல் திட்டம், குறுமக்கலம், மனிங் அரசியல் திட்டம், மனிங் டிவன்சயர் அரசியல் திட்டம், டொனமூர், சோல்பரி, 1972 ஆம் ஆண்டின் அரசியல் திட்டம் மற்றும் இன்று நடைமுறையிலுள்ள 1978 ஆம் ஆண்டின் 2 ஆவது குடியரசு அரசியல் திட்டமென பல அரசியல் திட்டங்களை இலங்கை மக்கள் கண்டுள்ளனர். இதுவரை நடைமுறையிலுள்ள 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு இதுவரை 19 திருத்தங்களைக் சந்தித்துள்ளது. இதற்கு மேலதிகமாக 42 வருட சிறு காலப் பகுதியினுள் இலங்கையின் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் மிக விரைவில் மேற்கொள்ளப்படுவதற்கான முஸ்தீபுகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

இதனைவிட புதிய அரசியல் திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பிலும் பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படைகளிலே இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் அவற்றுக்கான பின்னணிகள் அவற்றில் காணப்படும் சாதகபாதக விடயங்களையும் புதிய திருத்தம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளையும் பற்றி சுருக்கமாக அலசுவதே இந்தக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

### நடைமுறையிலுள்ள அரசியல் திட்டத்தின் தோற்றத்தின் பின்னணி

உலகில் என்றுமில்லாதவாறு சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலில் எந்தவொரு கட்சியும் பாராளுமன்றத்தில் பெறாத பிரமாண்டமான வெற்றியை ஐக்கிய தேசியக் கட்சியானது 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்டது. 5/6 பெரும்பான்மையுடன் ஐக்கிய தேசியக் கட்சி அத்தேர்தலில் பெருவெற்றி பெற்றமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் மிக முக்கிய காரணமாக அமைந்தது 1972 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சியமைத்த முக்கூட்டு அரசாங்கம் விட்ட தவறுகளாகும். முக்கியமாக அதனுடைய சுதேச அல்லது உள்நாட்டு உற்பத்தி நோக்கிய பொருளாதாரக் கொள்கையால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் மற்றும் பஞ்சம் போன்றவற்றால் அக்கால அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியாகும்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் எவ்வாறு நாட்டு மக்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மீதிருந்த அதிருப்தி காரணமாக தற்போதைய ஆளும் கட்சியை பெரு வெற்றி பெறச் செய்தார்களோ அதே நிலைமை 1977 ஆம் ஆண்டு தேர்தலிலும் காணப்பட்டது. அந்தத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. 1977 இல் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு புதிய அரசியல் திட்டம் ஒன்றை ஆக்கித் தருவோம் என்ற வாக்குறுதிக்கமைவாக 1798 ஆம் ஆண்டின் 1 ஆவது குடியரசு அரசியல் திட்டத்தை நன்கு திட்டமிட்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உருவாக்கினார்.

புதிய அரசியல் திட்டமானது ஐக்கிய தேசியக் கட்சியின் குறிப்பாக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் விருப்பு வெறுப்புக்கள் மற்றும் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தாக அப்போதைய அரசியலறிஞர்கள் விமர்சனம் தெரிவித்திருந்தனர்.

குறிப்பாக முன்னர் இருந்த தொகுதிவாரி தேர்தல் முறைமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதகமாக அமைந்திருந்தது. உதாரணமாக 1972 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி பெற்ற மொத்த வாக்குகளை விட ஐ.தே.கட்சி அதிக வாக்குகளைப் பெற்ற போதிலும் தொகுதிவாரி தேர்தல் முறைமை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி குறைந்த ஆசனங்களையே பெற்றுக் கொண்டது. இதனால் புதிய அரசியல் திட்டத்தில் தொகுதிவாரி தேர்தல் முறையை நீக்கி விகிதாசார தேர்தல் முறையை ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா அறிமுகம் செய்தார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிரந்தரப் பொருளாதாரக் கொள்கையான திறந்த பொருளாதாரக் கொள்கையும் இந்த அரசியல் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ஜெ.ஆர். ஜெயவர்த்தனா புதிய அரசியல் திட்டத்தில் ஒருபலம் வாய்ந்த நிர்வாகியைக் கொண்ட ஓர் அரசாங்க முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அவாவின் காரணமாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புச் சொல்லக் கடமைப்படாத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை புதிய அரசியல் திட்டத்திலே அறிமுகப்படுத்தினார்.



### அரசியலமைப்பு திருத்தங்கள்

அரசியலமைப்பொன்று காலாகாலத்திற்கு நிலைபேறாக மாற்றப்படாமல் அல்லது திருத்தப்படாமல் இருப்பது சாத்தியமில்லை. காலச் சூழ்நிலை மாற்றம், மக்களின் விருப்பு வெறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பன இந்த மாற்றங்களை, திருத்தங்களை வேண்டி நிற்கின்றன. ஆயினும் இந்த மாற்றங்கள் தனிநபர்களின் சுயலாபத்திற்காக அல்லாமல் பொதுமக்களின் ஒட்டுமொத்த நலனுக்காகச் செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதுவரை இடம்பெற்ற அரசியலமைப்புத் திருத்தங்களைப் பொறுத்தளவில் 13 ஐ தவிர ஏனைய திருத்தங்கள் எல்லாமே. அரசியல் நோக்கங்களுக்காக செய்யப்பட்டவை என்பது பலரது அபிப்பிராயமாகும். இனி காலத்திற்குக்காலம் மூல யாப்பில் செய்யப்பட்ட திருத்தங்களை சுருக்கமாக ஆராய்வோம்.

### முதலாவது அரசியல். யாப்புச் சீர்திருத்தம் (20.11.1978)

இத்திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 140 ஆவது உறுப்புரை திருத்தம் செய்யப்பட்டது. இந்தத் திருத்தத்தின் பிரகாரம் மேல் நீதிமன்றத்தின் மூலம் விசாரணை செய்யப்பட வேண்டிய சில சட்ட ரீதியான விடயங்கள் உயர் நீதிமன்றத்தின் பொறுப்பில் விடப்பட்டது.

### இரண்டாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (06.02.1979)

இலங்கை வரலாற்றில் சுயலாபத்திற்கான சுயநலவாத அரசியல் சித்து விளையாட்டுக்கள் அவ்வப்போது நடைபெறுவது அரசியல் வரலாறு. இந்தத் திருத்தமும் குறுகிய அரசியல் நோக்கத்திற்காகவே மேற்கொள்ளப்பட்டதாக அரசியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தி தனது அரசின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதே ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் நோக்கமாக இருந்ததெனலாம்.

இந்தத் திருத்தத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டின் மூல யாப்பிற்கமைய ஏதாவது கட்சியொன்றின் உறுப்பினரொருவர் தான் அங்கம் வகிக்கும் கட்சியை விட்டு விலகினால் அல்லது கட்சியால் அவர் வெளியேற்றப்படுமிடத்து அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி செல்லுபடியற்றதாகிவிடும்.

ஆனால் 2 ஆம் அரசியல் யாப்பு திருத்தின் மூலம் இவ்வாறான பதவியிழப்பு மட்டுப்படுத்தப்படுகின்றது. பாராளுமன்றப் பரிசீலனை மற்றும் 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் வழிமொழிவதன் மூலம் அவரின் உறுப்பினர் பதவி பறிபோகாத வண்ணம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் கட்சி விட்டு கட்சி தாவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்கு பாதுகாப்புக் கிடைத்தது. இந்தத் திருத்தத்தின் மூலம் எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு கட்சி தாவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி பறிபோக மாட்டாது. ஆனால் ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு கட்சி தாவும் பாராளுமன்ற உறுப்பினரின் பதவி பறிபோகும் சாத்திய நிலை காணப்பட்டது. இந்தத் திருத்தத்தின் மூலம் வெறும் 8 ஆசனங்களுடன் எதிர்க்கட்சிப் பதவியைக்கூட தக்கவைக்க முடியாத மிகவும் பலவீனமாக இருந்த இலங்கை சுதந்திரக்கட்சியை மென்மேலும் பலவீனமாக்கும் நோக்கமும் இதன் அடிப்படையாகக் காணப்பட்டது. இந்த திருத்தம் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசியல் சாணக்கியத்தைப் பறைசாற்றும் ஒரு திருத்தமாக அமைந்ததாக ஒரு சாராரும் அவ்வாறல்லாமல் இத்திருத்தம் அவரின் அரசியல் கபடத்தனத்தை காட்டுவதாக இருந்ததாக பிறிதொரு சாராரும் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த யாப்புத் திருத்தத்தினால் 1989 வரை பாராளுமன்றத்தின் ஸ்திரத்தன்மையைப் பேண ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் இயலுமாக இருந்தது.


### மூன்றாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (27.08.1982)

மூன்றாவது திருத்தமானது அரசியலமைப்பின் 7 ஆவது அத்தியாயத்தின் உறுப்புரை 31(3) இல் செய்யப்பட்ட திருத்தமாகும். இதன் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தின் முதல் 4 வருடகாலம் முடிவடைந்த பின்பு ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி மக்கள் அபிப்பிராயத்தைப் பெற்று ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மீண்டும் ஒரு தடவை பெற்றுக்கொள்ள இயலச் செய்வதாகும்.

அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திருத்தமானது பிற்காலத்தில் பல்வேறான விமர்சனங்களுக்குள்ளாகியது.

(தொடரும்...)

சி.பிரணவன்



நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்காவின் மகத்தான தலைவர். ஓராண்டு, ஈராண்டல்ல... இருபத்தேழு ஆண்டுகாலம் சிறையில் வாடியவர். நீண்ட போராட்டத்துக்குப் பிறகு அவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொள்கிற தருணம்.

அப்போது ஆற்றிய உரையில் தன் சகாக்களைப் பார்த்து மண்டேலா சொன்னார்... "இந்தியா இருக்கும் திசையை நோக்கி வணங்கிவிட்டு, அதிகாரப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். ஏன் தெரியுமா... இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே வழிகாட்டிய அண்ணல் காந்தியடிகள் பிறந்த புண்ணிய பூமி அது." மண்டேலா தொடங்கி மார்ட்டின் லூதர்கிங் ஜூனியர் வரை எத்தனையோ பேருக்கு காந்தி ஓர் உதாரண மனிதர். அவருக்கும் தமிழகத்துக்கும் ஆரம்பத்திலிருந்தே ஆத்மார்த்தமான ஒரு தொடர்பு உண்டு.

தென்னாபிரிக்கா. காந்தி சட்டத்தரணியாகப் பணியாற்றிக்கொண்டிருந்த காலம். ஒருநாள் கூலித் தொழிலாளி ஒருவர் காந்தியின் அலுவலகத்துக்கு வந்தார். அறைக்குள் நுழைவதற்கு முன்னதாக, தன் தலையிலிருந்த தலைப்பாகையைக் கழற்றினார். அதைக் கையில் வைத்துக்கொண்டு, காந்திக்கு முன்பாகக் கைகட்டி நின்றார். வந்தவர் ஒரு தமிழர். ஆங்கிலேய முதலாளி ஒருவரின் அடிமை ஊழியர், பெயர் பாலசுந்தரம்.

அவரைப் பார்த்தார் காந்தி. வாய், முகமெல்லாம் அடிபட்டுப் புண்ணாகியிருந்தன. "யார் நீங்கள்... உங்களுக்கு என்ன வேண்டும்... எதுவாக இருந்தாலும் தலைப்பாகையைத் தலையில் கட்டிக்கொண்டு பிறகு பேசுங்கள்."

"பெரிய மனிதர்களுக்கு முன்னால் தலைப்பாகையோடு இருக்கக் கூடாது. அது மரியாதை அல்ல."

"நானும் உங்களைப்போலச் சாதாரண மனிதன் தான். அதிலும், உங்களைவிட வயதில் இளையவன். தலைப்பாகையைக் கட்டிக் கொள்வதாக இருந்தால் மேற்கொண்டு பேசுங்கள். இல்லையென்றால் வெளியே போய்விடுங்கள்."

அன்றைக்கு முதன்முறையாக ஒரு பெரிய மனிதருக்கு முன்னால் தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு நின்றார் பாலசுந்தரம். அவர் முகத்தில் மகிழ்ச்சி ததும்பி வழிந்தது. வாழ் நாளெல்லாம் அடிமையாக வாழ்ந்த ஒருவருக்கு, தானும் மனிதன், தனக்கும் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உண்டு என்பதால் எழுந்த பெருமகிழ்ச்சி அது. தன் எஜமானரால் மனிதாபிமானமில்லாமல் நடத்தப்பட்ட, கடுமையாகத் தாக்கப்பட்ட பாலசுந்தரத்தின் வழக்கை எடுத்து நடத்தினார் காந்தி. அதில் வெற்றியும் பெற்றார். அந்த வழக்கு, தென்னா பிரிக்காவுக்கே அவரை அடையாளம் காட்டுவதாக அமைந்து போனது. ஓராண்டுப் பணியை முடித்து விட்டு, இந்தியாவுக்குத் திரும்புவதாக இருந்தார். ஆனால், தென்னாபிரிக்காவில் நிலவிய சூழல், அங்கேயே அவரை 21 ஆண்டுகளுக்குத் தக்கவைத்துக் கொண்டது.

'சத்தியாக்கிரஹா' என்ற நூலில் காந்தியடிகள் இப்படிக் குறிப்பிடுகிறார்... "தென்னாபிரிக்காவில் பாலசுந்தரம்தான் என் கண்களைத் திறந்து விட்டவர். அவர்தான் எனக்கு ஆசிரியர். அவர்தான் என்னைப் போராளியாக மாற்றியவர்..." பாலசுந்தரம் மட்டுமல்ல, தில்லையாடி வள்ளியம்மை, ஆங்கிலேயர்களின் சித்திரவதையால் 17 வயதில் இறந்துபோன நாகப்பன், 18 வயதில் இறந்துபோன நாராயணசாமி போன்ற தமிழர்களை அந்த நூலில் குறிப்பிடுகிறார் காந்தி.

"நானும் உங்களைப்போலச் சாதாரண மனிதன்தான். அதிலும், உங்களைவிட வயதில் இளையவன். தலைப்பாகையைக் கட்டிக் கொள்வதாக இருந்தால் மேற்கொண்டு பேசுங்கள். இல்லையென்றால் வெளியே போய்விடுங்கள்."




தன்னை சத்தியாக்கிரகியாக மாற்றியவர்கள் தமிழர்கள் தாம் என்பதால், அவர்கள்மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு. அது, 1921ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி. மதுரை, மேலமாசி வீதியில், ராம்ஜி கல்யாண் சேட்ஜி என்ற குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவரின் வீட்டில் தங்கியிருந்தார் காந்தி. அன்றைக்கு நடைபெற விருந்த நெசவாளர் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தார். காலையில் அறையைவிட்டு வெளியே வந்தார். அவரைப் பார்த்தவர்கள் அதிர்ந்துபோனார்கள். இடுப்பில் நான்கு முழ வேட்டி, மேற்சட்டை இல்லை.

"இனி இதுதான் என் நிரந்தர உடை" என்றார் காந்தி.

"கதர் வாங்குங்கள்... கதர் உடை அணியுங்கள்" என்று பலருக்கும் அறிவுறுத்துவது காந்தியின் வழக்கம். ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர், "நீங்கள் எளிதாகச் சொல்லி விட்டீர்கள். கதர் வாங்கும் அளவுக்கு எங்களிடம் காசில்லையே!" என்று கேட்டார்.

அதற்குப் பிறகுதான் காந்தி தன் கோலத்தை மாற்றினார். எளிய ஆண்டிக்கோலத்தில் நான்கு முழ வேட்டியைச் சுற்றிக்கொண்டு வெளியே வந்தார். நெசவாளர் மாநாட்டில் கலந்து கொண்டார். தன் வாழ்நாள் முழுக்க அந்தக் கோலத்துடனேயே இருந்தார். லண்டன் வட்ட மேசை மாநாட்டுக்கே அதே உடையோடுதான் போனார்.

தான் எதைப் பிறருக்கு உபதேசித்தாரோ அப்படியே வாழ ஆசைப்பட்டார். தீண்டாமையை எதிர்த்து ஒரு இரதயாத்திரை நடத்தினார். பூரி ஜகந்நாதர் ஆலயத்தினருகே ரதம் சென்றுகொண்டிருந்தது. அந்தக் கோயிலுக்கு கஸ்தூரிபாய், மகனோடு சென்றுவிட்டு வந்த செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்தார். "என் மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்காத அந்த ஆலயத்துக்கு எப்படி நீ செல்லலாம்?" என்று கடிந்து கொண்டார்.

தமிழ் நாட்டின் குன்றக்குடிக்கு அருகே சிராவயல் என்ற கிராமத்தில் ஆசிரமம் ஒன்றை ஓர் எளிய மனிதர் நடத்திக் கொண்டிருந்தார். அவரைத் தேடிப்போனார் காந்தி. ஆசிரமத்தின் செயற்பாடுகளைக் கண்டு வியந்து போனார். அதை நடத்தி வந்தவர் ஜீவா. அவரிடம், "உங்களுக்குச் சொத்து எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்டார் காந்தி.

"இந்த தேசமே என் சொத்து."

"இல்லை ஜீவா... நீங்கள்தான் இந்தத் தேசத்தின் சொத்து. "இப்படி காந்தியடிகளை பாதித்த தமிழர்கள் ஏராளம்.

"உழைக்காமல் உண்பது திருட்டுக்குச் சமம்" என்பார் காந்தி.

செல்வந்தர் பிர்லா ஒருமுறை காந்தியிடம் கேட்டார், "மனிதன் உண்டு, உடுத்தி, இன்பமாக வாழ எவ்வளவு பணம் வேண்டும்?"

"எவ்வளவுக்குள் இன்பமாக வாழ முடியுமோ, அவ்வளவு இருந்தால் போதும்."

"நிறைய சம்பாதித்து, அதிகமாகச் செலவிடுவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா?"

"இயற்கைத்தாய், ஒவ்வொருவருக்கும் சாதாரண வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களைத்தான் உற்பத்தி செய்கிறாள். எதையும் வீணடிப்பதை அவள் விரும்புவதில்லை. ஒருவர், தன் தேவைக்கு மேல் பயன்படுத்தினால், அது அடுத்தவருக்குக் கிடைக்காமல் போய்விடும். தேவைக்கு மேல் பயன்படுத்துபவன் என்னளவில் ஒரு கொள்ளைக்காரனே."

காந்தி சமத்துவ, சமூக அமைப்பை உருவாக்க விரும்பினார். கார்ல்மார்க்ஸ் விரும்பிய சமத்துவமும், காந்தி சமைக்கத் துடித்த சர்வோதயமும் வர்க்க பேதங்களற்ற வாழ்க்கை முறைதான். எந்த மாற்றமும் வன்முறைகளால் ஏற்பட முடியாது என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை.


"நான் ஒரு வன்முறை தவிர்த்த கம்யூனிஸ்ட்" என்பார் காந்தி. 'வாழ்க்கையின் வெற்றிக்கு, பொருளாதார மேம் பாட்டுக்கு, ஏழை-பணக்காரன் என்ற வேறுபாட்டை அகற்றுவதற்குக் கூட்டுறவுதான் சரியான வழி' என்பது காந்தியின் நம்பிக்கை. அந்தக் கூட்டுறவுத் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட தொழிற்சாலைகள் குன்றக்குடியில் இயங்கிவந்தன.


காந்தி, சுதந்திர இந்தியாவில் 125 ஆண்டுகள் வாழ ஆசைப்பட்டார். ஆனால், 'இந்தியா என்னோடு இல்லை' என்ற விரக்தியைத்தான் வாழ்வின் இறுதியில் சந்தித்தார். முதல்நாள் பிரார்த்தனைக் கூட்டத்தில் வெடிகுண்டு வீச்சுத் தாக்குதலிலிருந்து தப்பித்த காந்தி, தன் பேத்தி மனுவிடம், "மனு" அந்த வெடிகுண்டுத் தாக்குதலிலேயே நான் இறந்திருக்க வேண்டும். யாராவது என்னை நேருக்கு நேர் துப்பாக்கியால் சுடவேண்டும். அப்போது நான் "ராம்... ராம்..." என்று சொல்லிக்கொண்டே மண்ணில் விழுந்து மடிய வேண்டும். அப்படியொரு மரணத்தை நான் சந்தித்தால்தான் நான் மகாத்மா. அப்படி நடக்கவில்லையென்றால், நான் மகாத்மா இல்லை என்பதை நீ கூரைமீது ஏறி நின்று கூவ வேண்டும்" என்றார்.

இந்த நாடு விடுதலையடைந்து இத்தனை ஆண்டுகள் கடந்தநிலையிலும் இன்னமும் வறுமையை, ஏழ்மையை மாற்ற முடியாமல் தத்தளித்துக்கொண்டுதான் இருக்கிறது. ரூபாய் நோட்டுகளைக் கும்பிட்டுக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்து, அதே ரூபாய் நோட்டிலிருந்தபடி சிரித்துக் கொண்டிருக்கிறார் காந்தி.

# இனப்பிரச்சினைத் தீர்வை வலியுறுத்த தமிழ்த் தலைமைகள் ஒன்றுபடவேண்டும்

இலங்கைத்தீவின் ஆட்சியதிகாரம் புதிய பரிணாமத்தில் தடம் பதித்திருக்கிறது. நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் தென்னிலங்கை அரசியல்களத்தில் புதிய உத்வேகத்தையும் மாற்றத்தையும் உருவாக்கியுள்ளது. புதிய அரசியல் கட்சியான ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமுன அதிக பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது. அதேபோன்று மற்றோர் புதிய கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக உருவெடுத்து நிற்கிறது.







இந்நிலையில் பாரம்பரியமாக மாறிமாறி இலங்கைத்தீவில் அரச கட்டிலில் அமர்ந்திருந்த பழம் பெருமை வாய்ந்த கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை புறந்தள்ள பட்டுள்ள நிலைமை அரசியல் களத்தில் தசாப்த மாற்றமாகவும் புதியவற்றின் தேவையை உணர்வதாகவுமே நோக்க வேண்டியுள்ளது.

இதேவேளை வடக்கு அரசியல் களத்திலும் தேசிய இனப்பிரச்சினையை முன்னிறுத்திய கோரிக்கைகளுக்கு அப்பால் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, வறுமை தணிப்பு ஆகியவற்றுக்கான செயல்வடிவங்களுக்குரிய மாற்றங்கள் நோக்குதற்குரிய விடயமாகியுள்ளது.

இத்தகையதொரு புதிய அரசியல் களத்தில் இலங்கையில் நீறுபூத்த தணலாகக் காணப்படுகின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வு சர்வ நிசப்தமாக அடங்கிப் போயி ருக்கிறது. அழகிய இலங்கைத்தீவில் சகல இன மக்களும் சமத்துவமாக சம உரிமை, சம வாய்ப்புக்களுடன் ஐக்கியம், சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய நிலைமை உருவாக்கப்பட்டாலே உண்மையான சமாதானமும் அமைதியும் சாத்தியமாகும் என்பது திட்ட வட்டமான முடிவாகும்.

இந்நிலையில் தீயெரிந்த இலங்கைத் தேசத்தில் அமைதி, சமாதானம் என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வு அனைவருக்கும் பொருத்தப்பாடானதாக அமைகின்றபோதே சாத்தியமாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு தசாப்தம் கடந்துள்ளது. இத்தகைய நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதற்கான முன்னேற்பாடுகள் என்பது இன்றைய சூழலில் மிகவும் அவசியமானதும் நாட்டின் சுபீட்சத்தின் அத்திபாரமானதுமான விடய மாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் புதிய அரசாங்கத்தின் நிலைப்பாடு, கொள்கை என்ன என்பதும் அதன் அமைப்பு எவ்வாறு என்பதும் புதிய அரசிய லமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்படும் என நம்பிக்கை வெளியிடப்படுகிறது. இந்நிலையில் அரசியல் ரீதியாக சிதறியிருக்கின்ற தமிழ்த் தலைமை கள் தமக்குள் ஒன்றுபட்டு தீர்வு தொடர்பில் ஒரு பொருத்தமான பொறிமுறையினை தமக்குள் வகுத்துக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையும் கட்டாயமானதுமாகும். மேலும் தென்னிலங்கையில் உள்ள இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கும் தரப்புக்களுடன் இணைந்து தீர்வுக்கான வலியுறுத்தல்களை செய்யவேண்டியதும் இப்போதுள்ள தமிழ்த் தலைமைகளின் முதன்மைப் பணியாகும்.

இத்தகையதொரு களநிலையில் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் நிச்சயமாகச் சிறந்த தீர்வினை வழங்க வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வெளியிட்ட கருத்து மிகவும் வரவேற்கத்தக்கதும் காலத்தின் தேவைக்குரியதுமாகும். தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் தீர்வு வழங்கவேண்டும். தீர்வு வழங்கும் பொறுப்பில் இருந்து அரசாங்கம் நழுவ முடியாது. அரசு நழுவிச் செல்லவும் விடமாட்டோம் என உறுதியாகவும் திட்டவட்டமாகவும் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கும் கருத்து புதிய அரசுக்குள் விடுக்கப்பட்ட நல்ல வரவேற்கத்தக்க சிந்தனையாகும். இத்தொடக்கப் புள்ளியில் இருந்து தீர்வுக்கான முயற்சிகள் தொடர்வதன் மூலம் நல்ல ஆரோக்கிய களம் அமைக்கப்பட்டு முடிவுகள் சிறப்பாக அமைய வேண்டும்.

**ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு தசாப்தம் கடந்துள்ளது. தமிழ்மக்களின் நீண்ட நெடுந்துயரம் இனியும் தொடரக் கூடாதென்ற புதிய முடிபை தமிழ் அரசியல் தலைமைகள் சத்தியப்பிரமாணமாகக் கொள்ள வேண்டும்**

இலங்கையின் 72 ஆண்டு அரசியல் வரலாற்றில் ஏறத்தாழ ஆறு தசாப்தகாலமாக புரையோடியிருக்கும் இனப்பிரச்சினை, தமிழ் மக்களை மிகவும் மோசமாகப் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது. அனைவரும் மனிதாபிமானத்தோடு உணரவேண்டிய விடயமாக இனப்பிரச்சினையின் தாக்கம் இலங்கையில் படர்ந்துள்ளது. பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த அநாதைகள், அங்கவீனர்கள், இளம் விதவைகள், காணாமல் போனோர், சிறைகளில் வாடுவோர், காணிகளை, பூர்வீக நிலங்களை இழந்தோர், அகதிகளானோர், புலம்பெயர்ந்தோர் என அவலப்பட்டியல் நீண்ட நெடுந்துயராகியுள்ளது.

தமிழ்மக்களின் நீண்ட நெடுந்துயரம் இனியும் தொடரக் கூடாதென்ற புதிய முடிபை தமிழ் அரசியல் தலைமைகள் சத்தியப்பிரமாணமாகக் கொள்ளவேண்டும். தொடர்ந்தும் தமிழ்மக்களை, இலங்கையின் அரசியலை ஏமாற்றுகின்ற வகையில் சாட்டுப் போக்குகளைக் கூறிக் கொண்டு காலக்கழித்தலை ஏற்படுத்தாமல் மிகவும் பொருத்தமான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறைகளில் செயற்படுவது மிகவும் அவசியமான செயற்பாடாகும்.

நமக்கான சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்பதிலும் பார்க்க நாமே அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி தீர்வை விரைவுபடுத்தத் துணியவேண்டும் என்பதும் காலத்தின் அவசியமாகும். இம்முயற்சிகளில் வெற்றி பெற சர்வதேச உதவிகள் சாத்தியப்படவேண்டும் என்பதும் மறுக்கப்பட முடியாத விடயம். எனவே அந்த வல்லமை அறிவாற்றல் கொண்ட தமிழ்த்தலைமைகள் அதனைச் செயற்படுத்த சர்வதேசப் பார்வையை தமிழ்மக்களின் உரிமை, சுதந்திரம் என்பதன் மீது உட்பாய்ச்ச் சரியான களம் அமைத்துச் செயற்பட முன்வரவேண்டும். நமக்குள் வேற்றுமைப்பட்டு நின்று கொண்டால் எமது அடிப்படைகளை வெற்றி கொள்ள இயலாது என்பதை தமிழ்த் தலைமைகள் இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்.

மாறிவருகின்ற உலகப் போக்கில் ஜனநாயகத்தை உச்சமாக மதிக்கின்ற தேசங்களில் கூட நிற, மத, இன, சமூக வெறித்தனங்கள் கோர முகங்களை வெளிப்படுத்தி நிற்கின்ற போக்கு ஆங்காங்கே அச்சமூட்டும் வகையில் வெளிப்பட்டு நிற்கின்றன. இத்தகைய நிலையில் சிறுபான்மை சமூக மக்கள் தமக்கான அடிப்படை ஆயுதமாக ஒற்றுமையைப் பலப்படுத்துவதே இப்போதைய அடிப்படைத் தேவையாக மாறியுள்ளது. இந்நிலையில் தமிழ்மக்களும் தமக்குள் ஒன்றுபட்டு தமக்கான பாதையை உருவாக்கும் தெளிவான அரசியலைப் புரிந்தவர்களாக மாறவேண்டிய தேவையும் உணரப்படுகின்றது. தெளிவற்றவர்களாக மக்கள் சமூகம் இருப்பதனாலேயே ஏமாற்றங்கள் எம்மைச் சந்திக்கின்றன. எனவே ஒழுங்கான கட்டமைப்புடன் தமிழ் மக்கள் பயணிக்க வேண்டும் என்ற யதார்த்தமும் பொருத்தப்பாடானதாகவே உள்ளது.

தமிழ்மக்களின் வாழ்வியல் அபிலாசைகள் உரிமை மறுப்பற்ற பாதுகாப்பான ஜனநாயகம் சார்ந்த அடிப்படையில் அமையவேண்டும். வாழ்வியல் கோலத்தில் மாற்றங்கள் என்பதும் பொருத்தப்பாடான நடைமுறைகள் என்பதும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை நோக்கிய தேர்வுகள் என்பதும் உரிமை மறுப்பற்ற பாதுகாப்பான வாழ்வு என்பதும் புண்பட்ட உள்ளங்களுக்கான ஆற்றுப்படுத்தல்களாக அமைந்ததுடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது உறுதியான முடிவாக அமைய வேண்டும்.

**கோவையூர் ஜெயன்**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : கேளடி கண்மணி
இயற்றியவர் : கங்கை அமரன்
இசை : இளையராஜா
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்பிரமணியம்



மண்ணில் இந்தக் காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ
எண்ணம் கன்னிப் பாவையின்றி ஏழு ஸ்வரந்தான் பாடுமோ
பெண்மை இன்றி மண்ணில் இன்பம் ஏதடா
கண்ணை மூடிக் கனவில் வாழும் மானிடா

மண்ணில் இந்தக் காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ
எண்ணம் கன்னிப் பாவையின்றி ஏழு ஸ்வரந்தான் பாடுமோ
பெண்மை இன்றி மண்ணில் இன்பம் ஏதடா
கண்ணை மூடிக் கனவில் வாழும் மானிடா

வெண்ணிலவும் பொன்னி நதியும் கன்னியின் துணையின்றி
என்ன சுகம் இங்கு படைக்கும் பெண்மையின் சுகமின்றி
சந்தனமும் சங்கத் தமிழும் பொங்கிடும் வசந்தமும்
சிந்தி வரும் பொங்கும் அமுதம் தங்கிடும் குமுதமும்
கன்னி மகள் அருகில் இருந்தால் சுவைக்கும்
கன்னித்துணை இழந்தால் முழுதும் கசக்கும்
விழியினில் மொழியினில் நடையினில் உடையினில்
அதிசய சுகம் தரும் அனங்கிவள் பிறப்பிது தான்

மண்ணில் இந்தக் காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ
எண்ணம் கன்னிப் பாவையின்றி ஏழு ஸ்வரந்தான் பாடுமோ

முத்து மணி ரத்தினங்களும் கட்டிய பவளமும்
கொத்து மலர் அற்புதங்களும் குவிந்த அதரமும்
சிற்றிடையும் சின்ன விரலும் வில்லெனும் புருவமும்
சுற்றி வர செய்யும் விழியும் சுந்தர மொழிகளும்
எண்ணி விட மறந்தால் எதற்கோர் பிறவி
இதனையும் இழந்தால் அவன் தான் துறவி
முடி முதல் அடி வரை முழுவதும் சுகம் தரும்
விருந்துகள் படைத்திடும் அரங்கமும் அவளல்லவா

மண்ணில் இந்தக் காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ
எண்ணம் கன்னிப் பாவையின்றி ஏழு ஸ்வரந்தான் பாடுமோ
பெண்மை இன்றி மண்ணில் இன்பம் ஏதடா
கண்ணை மூடிக் கனவில் வாழும் மானிடா

மண்ணில் இந்தக் காதலன்றி யாரும் வாழ்தல் கூடுமோ
எண்ணம் கன்னிப் பாவையின்றி ஏழு ஸ்வரந்தான் பாடுமோ

# போலியோவை வென்ற ஆபிரிக்கா


உலகின் கொடூரமான நோயாகக் கருதப்பட்ட சின்னம்மை இன்று உலகம் முழுவதிலும் இருந்து விரட்டப்பட்டுள்ளது. அதற்கான காரணம், தீவிர தடுப்பூசிகள் வழங்கப்பட்டதே. அதற்கு அடுத்ததாகப் பல குழந்தைகளின் வாழ்வை பாதித்த போலியோ, இன்று பல நாடுகளில் இல்லை. இவ்வாறு ஒவ்வொரு நாடாக போலியோ இல்லாத நாடாக மாறி வரும் சூழலில், ஆபிரிக்கா கண்டம் மொத்தமும் தற்போது வைல்ட் போலியோ வைரஸால் ஏற்படும் போலியோ நோய் இல்லாத பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைத் தாக்கும் போலியோ, முடக்கு வாதத்தை ஏற்படுத்துகிறது. தண்ணீர் மூலம் பரவக்கூடிய போலியோ வைரஸ், நரம்பு மண்டலத்தைத் தாக்குவதால் முடக்கு வாதம் ஏற்படுகிறது. போலியோ வைரஸால் சுவாசத் தசைகள் செயலிழந்து இறப்புவரை ஏற்படலாம்.

போலியோ வைரஸில் மூன்று ஸ்ட்ரெய்ன்கள் உள்ளன. அதில் இரண்டு ஸ்ட்ரெய்ன்கள் உலகில் இப்போது இல்லை. மீதமுள்ள அந்த ஒரு வைல்ட் ஸ்ட்ரெய்ன், தற்போது ஆபிரிக்காவிலிருந்து ஒழிக்கப்பட்டுள்ளது. போலியோவுக்குத் தடுப்பு மருந்தே சிறந்த மருந்து. 95 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட ஆபிரிக்கர்களுக்குத் தடுப்பு மருந்தால் நோய் இருப்பது தெரிய வந்தது. அதற்குப் பிறகு, இரண்டு ஆண்டுகளுக்கு போலியோ பாதிக்கப்பட்ட யாரும் கண்டறியப்படவில்லை. ஆனால், 2016 ஆம் ஆண்டு ஆபிரிக்க, நைஜீரியாவில் ஒரு நோயாளி போலியோவால் தாக்கப்பட்டார். இது ஆபிரிக்காவுக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தியது.

நைஜீரியாவில் உள்ள போர்னோ பகுதி இஸ்லாமியத் தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி என்பதால், அங்கு சென்று தடுப்பு மருந்து அளிப்பது சவாலான காரியமாக இருந்தது. ஆனாலும் சுகாதாரப் பணியாளர்கள் படகு வழியாகச் சென்று தங்கள் பணியை மேற்கொண்டனர். சுகாதாரப் பணியாளர்களில் 95 சதவிகிதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக, தடுப்பு மருந்து பற்றிய தவறான தகவல்களும் புரளிகளும் தடுப்பு மருந்துக்குப் பெரிய தடையாக அமைந்தன. 2003 ஆம் ஆண்டு சில இஸ்லாமியத் தலைவர்கள், தடுப்பு மருந்தில் இனப் பெருக்கத்தை தடை செய்யக்கூடிய மருந்து இருப்பதாகவும் இஸ்லாமியப் பெண்களுக்கு குழந்தையின்மையை ஏற்படுத்த இது அமெரிக்காவின் சதித் திட்டம் என்றும் பரப்பிய வதந்தியால் கனோ மற்றும் சில வடக்கு மாநிலங்களில் தடுப்பு மருந்துக்கு மறுப்பு எழுந்தது. நைஜீரியன் ஆராய்ச்சியாளர்கள் இது பொய்யான



எதிர்ப்புசக்தி ஏற்பட்டுள்ளது.

ஆபிரிக்கா போலியோவை வென்றது எளிதான காரியமல்ல. மிகவும் பின்தங்கிய கண்டமாகக் கருதப்படும் ஆபிரிக்கா, போலியோவுக்கு எதிராக முழு மூச்சில் போராடியுள்ளது. 10 ஆண்டுகளாக உலகில் அறியப்படும் போலியோ நோயாளிகளில் பாதிப் பேர் நைஜீரியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இதனால் அங்கு போலியோ தடுப்பூசி முகாம்கள் அதிகளவில் நடத்தப்பட்டன. தீவிரவாதத் தாக்குதல் எச்சரிக்கை உள்ள பதற்றமான இடங்களில்கூட தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன. இதில் பல சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் தன்னலமற்ற உயிர்த்தியாகத்துக்குப் பரிசாக போலியோ இல்லாத நாடாக ஆபிரிக்கா உருவெடுத்துள்ளது.

1966 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் 75 ஆயிரம் குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் நெல்சன் மண்டேலா, "போலியோவை ஆபிரிக்காவில் இருந்து ஒழிப்போம்" என்ற திட்டத்தை உருவாக்கி, அதில் பல மில்லியன் சுகாதாரப் பணியாளர்களை ஈடுபடுத்தினார். கிராமம் கிராமமாகத் தடுப்பு மருந்து வழங்கும் பணி நடைபெற்றது. இன்றைய போலியோ இல்லாத ஆபிரிக்காவுக்கான அடிக்கல் அன்றே நாட்டப்பட்டது.

2014 ஆம் ஆண்டு சோமாலியா, புன்லேண்ட் பகுதியில் வைல்ட் போலியோ வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு போலியோ நோயாளி தகவல் எனத் தெரிவித்தும் வதந்திகள் வந்த வண்ணமிருந்தன.

ஒரு நாடு போலியோ அற்ற நாடாக மாறினாலும், மற்ற நாடுகளின் மூலம் உள்ளே நோய்த்தொற்று ஏற்படலாம் என்பதால் உலக அளவில் போலியோ நோய் அழியும் வரை கண்காணிப்பு அவசியம் என்று உலக சுகாதார மையம் கூறியுள்ளது. தற்போது போலியோ தொற்று இருக்கும் இரு நாடுகள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2013 ஆம் ஆண்டு போகோஹறாம் பிரிவினர், கனோ சுகாதார மையத்தில் தடுப்பூசி அளிக்க வந்த 9 பெண் சுகாதாரப் பணியாளர்களைச் சுட்டுத் தள்ளினர். இவ்வாறு பல இன்னல்களைக் கடந்து, நெல்சன் மண்டேலாவின் கனவு இன்று நனவாகியுள்ளது. இதைச் சாத்தியமாக்கியது... போலியோவுடன் வாழும் நோயாளிகள், மதத்தலைவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், தன்னார்வலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியே.

போலியோவால் பாதிக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவரான மிஸ்பாகு லாவான் திடீ, "போலியோ தடுப்பு மருந்துக்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். நாங்கள் அவர்களிடம் சென்று பேசுவோம். எங்களைப்போல் உங்கள் குழந்தைகள் கஷ்டப்படாமல் இருப்பதைத் தடுப்பது உங்கள் கடமை என்று அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவோம்" என்கிறார்.




தமிழ் சினிமா தற்போது மெல்ல டிஜிற்றல் தளத்திற்கு மாறி வருகிறது. வரும் காலத்தில் இனி தியேட்டர்களுக்கு உச்ச நடிகர்கள் படத்திற்கு மட்டும் போனால் போதும் என்ற நிலை உருவாகிவிடும் போல. அந்த அளவிற்கு OTT ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த வகையில் தற்போது OTT யில் வெளிவந்துள்ள லாக்அப் ரசிகர்களை கவர்ந்ததா? பார்ப்போம்.

**கதைக்களம்**

படத்தின் ஆரம்பத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி கொலை செய்யப்படுகிறார். அதைத்தொடர்ந்து அந்த கொலை நடந்த சில தூரம் கடந்து ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்த வழக்கை விசாரித்து கைது வரைக்கும் சென்ற நிலையில், மற்றொரு பொலிஸ் இல்லை இந்த இரண்டு சம்பவங்களுக்கும் ஏதோ தொடர்புண்டு. கண்டிப்பாக இதை கனேக்ட் செய்து பார்க்க வேண்டும் என்று இரண்டு கேஸையும் கையில் எடுக்க அதன் பின் யார் யார் இதற்குள் உள்ளார்கள் என்பதன் விபரம் ஒவ்வொன்றாக வெளிவருவதே இந்த லாக்அப்.

**படத்தை பற்றிய அலசல்**

வைவவ் சமீபத்திய இளம் நடிகர்களில் நல்ல பொழுதுபோக்கு படங்களை தேர்ந்தெடுத்து நடிப்பவர். இவர் இதிலும் தன் நடிப்பை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், படம் முழுவதும் ஒரு இறுக்கத்துடனேயே இருந்து அதற்கான காரணமும் தெரியவருவது நன்றாக இருந்தது. படத்தின் வன் மான் ஷோ என்று வெங்கட் பிரபுவை சொல்லலாம். கே.எஸ். ரவிக்குமார், மன்சூர் அலிகான் போன்றோர் பொலிஸாக நடித்தால் எப்படியிருக்கும், செம்ம. சர்காஸிட்டிக் ஆக இவர் அடிக்கும் அலும்பு அண்ட் கண்டுபிடிக்கும் விடயம் என சபாஷ். ஆனால், இப்படி ஒரு மர்டர் மிஸ்ட்ரி படம் என்றாலே அடுத்து என்ன அடுத்து என்ன என்ற ஆர்வம் வரும். அப்படியான ஆர்வம் இந்த படத்தில் பல இடங்களில் வந்தாலும் சில இடங்களில் கொஞ்சம் தொய்வாக தான் உள்ளது. வாணி போஜனுக்கு பெரிய கதாபாத்திரம் ஏதும் இல்லை, வழக்கமான ஹீரோயின் கதாபாத்திரம் தான். படத்தின் நீளம் மிக குறைவு என்றாலும் படம் கொஞ்சம் அதிக நேரம் ஓடுவது போன்ற உணர்வையும் தவிர்க்க முடியவில்லை. அரோல் குரோலி பின்னணி இசை சூப்பர், நல்ல ஹெட்செட்டில் கேட்டால் இன்னும் ரசிக்கலாம்.

**க்ளாப்ஸ்**

வெங்கட் பிரபு ஆக்டிங், படத்தின் டுவிஸ்ட், வசனங்கள், அதுவும் நிகழ்காலத்தை ஒப்பிட்டு எழுதியது.

**பல்ப்ஸ்**


இன்னும் கூட கொஞ்சம் விறுவிறுப்பாக எடுத்திருக்கலாம். மொத்தத்தில் இதுவரை டிஜிற்றலில் வந்த தமிழ் படங்களில் லாக்அப் ஒரு படி மேலே நிற்கிறது.

## பிக்பாஸ்-4 நிகழ்ச்சியின் அதிகாரபூர்வ அறிவிப்பு




நடிகர் கமலஹாசன் தொகுத்து வழங்கும் பிக் பாஸ் சீசன் 4 நிகழ்ச்சி விரைவில் தொடங்க இருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. வெளிநாட்டு தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாகி வந்த 'பிக்பாஸ்' நிகழ்ச்சி கடந்த சில ஆண்டுகளாக இந்திய தொலைக் காட்சிகளிலும் ஒளிபரப்பாகி வருகிறது. இந்தியில் இதுவரை 13 சீசன்கள் முடிந்துள்ளது. தமிழில் 3 சீசன்கள் முடிந்துள்ளது. இதனை கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தமிழ் பிக்பாஸின் 4ஆவது சீசன் நடக்குமா என்பது கேள்விக்குறியாக இருந்தது. இந்நிலையில் விரைவில் பிக்பாஸ் 4 தொடங்க இருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதில் பங்கேற்கும் போட்டியாளர்களின் பட்டியல் விரைவில் வெளியிட இருக்கிறார்கள்.


# மணிவிழா வாழ்த்துக்கள்



**உயர்திரு. சிவஞானசுந்தரம் ஞானசேகரம்**

( ஆசிரிய ஆலோசகர் - வணிகம், யாழ்ப்பாணக் கல்வி வலயம் )

தூய ஆசிரியர் சேவை
துலங்கிடவே பணியாற்றி
நேர்மை நீதி வழுவாத
நெஞ்சத்தார் இவரென- கற்றறிந்தார்
வாஞ்சையுடன் புகழ்ந்தேத்த
மாசற்ற ஆசிரிய ஆலோசகராய்
அன்புடனே வழிகாட்டி
கடமைதனைச் செய்தலே
நல் அறம் எனச் செப்பி நின்ற
பெருமையுடைப் பண்பாளா!
களைப்பறியா நின்சேவைக்கு
நிகரேது உண்டு

உற்றவர் உறவினர் நண்பர்,
அயலவர் என
முகந்தெரியாதார் எவராயினும்
பட்டென்று உதவுகின்ற நின்
பாரி மனம் யார்க்குள


அகவை அறுபது கண்ட இவ்வேளை
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
மணிவிழா நாயகனே!
மாண்புடனே பெருவாழ்வு
வாழ்கவென்று

நண்பர்கள்

# எதிர் அணியை கதற வைத்த ரிக்கி பொண்டிங்

## காலத்தின் பதிவு

**“நாங்களே இப்பதான் ரொம்ப வருடம் கழித்து பைனல்ஸ்’க்கெல்லாம் வந்திருக்கோம். ஆனால் கொஞ்சம் கூட கருணையே இல்லாம இந்த அடி அடிக்கிறானே என இந்தியர்களைப் புலம்ப வைத்தது ரிக்கி பொண்ட்டிங்கின் ஆட்டம்.”**



தோல்விகள் இவருக்கு வெறும் தோல்விகள் அல்ல. அவற்றை அவமானமாக, அசிங்கமாக, அருவருப்பானவையாக எப்போதுமே வெறுத்தவர் ரிக்கி பொண்ட்டிங். கிரிக்கெட் களத்துக்குள் வந்துவிட்டபிறகு எதிரிகளோடு கைகுலுக்குவது, அவர்கள் சிறப்பாக விளையாடும்போது கைதட்டுவது, புன்சிரிப்புகளை பரிமாறிக்கொள்வது... இதெல்லாம் பொண்டிங்கின் பள்ளியில் இல்லை. களத்துக்கு வந்துவிட்டால் அவன் எதிரிதான். எதிரிக்கு ஒரு சிறு வெற்றிகூட கிடைக்கக் கூடாது, அப்படிப்பட்ட ஒரு தருணத்தைக் கூட ஏற்படுத்திவிடாக் கூடாது என்பதில் கவனமாகவும் கடுமையாகவும் இருந்த...கிரிக்கெட் உலகம் பார்த்த ஒரே வீரன் ரிக்கி பொண்டிங்.

பார்ப்பதற்கு பள்ளிக்கூடச் சிறுவன் போல பால் வடியும் முகத்துடன் இருப்பார். ஆனால், களம் இறங்கிவிட்டால் டெரர் ஆகிவிடுவார். களத்துக்குள் வந்துவிட்டால் சமாதானம் எல்லாம் இல்லை... சண்டைதான்... ஒதுங்கிப்போகிறவர்களையும் வம்புக்கு இழுத்துவந்து சண்டை செய்த சண்டைக்காரன், சாகசக்காரன் இந்த ரிக்கி பொண்டிங்.

ரிக்கி பொண்டிங்தான் 13,378 ஓட்டங்கள் அடித்திருக்கிறார். அதேபோல் ஒருநாள் கிரிக்கெட்டில் சச்சின், சங்கக்காராவுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இருக்கிறார். 13,704 ஓட்டங் கள் அடித்திருக்கிறார். இரண்டிலும் சேர்த்து மொத்தமாக 71 சதங்கள் அடித்திருக்கிறார். 144 அரைசதங்கள் அடித்திருக்கிறார்.

168 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கிறார். இதில் 100 டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் வெற்றியைப் பார்த்திருக்கிறார். மார்க் டெய்லர் தலைமையிலான அணியில் மார்க் வாக், ஸ்டீவ் வாக், ஜஸ்ட்டின் லேங்கர் ஆகியோருடன் விளையாட ஆரம்பித்து, கிளார்க் தலைமையிலான அணியில் வொட்ஸன், வோர்ன்ர் ஆகியோருடன் விளையாடி ஓய்வுபெற்றவர் பொண்டிங். இந்த இடைப்பட்ட காலத்தில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் அவுஸ்திரேலியாவின் கப்டனாக இருந்து தொடர்ந்து இரண்டு உலகக் கோப்பைகளைப் பெற்றுத்தந்தவர்.

தொடர்ந்து வெற்றி, தொடர்ந்து கோப்பைகள், தொடர்ந்து சம்பியன் குலுக்கல்களைப் பார்த்து வளர்ந்தவர் என்பதாலோ, என்னவோ இவருக்கு வெற்றிகள் மட்டுமேதான் பிடிக்கும். தோல்வி நிலை வந்துவிட்டால் பொண்டிங் முகத்தைப் பார்க்கவே முடியாது. முகமெல்லாம் சிவந்து, கடுகடுவென ஆகிவிடுவார். இப்போதும் வாய்ப்பு கிடைத்தால் இந்தியாவுக்கு எதிரான அந்த 2011 உலகக் கோப்பை காலிறுதிப்போட்டியைப் பாருங்கள்.

2003, 2007 எனத்தொடர்ந்து இரண்டு உலகக்கோப்பைகளைப் பெற்றுத்தந்தவர் அந்த மூன்றாவது உலகக் கோப்பையும் பெற்று ஹாட்ரிக் அடித்து விடவேண்டும், இந்தியாவைத் தோற்கடித்துவிட வேண்டும் என்று ஆட்டத்தின் இறுதிவரை முயன்றிருப்பார்.

ரிக்கி பொண்டிங் கடைசியாக அடித்த ஒருநாள் சதம் அன்றுதான். 104 ஓட்டங்கள் அடித்து மொத்தமாக இந்தியாவுக்கு 260 ஓட்டங்கள் ரார்கெட்டை செட் செய்திருப்பார் பொண்டிங். ஆனால், சச்சின், கம்பீர், யுவராஜ் சிங் ஆகியோரின் ஆட்டத்தால் வெற்றி இந்தியாவின் பக்கம் போக ஆரம்பித்தது. யுவராஜ் சிங்கின் அரைசதத்தால் இந்தியா வெற்றியை நெருங்கிக்கொண்டிருக்கிறது. மிகவும் எளிதான வெற்றியை நோக்கிப் பயணிக்கிறது இந்தியா. ஆனால், அந்த நிலையிலும் மனதைத் தளர விடாமல் நகங்களைக் கடித்துக்கொண்டே, ஃபீல்ட் செட் அப்பை மாற்றி, பௌலர்களை மாற்றி, பட்ஸ்மன்களின் கவனத்தைத் திசை திருப்ப வார்த்தைகளால் துப்பி என அந்தத் தோல்வியைத் தவிர்க்கப் போராடிக் கொண்டிருந்தார் ரிக்கி பொண்டிங். இந்தியாவுக்கு வெற்றியை அவ்வளவு எளிதாகக் கொடுத்துவிடவில்லை பொண்டிங்.... அதுதான் ரிக்கி தாமஸ் பொண்டிங்கின் கரக்டர்!

பொண்டிங்கின் பொற்காலம் என்பது 2002 இல் தான் தொடங்கியது. ஸ்டீவ் வாகிடம் இருந்து கப்டன்ஸி எடுக்கப்பட்டு, ஆடம் கில்கிறிஸ்ட்டிடம் கொடுக்கப்படும் என எல்லோரும் எதிர்பார்க்க "சண்டைக் காரன்" ரிக்கி பொண்டிங்கிடம் கப்டன்ஷிப் போனது. கப்டன் ஆனால் ப்ரஷர் கூடும், பட்டிங் பாதிக்கப்படும் என்கிற கதைகள் எல்லாம் பொண்டிங்கிடம் செல்லுபடியாகவில்லை. உண்மையில் கப்டன் ஆன பிறகுதான் ஃபார்முக்கு வந்தார் பொண்டிங். அவரது பட்டிங்கில் பவர் கூடியது.

2002-2008 காலகட்டத்தில் மட்டும் 72 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கிறார் பொண்டிங். இதில் இவர் அடித்தது 7269 ஓட்டங்கள். அவரேஜ் 67.93 சதங்கள் மட்டும் 27 அரைசதங்கள் 26 அதே போல் இதே காலகட்டத்தில் 170 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருக்கிறார். 6,320 ஓட்டங்கள் அடித்திருக்கிறார். சச்சின் டென்னிஸ் எல்போ பிரச்சினையால் அவதிப்பட்ட இந்தக் காலத்தில் பொண்டிங்கின் கொடியே சர்வதேச கிரிக்கெட்டில் பறந்தது. இதில் 2003 மற்றும் 2007 இல் மட்டும் ஆண்டுக்கு 5 சதங்கள் எல்லாம் அடித்து பரபரக்க வைத்தார்.

முதலாவது அவர் கப்டன்ஸியின் உச்சம்தொட்ட 2003 உலகக்கோப்பை. இந்த உலகக்கோப்பையில் இந்தியாவுக்கு எதிரான அந்த இறுதிப்போட்டியில் அவர் ஆடிய ஆட்டம் இன்றுவரை கண்களுக்குள் கலவரம் செய்கிறது. தென்னாபிரிக்காவின் ஜோஹனஸ்பெர்க்கில், வாண்டரர்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் மார்ச் 23 ஆம் திகதி நடைபெற்றது அந்த இறுதிப்போட்டி. ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் அன்று மன அழுத்தத்தை வரவைத்தார் ரிக்கி பொண்டிங்.

“நாங்களே இப்பதான் ரொம்ப வருடம் கழித்து பைனல்ஸ்’க்கெல்லாம் வந்திருக்கோம். ஆனால் கொஞ்சம் கூட கருணையே இல்லாமல் இந்த அடி அடிக்கிறானே” என இந்தியர்களைப் புலம்ப வைத்தது பொண்டிங்கின் ஆட்டம். ஜாகீர்கான், ஶ்ரீநாத், ஆசிஷ் நெஹ்ரா, ஹர்பஜன் சிங் மட்டுமல்லாது தினேஷ் மோங்கியா வரை அன்று மட்டும் 8 பேர் பௌலிங் போட்டார்கள். ஆனால், பொண்டிங்கை ஒன்றுமே செய்ய முடியவில்லை. முதலில் கொஞ்சம் சாதுவாகத்தான் ஆடினார் பொண்டிங். 74 பந்துகளுக்கு 50 ஓட்டங்கள்தான் அடித்தார்.

அடுத்த 50 ஓட்டங்களை வெறும் 29 பந்துகளில் அடித்து சதம் அடித்தவர். மொத்தமாக 140ஓட்டங்கள் அடித்து நொட் அவுட் பட்ஸ்மனாக நின்றுகொண்டிருந்தார். கடைசி 5 ஓவர்களில் மட்டும் அவுஸ்திரேலியா அடித்தது 64 ஓட்டங்கள். இதில் ரிக்கி பொண்டிங்கின் கணக்கு மட்டும் 42 ஓட்டங்கள். இந்த இன்னிங்ஸ் மூலம் மனதளவில் இந்திய வீரர்களின் நம்பிக்கையை மொத்தமாக சிதைத்து விட்டார் பொண்டிங்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டி அது. இரண்டு உலகத்தரமான அணிகள், இரண்டு உலகத்தரமான கப்டன்கள். முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் கிராம் ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்கா வெற்றிபெற, அடுத்த இரண்டு போட்டிகளில் கப்டன் ரிக்கி பொண்டிங்கின் அணிவெற்றி பெற்று தொடரை 2-2 என சமநிலைக்குக் கொண்டு வந்தது.

ஐந்தாவது போட்டிக்காக உலகமே பரபரப்புடன் காத்திருக்கிறது.

முதலில் பட்டிங் ஆடிய அவுஸ்திரேலியாவின் ஓப்பனர்கள் ஆடம் கில்கிறிஸ்ட், சைமன் கேட்டிச் இருவருமே சிறப்பாக ஆட அவுஸ்திரேலியா 15 ஓவர்களில் 90 ஓட்டங்களைக் கடந்தது. அவுஸ்திரேலியாவின் ஸ்கோர் கார்ட் 97 ஓட்டங்களைக் காட்டியபோது கில்கிறிஸ்ட் அவுட் வந்தார் பொண்டிங். உலகின் சிறந்த பௌலிங் அட்டாக்கைக் கொண்ட அணி தென்னாபிரிக்கா. ஆனால், அந்த அணியின் பௌலிங்கையே அன்று ஒன்றும் இல்லாமல் ஆக்கினார். காலிஸின் 6 ஓவர்களில் மட்டும் 70 ஓட்டங்கள் விழுந்தது.

மொத்தம் 105 பந்துகளில் 164 ஓட்டங்கள். ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக 400 ஓட்டங்களைத் தொட்ட அணியாக, ஒருநாள் கிரிக்கெட்டின் அதிகபட்ச ஸ்கோராக 434 ஓட்டங்களைப் பதிவு செய்தது அவுஸ்திரேலியா.

434 ஓட்டங்களை எல்லாம் சேஸ் செய்ய முடியுமா? என டிவி முன் உட்கார்ந்திருந்த என்னைப் போன்றவர்களுக்கு கிப்ஸ் எனும் அசுரனின் ஆட்டம் உற்சாகத்தில் உருள வைத்தது. பொண்டிங்கின் இன்னிங்ஸை மறக்கடித்தார் கிப்ஸ். தென்னாபிரிக்கா சேஸ் தொடங்கியதில் இருந்தே சிக்ஸர்களும் பவுண்டரிகளும் பறக்க ஆரம்பித்தன. கப்டன் கிராம் ஸ்மித்துடன் சேர்ந்து கிப்ஸ் ஆடிய ஆட்டம் பொண்டிங்கின் வயிற்றுக்குள் பாறாங்கல்லை இறக்கியிருக்கும். கிப்ஸ் 175 ஓட்டங்கள் அடிக்க, ஸ்மித் 90 ஓட்டங்கள் அடிக்க, இறுதியில் மார்க் பவுச்சர் 50 ஓட்டங்கள் அடித்து, இறுதிவரை களத்தில் நின்று 434 ஓட்டங்களை சேஸ் செய்து முடித்தார். ஒருநாள் கிரிக்கெட்டில் அதிகபட்ச ஓட்டங்களாக தென்னாபிரிக்காவின் 438 ஓட்டங்கள் உலகசாதனை படைத்தது. ஒரேநாளில் உலக சாதனைகள் மாறிக்கொண்டேயிருந்த ஒரே ஆட்டம் இதுதான். ரிக்கி பொண்டிங் வாழ்நாளுக்கும் மறக்க முடியாத போட்டி இது.

தொடர் வெற்றிகளைப் பார்த்துக்கொண்டிருந்த ரிக்கி பொண்டிங்கின் கரியரில் 2008 இற்கு மேல் புயல் வீச ஆரம்பித்தது. அவருக்கு பக்கபலமாக இருந்த பல வீரர்கள் அணியில் இருந்து ஓய்வுபெற்று வெளியேற தோல்விகள் பொண்டிங்கை துரத்த ஆரம்பித்தன. குறிப்பாக ஆஷஸ் தொடரில் அவமானகரத் தோல்விகளைத் தழுவ ஆரம்பித்தது பொண்டிங்கின் அவுஸ்திரேலியா. இறுதியில் இந்தியாவுக்கு எதிரான 2011 உலகக்கோப்பை காலிறுதிப்போட்டிக்குப் பிறகு ஒருநாள் கப்டன்ஸியில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தார்.

பொண்டிங் பல சாதனைகள் படைத்திருந்தாலும் அவருக்கு கடைசிவரை மன உறுத்தலாகவே இருந்தது இந்தியாதான். இந்திய மைதானங்களில் இந்தியாவுக்கு எதிராக அவர் பெரிதாக ஓட்டங்கள் அடித்ததேயில்லை. ஹர்பஜன் அவரைப் பலமுறை சுழலில் சிக்க வைத்து அவுட் ஆக்கியிருக்கிறார். இந்தியாவில் இந்தியாவுக்கு எதிராக அவர் அடித்த ஒரே ஒருநாள் சதமும் உலகக்கோப்பையில் இருந்து வெளியேறவே வைத்ததில் பொண்டிங் ரொம்பவே அப்செட். எவ்வளவு பெரிய ஜாம்பவனாக இருந்தாலும் வெளியேற்றம் என்பது அவ்வளவு சுமுகமானதாக இருக்காது என்பார்கள். ஃபார்ம் இழந்து, அவமானங்களுக்குப்பிறகே வெளியேறினார் ரிக்கி பொண்டிங்.

# தலையணை தந்திரம்



தூக்கம் என்பது சரும, கூந்தல் அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும் அடிப்படை என்பதை எல்லோரும் அறிவோம். ஆனால், தூங்கும் போது நாம் பயன்படுத்தும் தலையணை உறைகூட அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும் காரணமாகும் என்பதை எத்தனை பேர் அறிவீர்கள்? தலையணைக்கு சில்க், சாட்டின் மாதிரியான வழவழப்பான துணியாலான உறையைப் பயன்படுத்துவதன் மூலம் இது சாத்தியம்.

சில்க் உறையானது சருமத்தில் சுருக்கங்கள் விழாமல் தடுக்கும். சில்க் துணிகளில் உராய்வுத் தன்மை குறைவு. சருமம் அந்தத் துணியின் மீது படும் போது அது சருமத்தை எந்த வகையிலும் உறுத்துவதில்லை.

சாதாரண தலையணை உறையில் சருமம் படும்போது ஏற்படும் உராய்வால் சிறு சிறு சுருக்கங்கள் ஏற்படும். அது நாளடைவில் இன்னும் ஆழமாகி, நிரந்தரமாகும். சில்க் உறையில் இது தவிர்க்கப்படுகிறது.

இதே விடயம் கூந்தலுக்கும் பொருந்தும்.


சில்க் உறையில் தலை வைத்துப்படுத்து உறங்கிவிட்டு, காலையில் எழுந்திருக்கும் போது முடி சிக்கு இன்றி பறந்து, வறண்டு காணப்படாது. சுருட்டைமுடியுள்ள பெண்களுக்கு காலையில் தூங்கி எழுந்திருக்கும் போது கூந்தலானது கட்டுக்கடங்காமல் பறந்து, விரிந்திருப்பது போல உணர்வார்கள்.

அவர்களுக்கு சில்க் தலையணை உறை பேருதவியாக இருக்கும். கூந்தலிலுள்ள அதிகப்படியான எண்ணெய்ப்பசை, அழுக்கு போன்றவையும், சருமத்தில் தடவும் நைட் க்ரீம் போன்றவையும் சில்க் உறையில் படியாது.

கொட்டன் உறையில் படியும். அதனால் பக்றீரியா தொற்று ஏற்படும்.

சில்க் உறை போடப்பட்ட தலையணையில் படுத்து உறங்கும் போது சருமம் மற்றும் கூந்தலின் இயற்கையான நீர்ச்சத்தும் தக்க வைக்கப்படும். இதனால் சருமம் மற்றும் கூந்தலின் வறட்சி தவிர்க்கப்படும்.

கொட்டன் தலையணை பயன்படுத்துவோரைவிட, சில்க் தலையணை உறை பயன்படுத்துவோருக்கு பருக்கள் வருவதும் பரவுவதும் தவிர்க்கப்படும்.



இந்திய மண்ணின் உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஓர் உன்னத மனிதரின் மறைவு தமிழகத்திற்கு பேரிழப்பாகும்

- மிகக் கடுமையான உழைப்பு...
- சற்றும் அசராத ஆற்றல்...
- தடுமாறா கொள்கைப் பிடிப்பு...
- ஒரு நாளும் குன்றா சமூக நலம்...
- தீர்வுகளோடு பிரச்சினைகளை அணுகும் சாதுர்யம்...
- எல்லோரையும் அரவணைக்கும் மனிதநேயம்...
- சற்றும் பெருமை பாராட்டாத எளிமை...
- கறுப்பு வெள்ளை கலர் ரீவிவரை மக்களின் மனதில் இடம் பிடித்த பெருமை
- அலட்டிக் கொள்ளாத அமைதி ...
- கைப்பணத்தை வளர்ச்சிப் பணிகளுக்காக வழங்கிய பெருந்தன்மை...
- ஒரு நல்ல மனிதரை இழந்து தவிக்கிறது தமிழகம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2100


**யது**

தலை கீழாய்
நின்று தண்ணீர்
கூட அருந்திடலாம்.!!
ஆனால்
தலைக்கணம் பிடித்தோரை
மாற்றத்தான்
முடிவதில்லை..



**கயா**

பிடிக்கும் என்பதை வரிசைப்படுத்தினால்
பிடிக்காதவைகள் காணாமல்போகும்...



**பிரியா**

கோபங்கள் புன்னகையிலோ,
மன்னிப்பிலோ
கரைந்து கொண்டு
தான் இருக்கின்றன..
அவை கரைவதற்கான
வாய்ப்புகள் தான் எளிதாக
கிடைப்பதில்லை..

**சுதீஸ்**

குள்ளநரிகளுக்கு மத்தியில் வாழும் போது
சிலநேரங்களில் கர்ஜனை செய்து தான்
சிங்கமென நிரூபிக்க வேண்டியுள்ளது..!!



**ராஜன்**

விலகி செல்ல முடிவெடுத்தவர்களுக்கு
'பெரிதாய் ஏதும் காரணங்கள்"
தேவைப்படுவதில்லை, எதை
பேசினாலும் 'காரணமாய் மாற்றிடும்"
வல்லமையுடன் தான் இருப்பார்கள்..!
யதார்த்தம்

**ரிஷி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 219

## நல்ல தூக்கம் வருவதற்கு...

எனக்கு வயது 64 பெண். இரவில் தூக்கமில்லாமை பெருங்குறைபாடாக உள்ளது. இரவில் நித்திரை கொள்ளவராது என்பதற்காக பகலில் நித்திரை கொள்வதுமில்லை. மற்றவர்கள் மாதிரி விடியும் வரை படுக்கையில் படுக்காமல எழும்பி எழும்பி திரிந்து திரிந்து கதிரைகளில் இருந்து இருந்து இரவைக்கழிக்க வேண்டியுள்ளது. இவ்வியாதி 5, 6 வருடங்களாகத் தொடர்கின்றது. பிரசுருக்கும் மருந்துகள் பாவிக்கின்றேன். தினமும் இரவு நல்ல தூக்கம் வருவதற்கு ஏதேனும் பரிகாரம் தங்களிடம் எதிர்பார்க்கின்றேன்.

உங்களுக்கு நீண்டகாலமாக நித்திரைக் குழப்பம் இருப்பதால் நீங்கள் அதற்கான காரணிகளைக் கண்டறிந்து நீக்குவதுடன். நித்திரைச் சுகாதாரத்தையும் பேண வேண்டும். இவற்றிற்கும் மேலதிகமாக உங்களுக்கு நித்திரைக் குழப்பம் ஏற்படின் உளநல வைத்தியர் ஒருவரை நேரடியாக அணுகி ஆலோசனை பெற்றுக் கொள்ளுங்கள்.

- உங்கள் குருதிக் குளுக்கோஸ் மட்டமும் குருதியமுக்கமும் நியம மட்டத்தில் பேணப்படுகின்றது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- நித்திரை சுகாதாரத்தைப் பேணுங்கள் **(Sleep hygiene)**
- உங்கள இரவுணவை வேளையுடன் உண்ணுங்கள்.
- தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். (20 நிமிடம். 4-5 மணிநேரம் அல்லது நித்திரைக்கு முன்னதாக)
- சுடுநீர்க் குளியலின் பின் தூங்கச் செல்லுங்கள்.
- நித்திரையைத் திணித்து மேற்கொள்ளாதீர்கள். தூக்கம் வரும் போதே படுக்கைக்குச் செல்லுங்கள்.
- வயதிற்கேற்ற வகையிலேயே தூங்கும் நேரம் காணப்படும் என்பதால் தினமும் நித்திரைக்குச் செல்லுகின்ற. நித்திரையால் எழுகின்ற நேரங்களை ஒழுங்காக வகுத்து கடைப்பிடியுங்கள்.
- நித்திரைக்குச் செல்ல முன் அதிக நீர் அருந்துவதைத் தவிருங்கள். இதன் மூலம் இரவில் சிறுநீர் கழிப்பதற்காக நித்திரையில் எழுவதை தவிர்க்க முடியும்.
- கபீன் உடைய பானங்களை **(caffeinated beverages)** கோப்பி. தேநீர். மென்பானங்கள் என்பவற்றை மாலை நேரத்தின் பின்னர் **(6PM)** அருந்தாதீர்கள்.
- பசியுடன் நித்திரைக்குச் செல்லாதீர்கள்.
- நித்திரைக்குச் செல்ல முன் இயன்றளவு உங்கள் கவலைகளைத் தீர்க்க முயலுங்கள். அன்றையநாள் சம்பவங்களை தினக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- மதுபானம் அருந்துதல். புகைப்பிடித்தலைத் தவிருங்கள்.
- பகலில் அதிகம் தூங்குவதைத் தவிருங்கள்.
- உங்கள் படுக்கையறைச் சூழலை உங்களுக்கு ஏற்றதாக மாற்றியமையுங்கள் (தேவையான அளவு காற்றோட்டம். ஏற்ற அறை வெப்பநிலை. மென் வெளிச்சம். சத்தமற்ற / உங்களுக்கு விரும்பிய மெல்லிசை. உங்களுக்கு ஏற்ற அறை நிறம். உங்களுக்கு ஏற்ற போர்வை. உங்களுக்கு ஏற்ற



மெத்தை... போன்றன)
- படுக்கையை நித்திரைக்காக மட்டும் பயன்படுத்துங்கள். (படுக்கையிலிருந்து தொலைக்காட்சி பார்த்தல் உணவுண்ணல் போன்றவற்றைத் தவிருங்கள்)
- படுக்கையறையைத் தூய்மையாக வைத்திருங்கள்.
- உங்களுக்கு பிடித்த கதைப் புத்தகம். மன அமைதி தரவல்ல நூல்களை நித்திரைக்கு செல்ல முன் படிக்கலாம்.
- மன அமைதியை ஏற்படுத்துங்கள்

நான் 32 வயதுடைய பெண் எனது நிறை **75Kg** உயரம் **157cm.** எனக்கு முடி உதிர்தல் பிரச்சினைக்காக வைத்தியரிடம் ஆலோசனை பெற்ற போது **FBS -101.9 mg/dl** ஆக இருந்தது. அதனை ஒரு வைத்தியர் நீரிழிவு இல்லை எனவும் இன்னொரு வைத்தியர் நீரிழிவு முன்நிலை **(prediabetic)** எனவும் கூறினர். நீரிழிவு தொடர்பான எனது உடல் நிலையைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

உங்களது உடற்திணிவு சுட்டி **30.42 Kgm$^{-2}$**.சாதாரணமான உடற்திணிவுச்சுட்டி **18-23Kgm$^{-2}$)** என்பதால் உங்களது உடல் நிறையை நியம மட்டத்தில் பேணுவது அவசிய மானதாகும். இரு வைத்தியர்களும் சரியாகத்தான் கூறியிருக்கிறார்கள் **Pre diabetic** முன்நிலை என்பது **FBS** பெறுமானம் **100 -126 mg/dl** இருக்கும் நிலையாகும். நீங்கள் உங்களது உடல் நிறையை நியம மட்டத்தில் பேணுவதனூடாக அதாவது உணவுக் கட்டுப்பாடு. போதிய உடற்பயிற்சி என்பவற்றின் மூலம் உங்களுக்கு எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுவதையும் நீரிழிவினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் தாமதிக்க முடியும். நீங்கள் பேண வேண்டிய உடல் நிறை **56Kg** ஆகும்.

எனக்கு வயது 30 நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளேன். எனது உடல் மெலிவடைந்து போகின்றது நான் எவ்வளவு காலம் வாழலாம்?

நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது என்பதற்காக மனமுடைந்து போக வேண்டிய அவசியமில்லை. இளவயதில் நீரிழிவு ஏற்படுவது தற்போது பொதுவான ஒருவிடயமே. இதனைப் பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும். இதனால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கவும் பலவிதமான நல்ல மருத்துவ முறைகள் கண்டறிப்பட்டுள்ளன. சரியான மருத்துவ ஆலோசனையைக் கடைப்பிடித்து இளவயதில் கண்டறியப்பட்ட பல நோயாளர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றார்கள். எனவே நீங்களும் மன ஊக்கத்துடன். உங்களின் வைத்திய ஆலோசனைகளுக்கமைய நடந்து கொண்டால் பாரதூரமான தாக்கங்கள் ஏதுமின்றி நீண்டகாலம் சாதாரண வாழ்க்கை வாழ முடியும்.

எனக்கு வயது 31. எனது இரண்டு விதைகளும் விதைப்பையினுள் இருக்கின்றது. ஆனால் ஒன்று உயரமானதாகவும் மற்றையது பதிவாகவும் உள்ளது. இது ஒரு நோயா? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயரவித்தியாசம் என்பது இயற்கையானது. இது நோயின் அறிகுறி அல்ல. உங்களுடைய விதைப்பையில் ஒரு விதை மாத்திரமே இருந்து மற்றையதை அடையாளப்படுத்த முடியாமல் இருந்தால் உடனடியாக நீங்கள் வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும். விதையானது விதைப்பையினுள் இறங்காது வயிற்றினுள்ளேயே காணப்படின் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் உங்கள் விதையானது விதைப்பையினுள் இறங்கியிருப்பதால் இது பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை.

எனக்கு உடம்பு முழுவதும் அடிக்கடி கடித்து. தடித்து பின் தானாக மறைகின்றது.தோலில் நிரந்தரமான எந்த மாற்றமும் இல்லை. இந்த நிலைமை ஆறு மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகின்றது. இந்த நிலைமைக்கு காரணம் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்.

இந்நிலைமையானது ஒவ்வாமை காரணமாக ஏற்படுகின்றது. இவ் ஒவ்வாமை நிலைமையானது சில வகை உணவுகள். சுற்றாடலில் காணப்படுகின்ற ஒவ்வாமையை ஏற்படுத்துகின்ற சில பதார்த்தங்களைத் தொடுவதன் மூலமும். சுவாசிப்பதன் மூலமும் இந்நிலைமை ஏற்படலாம். எனவே இந்நிலைமையைத் தோற்றுவிக்கும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றை தவிர்க்க வேண்டும். குறிப்பிட்ட சிலரில் இந்நிலைமையானது எந்தவிதமான காரணங்களும் கண்டறியப்படாமலும் ஏற்படலாம். இதனை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வாமையைத் தடுக்கும் சில மாத்திரைகள் பாவிக்கவேண்டி ஏற்படலாம். சில வேளைகளில் சில நோய்களின் அறிகுறிகளாகக் கூட மேற்கூறிய நிலைமை காணப்படலாம். உங்களுக்கு இந்த நிலைமையானது 6 மாதங்களுக்கு மேலாக நீடிப்பதால் வைத்தியர் ஒருவரை நாடி சில சோதனைகளும். அறிவுரைகளும் சிகிச்சை முறைகளும் பெற்றுக் கொள்வது நல்லது.

Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்